
கல்கி



Kalki 1-2-1970 40 காசு



இவன் தான் கிரீஷ்
மூன்று மாதக் குழந்தை.
பிறந்த முதல்
வாரத்திலிருந்து
இவன் அமுல்ஸ்ப்ரே
சாப்பிட்டு வருகிறான்.
இவனது வளர்ச்சி
வியக்கும்படியாக
இருக்கிறது.

இப்பொழுது அவனைப் பாருங்கள்!

"அமுல்ஸ்ப்ரே சாப்பிட்டு உயிர்த்துடிப்புடன் விளங்கும் இவன், நாள்தோறும் அறிவு வளர்ச்சியும் பெற்று வருகிறான்" என்கிறார், 13 மாதக் குழந்தையான கிரீஷின் தந்தை திரு. திலீப் சௌபல்.

உங்கள் குழந்தையின் எடை, பிறந்த ஆறு மாதங்களுக்குள் இரட்டிப்பாகவும், ஒரு வருடத்துக்குள் மும்மடங்காகவும் அதிகரிக்க வேண்டும். எனவேதான் அமுல்ஸ்ப்ரே, எளிதில் ஜீரணிக்கக் கூடிய சரிவிகித உணவாக அமைக்கப்பட்டுள்ளது. இது குழந்தையின் உடல் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமான புரதச்சத்தை அதிகமாக கொண்டிருக்கிறது.

குழந்தை உணவுகள் தயாரிக்க அமெரிக்காவில் உபயோகிக்கப்படும் உன்னதமான ஸ்ப்ரே-டிரையிங் செய்முறையினால் ஆக்கம்பெற்றது அது.

ஆயிரக்கணக்கான தாய்மார்கள், தங்கள் குழந்தைகள் பிறந்த முதல் வாரத்திலிருந்தே அவற்றிற்குத் தாய்ப் பாலுக்குப் பதிலாகவோ அல்லது உபரி உணவாகவோ அமுல்ஸ்ப்ரே புகட்டி வருகிறார்கள். அதனால்தான், தயாரிக்கத் தொடங்கிய இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே அமுல்ஸ்ப்ரே இந்தியாவிலேயே உச்ச விற்பனையுள்ள குழந்தை உணவாகிவிட்டது.




அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது!


சௌமிய, தை 19 — 1970, பிப்ரவரி 1

கல்கி
பொருளடக்கம்

கல்கியில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



ஆளும் காங்கிரஸ் கட்சியின்
தேர்தல் சின்னத்துக்கு ஒரு யோசனே!



எதிர் காலம்
இப்படி உருவாகுமா?



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 ✻ இதழ் 27

அபாயம்! உஷார்!

இந்தியாவின் புகழ்பெற்ற 'கோஷ்டி சேராக் கொள்கை' சீர்குலைந்து கிடக்கிறது. இம்மாதிரி விஷயங்களில் நம் மனத்தில் அந்தரங்கமாக என்ன நினைக்கிறேமோ, அதைவிட பிற நாடுகள் நம்மை எப்படி மதிக்கின்றன என்பது தான் அதிக முக்கியமானது. ஸிட்னி ஷான்பர்க், நியூயார்க் டைம்ஸில் பின்வருமாறு வருணித்துள்ளார்:

> ''இந்தியாவின் கோஷ்டி சேராக் கொள்கை இப்போது சோவியத்திற்குச் சாதகம், மேலை நாடுகளுக்குப் பாதகம் என்று பொருள் படைத்ததாகி விட்டது. இதற்கு ஓர் உதாரணம்: சென்ற ஆண்டு பார்லிமெண்ட் மெம்பர்கள் நிர்ப்பந்தித்தபோதிலும் செக்கோஸ்லோவேகியா மீது ருஷ்யா படையெடுத்ததைக் கண்டிக்க ஸ்ரீமதி காந்தி மறுத்துவிட்டார். சமீப காலமாகக் கிழக்கு ஜெர்மனியுடனும் வட வியட்நாமுடனும் முழு ராஜ தந்திர உறவை ஏற்படுத்திக் கொள்ளும் விஷயமாக இந்தியா பேசி வருகிறது. தென் வியட்நாமைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் விடுதலை அணியின் தூது கோஷ்டி ஒன்று சர்க்காரது அழைப்பின்பேரில் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறது.''

அமெரிக்காவுடன் நேசப் பிணைப்பு ஏற்படுத்திக் கொள்வதை விட ருஷ்யாவுடன் நெருக்கத்தை நமது யூனியன் சர்க்கார் விரும்புவானேன்? இந்திய மக்களின் க்ஷேமத்திலும் சுதந்திரத்திலும் அக்கறை கொண்ட எவராலும் இதன் நியாயத்தை ஏற்ப முடியாது. ருஷ்யாவுடன் வளரும் நெருக்கம் எங்கே கொண்டு போய்விடும்? சோவியத் ஆதிக்க மண்டலத்தில் இந்தியா வளைய வர வேண்டிய பாதையில்தான் அது கொண்டு போய்விடும். செக்கோஸ்லோவேகியா, ஹங்கேரி ஆகியவை நடத்தப்பட்டுள்ள விதத்தை அலட்சியம் செய்வதற்கில்லை. இதைக் கருதாது, அமெரிக்காவுடன் மாற்ற முடியாத அளவுக்கு நாம் உறவை முறித்துக்கொண்டு விட்டதாகவே தோன்றுகிறது.

தொழில் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு என்னவெல்லாம் நிகழக்கூடும் என்பதற்குப் போதிய அறிகுறிகள் ஏற்கனவே புலனாகி விட்டன. பிரதமர் தமது மனத்தில் என்ன நினைத்துக்கொண்டிருந்தாலும் சரி, அவரது இன்றைய நிலைமை தெளிவாகிவிட்டது. சூழ்ச்சி செய்யும் கம்யூனிஸ்டுகள், மன முதிர்ச்சியடையாத தீவிரவாதிகள் ஆகியோரின் பிடியில் கைதியாக அவர் சிக்குண்டிருக்கிறார். யானையின் கழுத்தின் மீது அமர்ந்து கொண்டு அதை அதிகாரம் செய்யும் மாவுத்தனைப் போல, சர்க்கார் செய்ய வேண்டியது என்ன என்பதை ஒரு சின்னஞ் சிறு குழு கட்டளையிடுகின்ற விபரீதத்தை இன்று காண்கிறோம். தாம் தொடர்ந்து பதவியில் இருப்பதற்குத் தேவைப்படும் அற்ப ஆதரவை அளிப்பவர்களுக்கு அவர் கீழ்ப்படிய வேண்டிய நிர்ப்பந்த நிலையில்தான் இருந்து வருவார். கட்டுப்படுத்த முடியாத ஆசைகளால் உந்தப்பட்டுள்ள பிரதமர் தம்மைச் சார்ந்துள்ள மாபெரும் பொறுப்பைப் பொருத்தமற்றது என்று நிராகரிக்கும் போது அவர் சத்தியத்தில் உறுதியுடன் இருக்க முடியாது. சத்தியத்தைக் காட்டிலும் சமயோசித சாதுரியத்தின் வழியில்தான் அவர் செல்வார்.

இந்தியப் பொருளாதாரத்தின் எதிர்காலம் எவ்வாறிருக்கும் என்பது நாம் அறிந்ததே. பிரத்தியட்ச நிலைக்கு ஏற்பப் பணியாற்றாமல் பிரசார கோஷங்களை எழுப்புவது மலிந்து கிடக்கும். இமய மலையாக வளர்ந்து வரும் கடன் பளுவினின்று விடுபட வழியிராது. உற்பத்தியைப் பெருக்கி அது தொடர்ந்து வளர வழி செய்யாமல் சோஷலிஸ பாணியைப் பகட்டுக் காட்சியாகக் காட்டிக் கொண்டிருப்பார்கள்.

அதிகாரிகள் மேலும் மேலும் அரசியல் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்களாகி, உசிதப்படி பணியாற்றும் தன்மையை இழந்து விடுவர். நிர்வாகத் திறமையும் வேகமாகச் சீரழிந்து விடும்.

ஜனநாயகத்தில் வாக்காளர்கள் விஷயமறியாது சொற்சிலம்பத்துக்கு இரையானபோதிலும் மந்திரிகளைத் தக்கவாறு எச்சரித்து, தமது திடமான கருத்துக்களை எடுத்துச் சொல்லும் நிர்வாக அதிகாரிகள் இருப்பதால்தான் ஓரளவு இன்றைய நிலைமையைச் சகித்துக் கொண்டிருக்க முடிகிறது. அதிகாரிகள் தருகின்ற இந்த உதவியை 'மக்களின் ஆட்சி' என்ற பெயரால் வேண்டுமென்றே உதறி எறிகின்ற நிலைமை வருமாயின், சீர்கெட்ட ஆட்சியும் குழப்ப நிலையுந்தான் மிஞ்சும். பல கட்சிகள் கொண்ட ஜனநாயகம் ஒழுங்காக, திறம்பட இயங்க வேண்டுமானால் அனுபவமுள்ள அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் ஆட்சி செலுத்துகின்ற அடக்கமான பிரிட்டிஷ் ஏற்பாட்டையே தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

நம்மை எதிர்நோக்கியுள்ள பொறுப்பு அவசரமானது. உண்மையில் சுதந்திர மக்களாக நாம் வாழ விரும்பினால், உஷாராக இருந்து அபாயங்களை இப்பொழுதே அகற்ற வேண்டும். இப்போதைய பிரதம மந்திரியை மாற்றி, இன்னும் சிறந்தவரும், நம்பிக்கைக்குப் பாத்திரமானவருமான வேறு ஒருவரை அந்தப்பதவியில் அமர்த்துவதற்கு வாய்ப்பு இப்பொழுது கிடைத்திருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல், கைநழுவ விட்டு அசட்டையாக இருந்தோமானால், தேசத்தின் எதிர்காலம் இருள் படர்ந்ததாக இருக்கும்.

நாம் முடிவு செய்தாக வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். நாம் தொடர்ந்து சுதந்திரக் குடிமக்களாக வாழ விரும்புகிறோமா அல்லது மன முதிர்ச்சி இல்லாத ஒரு சர்வாதிகாரத்தின் கீழ் அடிமை வாழ்க்கை கிட்டும்படி விட்டுவிடுவோமா? இதை நாம் இப்பொழுதே முடிவு செய்ய வேண்டும்.

''நான் அரசியல் வாதியல்ல; எனவே இவ்விஷயமாக நான் கவலைப்பட வேண்டியதில்லை; என் சொந்த விஷயங்களைக் கவனித்துக் கொள்வேன்; அரசியலை ராஜீயவாதிகளிடமே விட்டுவிடுவேன்'' என்று இப்போது யாருமே நினைக்கக் கூடாது. இப்பொழுது உருவாகி வருகின்ற சர்வாதிகாரத்தின் கீழ் சொந்த விஷயங்களே பொது விவகாரங்களாகி விடுகின்றன. எனவே நம் நாட்டில் எத்தகைய ஆட்சி முறை இருக்க வேண்டும் என்பதை நாம் இப்பொழுதே முடிவு செய்தாக வேண்டும். இந்தக் கடமையினின்று எவரும் தப்ப முடியாது. இது மிக மிக முக்கியமான பிரச்னை. இதில் அலட்சியம் காட்டுவது நமது சுதந்திரத்துக்குப் பேரபாயத்தை விளைவிக்கும். நமது அலட்சியத்தால் எழக்கூடிய அபாயம் கம்யூனிஸ்ட் சர்வாதிகாரத்தை ஒரேயடியாக ஏற்றுக்கொள்வதால் விளையக்கூடிய அபாயத்துக்குக் குறைந்ததல்ல.

(''ஸ்வராஜ்யா ''வில் ராஜாஜி எழுதியது)

ராஜாஜியின் கருத்துக்கள்

ஸ்ரீமதி இந்திராகாந்தியைப் பதவியிலிருந்து இறக்கி, அவரது இடத்தில் கம்யூனிஸ்ட்களுக்கும் தீவிரவாதிகளுக்கும் மசிந்து கொடுக்காத ஒரு நம்பகமான பிரதமரை அமர்த்த வேண்டும் என்பதற்கான அவசர காரணங்களை என்னால் இயன்ற அளவுக்குச் சுருக்கமாகவும் தெளிவாகவும் இவ்விதழ் தலையங்கக் கட்டுரையில் கொடுத்திருக்கிறேன்.

ஸ்ரீ நிஜலிங்கப்பாவின் கட்சிக்கே காங்கிரஸ் என்கிற உரிமை உண்டு என்பதை நான் ஆமோதிப்பதால், சில பத்திரிகைகள் இதை ஸ்ரீ காமராஜருக்கும் நிஜலிங்கப்பா கோஷ்டிக்கும் உள்ள தொடர்போடு இணைத்துப் பார்த்து, இதனால் தமிழகத்தில் நான் தி.மு.க.வுக்குத் தருகிற ஆதரவு பாதிக்கப்படும் என ஜோஸ்யம் சொல்கின்றன. இது நிலவரத்தை மிகத் தவறாக மதிப்பீடு செய்வதாகும் என்று திட்டவட்டமாகக் கூறுகிறேன். தி.மு.க.வுக்கு என் ஆதரவு குன்றாமல் நீடிக்கும். தமிழக மக்களின் நலனை நான் எப்படி நோக்குகிறேன் என்பதற்கும் இவ்வித நிலவரங்களுக்கும் சம்பந்தமில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், தி. மு. க.வைக் காங்கிரஸால் அகற்ற முடியும் என்று யாருமே கவலைப்படத் தேவையில்லை. தி. மு.க.வுக்கு நிதி கோரி திரு கருணாநிதி விடுத்துள்ள வேண்டுகோளில், தி.மு.க.வை அகற்றத் திரு காமராஜ் சங்கற்பம் பூண்டிருக்கிறார் என்றும், இதற்காகப் புதுப் பலத்துடன் அவர் முயலுவார் என்றும் சொல்லியிருப்பது வாஸ்தவம். பிரசாரத்துக்கு இவ்வாறு சொல்ல வேண்டியது அவசியமே. ஆயினும், தமிழகத்தில் தி. மு. கழகம் ஆளும் பொறுப்பை இழக்கக் கூடிய சாத்தியக்கூறு ஏதும் இல்லை.

காங்கிரஸ் கட்சி இந்திரா கோஷ்டியின் தலைமையின் கீழ் இருந்தாலும் சரி, மற்றக் கோஷ்டியின் தலைமையின் கீழ் இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாகவே இருந்தாக வேண்டும். தமிழ் நாட்டுக் காங்கிரஸின் ஆணவத்தை அழித்து அகற்று அடக்கமூட்ட வேண்டும் என்ற என் இலட்சியத்தை அடைந்தாயிற்று. இந்த வெற்றியைப் பயன்படுத்த நான் எதுவும் செய்ய மாட்டேன். இதே போல் தில்லியிலும் காங்கிரஸின் ஆணவத்தை அழித்தாக வேண்டும். தந்திரத் திட்டமிடும் கம்யூனிஸ்ட்களிடமும், முதிர்ச்சி இல்லாத தீவிரவாதிகளிடமும் சிறைக் கைதி போலுள்ள ஸ்ரீமதி இந்திரா காந்தியைப் பதவியிலிருந்து இறக்க வேண்டும். இவ்விஷயத்தில் நான் ஸிண்டிகேட்டை ஆதரிப்பதால், நான் தமிழகத்தில் தி.மு.க.வை இனி ஆதரிக்க மாட்டேன் என்று அர்த்தம் செய்து கொள்ளக் கூடாது.

மதுவிலக்கு விஷயமாகத் தி.மு.க. கொண்டுள்ள உறுதி மேலும் கெட்டிப்படும் என

வும், ஊட்டரிகளே அது ஒரு நாள் கைவிடும் எனவும் நம்பிக்கை இழக்காமல் எதிர்பார்த்து வருகிறேன். இவ்வாறே கம்யூனிஸ்ட் தொடர்பையும் தி.மு.க. விட்டு விடும் என நம்புகிறேன். தனக்கு எதிராக ஒரு கம்யூனிஸ்ட் வேட்பாளர் இல்லாமல் இருப்ப தில் பெறுகிற லாபம் மிகச் சிறிதே; ஏனெ னில், பொதுவாக மக்களுக்குக் கம்யூனிஸ்ட் கட்சியிடம் வெறுப்பே உள்ளது என்பதை தி. மு. க. அறியும்.

திரு காமராஜிடம் காணப்படும் ஒரே யோக்கியதாம்சம், அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் எல்லாப் பிரிவினரையும் உறுதி யாகவும், மாறுமனுறம் எதிர்த்து வருவதே யாகும். இந்த அநுகூலத்தைத் திரு காம ராஜுக்குத் தி.மு.க. தரக் கூடாது. கம்யூ னிஸ்ட் உதவியின்றியே எந்தப் பொதுத் தேர்தலிலும் தன்னால் வெற்றி பெற முடியும் என்று தி. மு. க. நிச்சயமாக நம்பலாம்.

★

இந்தியா — பாகிஸ்தான் பகைமை உணர்ச் சியால் ஆண்டுதோறும் பெருந் தொகை வீணாகிறது. பகைமையினால் யாருக்கும் சந் தோஷமில்லை. அதனால் வளருகின்ற செலவு எவ்வளவு என்பதை ராணுவ பட்ஜெட்டின் மூலம் ஒவ்வொரு வருடமும் தெரிந்து கொள்ளலாம். இது எங்கே கொண்டு போய் விடும் என்பதைச் சிந்தனையாளர் சுலபமாகப் புரிந்துகொள்வர். இந்த விஷயத்தில் ஏதாவ தொரு அற்புதம் நிகழ்ந்துதான் நமக்குத் துணை புரிய வேண்டும். 'அற்புதங்களில் நம் பிக்கை யில்லாதவன் பிரத்தியட்ச உணர்வு அற்றவன்' என்று சமீபத்தில் ஒருவர் 'நியூ யார்க் டைம்ஸ்' பத்திரிகையில் எழுதி இருந்தார். பக்தி சிரத்தையுடன் வேண்டிக் கொண்டால் அற்புதங்கள் நிகழக் கூடும். ''நண்பர்கள் பகைவர்கள் ஆகிய எல்லோரின் இதயங்களிலும் ஈசன் உறைகிறான். யந்திரம் போல எல்லோரையும் அவன் இயக்குகின் றான்'' என்று கீதை கூறுகிறது. அனைத்தையும் இயக்குகின்ற அந்த ஆண்டவனை வேண்டிக் கொள்ளுமாறு கீதை நம்மைப் பணிக்கிறது. அவ்வாறு பிரார்த்தித்தோமானால் அது பலிக்காமற் போகாது.

★

இயற்கையின் பௌதிக விதிகள் இறை வனின் மாற்றவொண்ணாத சட்டமாகும் என கீதை கூறுகிறது. இந்த விதிகளை கம்யூனிஸ அல்லது சோஷலிஸ கோட்பாடுகளுக்கு இணங்குமாறு செய்யச் சர்க்காராலும் முடி யாது; கலகக் கூட்டத்தாலும் முடியாது. ஏழைகளின் வாழ்நிலை உயர்வதற்கு முன்பு, சமூக ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதற்கு முன்பு, உற்பத்தியைப் பெருக்கியே ஆக வேண்டும் என்பது இப்படிப்பட்ட ஓர் இயற்கை விதி.

புதுதில்லியில் சமீபத்தில் கூடி அரசாங்க உடைமை பற்றி நிபுணர்கள் விவாதித்தனர். ''இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளா தாரப் பிரச்னையைச் சர்க்காரின் தொழி லாதிக்கத்தால் தீர்த்து வைக்க முடியாது'' என்பதே அவர்கள் கண்ட முடிவு.

வாதத்தைத் தொடக்கிவைத்த பேராசிரி யர் தர்ம நாராயணர், ''அறிவுக்குப் பொருந் திய பொருளாதார ரீதியில்தான் தொழிற் கொள்கை வகுக்கப்பட வேண்டும்; அரசியல் நோக்கில் அல்ல'' என்றார். இந்திய வர்த்தக சபைத் தலைவரான ஸ்ரீ ஏ. கே. ஜெயின், சர்க்காரின் வரி விதிப்பு மிகவும் உயர்ந்து விட்டபடியால் லாபம் மிகக் குறைந்து, உற் பத்தியாளருக்கு உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபாட்டையே குலைத்துவிட்டது என்று விளக்கினார். தனியாரின் ஏகபோக்கியத்தைப் போலவே ஆரோக்கியமான போட்டிக்கு இடம் தராத சர்க்காரின் முதலாளித்துவமும் மோசமாகும் என்றார் அவர். எந்தத் தொழி லையும் அரசுடைமை ஆக்குவதற்கு முன்பு அதன் சமூக விளைவுகளையும் நிதி வசதிகளை யும் பாரபட்சமின்றி ஆராய வேண்டும் என் றார் பேராசிரியர் ஆர். எஸ். நிகம்.


★

ஸ்ரீ மொரார்ஜி தேசாயும் ஸ்ரீ சஞ்சீவ ரெட் டியும் பேசிய கூட்டங்களில் நடந்த கலவரங் களைக் கண்டித்து சுதந்திரக் கட்சியையும் ஜனசங்கத்தையும் சேர்ந்த எட்டு பார்லி மெண்ட் அங்கத்தினர்கள் ஓர் அறிக்கை விடுத் துள்ளனர். புதிய காங்கிரஸின் தலைவர் களிடம் தன்னம்பிக்கை இல்லை என்பதைத் தான் இந்த மிரட்டல் உருட்டல் முயற்சிகள் நிரூபிக்கின்றன. தமது வலிமையில் நம்பிக்கை உள்ளவர்கள் பலாத்காரங்களில் இறங்குவ தில்லை.

★

''அஜாய் முகர்ஜியின் உத்தரவை பஸு மாற்றி விட்டார்'', ''தம் உத்தரவைப் போலீஸ் மீறியதாக மேற்கு வங்க முதல்வர் கூற்று'' — இப்படியெல்லாம் பத்திரிகைத் தலைப்புக்கள் காண்கின்றன. இதைப் பார்க் கும்போது இந்தியாவின் முக்கியத்வம் வாய்ந்த பகுதியான மேற்கு வங்கத்தில் இப்படிப்பட்ட குழப்ப நிலை நீடிப்பதை இன்னும் எவ்வளவு காலம்தான் தில்லி உள்துறை மந்திராலயம் பொறுத்துக் கொண்டிருக்குமோ என ஆச்சரியமா யிருக்கிறது.

சர்க்காரின் அமைப்பு எப்படி இருந்தாலும் சரி, நிர்வாகம் நன்கு நடந்தாக வேண்டும். இப்போது வங்கத்தில் உள்ளது போன்ற நிலையில் அதிகாரிகள் எப்படித் தொடர்ந்து பணியாற்ற முடியும்? வங்கத்தில் ஆட்சி நடத்துவதாகச் சொல்லிக் கொள்ளும் மந்திரி சபைக்குள் ஏற்பட்டுள்ள குழப்பத்தின் மிக மோசமான விளைவு அங்குள்ள அரசாங்க ஊழியர்களின் சேவை நெறி சிதைக்கப்பட் டிருப்பதேயாகும்.




திருவான்மியூர் திருப்பணி

சென்னை மாநகரம் மிகவும் புண்ணியம் செய்தது. வடக்கே கடற்கரையில் திருவொற்றியூர்; இடையே கடற்கரையில் திருஅல்லிக்கேணி; அதன் தென்பால் மயிலை; அதற்கும் தெற்கே கடலோரத்தில் 'திரையார் தெண் கடல் சூழ் திருவான்மியூர்' என்று ஆளுடைய பிள்ளைகள் பாடும் திருவான்மியூர். சென்னையின் வட எல்லையில் உள்ள திருவொற்றியூர் போலவே சென்னையின் தெற்கெல்லையில் உள்ள திருவான்மியூரும் சிறந்த தியாகராஜ க்ஷேத்திரம். இரு இடங்களிலும் திரிபுரசுந்தரி என்ற திவ்விய நாமத்தில் தேவி அருள் பாலிக்கிறாள்.

இந்தத் தலத்தில் வான்மீகி முனிவருக்கு ஈசன் தரிசனம் தந்ததாலேயே திருவான்மியூர் எனப் பெயர் பெற்றது. வடபால் சற்றே சாய்ந்து, பால் வண்ணமாகக் காணப்படும் லிங்கத் திருமேனிக்கு மருந்தீசர் என்பது திருநாமம். 'நீ மருத்துவரில் எல்லாம் சிறந்த மருத்துவன் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்' (பிஷக்தமம் த்வா பிஷஜாம் ச்ருணோமி) என்று வேத ரிஷியும், 'அருமருந்து ஒரு திருமருந்து' என்று தமிழக அடியாரும் போற்றிய கோலம். சம்சாரம் என்ற ரோகத்தையே தீர்க்கும் மருத்துவனாக ஐயன் எழுந்தருளியுள்ளான். அவன் நஞ்சுண்டபோது, அவனுக்கும் மருந்தாக விளங்கிய அம்பிகை, சொக்கநாயகியாகச் சொக்க வைக்கும் கம்பீர எழிலுடன் விளங்குகிறாள்.

அப்பர் பெருமானும் சம்பந்தரும் தேவாரப் பதிகம் பாடிப் போற்றிய பதி இது. மூர்த்தி விசேஷம், க்ஷேத்திர விசேஷம்போல் தீர்த்த விசேஷமும் படைத்தது. இறைவன் தமது திருச் சடையில் தரித்த கங்கையின் ஐந்து துளிகளை ஐந்து தீர்த்தங்களாக இங்கு சிந்திவிட்டார். காம நாசினி, பாப நாசினி, ஜன்ம நாசினி, ஞானதாயினி, மோக்ஷதாயினி என்ற அற்புதமான பெயர் படைத்த திருக்குளங்கள் அவையே. இவற்றில் படிக்கட்டுக்களுடனும் நீராழி மண்டபத்துடனும் கூடிய பாபநாசினி என்ற திவ்விய தீர்த்தம் தூர்ந்து, மேடிட்டு, தாய்க் கிணறுகள் யாவும் மறைந்து கட்டாந்தரையாகி விட்டது. அதனை மீண்டும் திருப்பணி செய்து நீர் நிலையாக்கி, மதில்சுவர் எடுத்து, சுற்றி மின்விளக்கிடக் கருதி திரு எம். வி. அருணாசலம் அவர்களின் தலைமையில் அன்பர்கள் முயன்று வருகின்றனர். இப் பணியில் பங்கு பற்ற விரும்புவோர், "பொருளாளர், திருவான்மியூர் திருக்குளத் திருப்பணிக் குழு, மருந்தீசர் ஆலயம், திருவான்மியூர், சென்னை - 41" என்ற முகவரிக்குப் பொருள் அனுப்பலாம்.



திவ்வியத் திருப்பணி இனிது நிறைவுற ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி தமது திவ்விய கானத்தை அர்ப்பணம் செய்கிறார். பிப்ரவரி எட்டாந் தேதி, சென்னை பாலர் அரங்கில், திருவான்மியூர் திருக்குளத் திருப்பணிக்காக ஸ்ரீமதி எம். எஸ்ஸின் உதவிக் கச்சேரி நடக்கிறது.

திருக்குளப் பணியில் ஈடுபட்டால் நமக்கு மட்டுமின்றி நம் வாரிசுகளுக்கும் உயர் நலங்கள் கூடும் என ஆகமங்கள் கூறுகின்றன. குலம் நலம் பெற குளம் எடுத்திடுவோம்!

மகாத்மா மறைந்த தினத்தை ஒட்டி வெளியாகும் இவ்விதழில், அவருக்கு அரும் பணி புரிந்து அவரது நூற்றாண்டில் அவரிடமே ஐக்கியமாகிவிட்ட புண்ணிய ஜீவனைப் பற்றி காந்திஜியின் மருமகளும், ராஜாஜியின் திருமகளுமான ஸ்ரீமதி லக்ஷ்மி தேவதாஸ் எழுதுகிறார்:

பாபுவின் பணியில் மனு

— லக்ஷ்மி தேவதாஸ் காந்தி —

மனு நம்மிடையே இன்று இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள மனம் மறுக்கிறது. மனு ஜயசுக்லால் காந்தியைப் பற்றி இறந்த காலத்தில் குறிப்பிட நேரும் என்று யார் எண்ணினார்கள்? அவளது தந்தையாரிடமிருந்து வந்திருக்கும் கறுப்புக் கோடிட்ட அஞ்சலட்டையையும் அன்னாருக்கு அனுப்பும்படி என் விலாசத்துக்கு வந்திருக்கும் சில ஸ்தாபனங்களின் அநுதாபத் தீர்மானங்களையும் பார்க்கும் போது மனம் கலங்குகிறது.

பாபுவின் பணிக்கே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட மனு மறைந்துவிட்டாள்.

கடைசியாக நான் அவளை தில்லியில் மருத்துவ மனையில் பார்த்ததுதான். டாக்டர்கள் அதிக நம்பிக்கையாக ஒன்றும் சொல்லவில்லை. டாக்டர் சுசிலா நய்யார் தம்மால் முடிந்த வரையில் நோயைத் தீர்க்கப் பாடுபட்டுக் கொண்டிருந்தார். முதலில் நிமோனியாவாக வந்து பிறகு சிறுநீரகக் கோளாறாக மாறிவிட்டிருந்தது. அந்த வேதனைகளிடையிலும் நான் அவளைப் பார்க்கப் போனபோது தன் இயற்கையான புன்சிரிப்புடன் சில நிமிஷங்கள் என்னுடன் பேசினாள். அன்பொழுகப் பேசினாள்.

பாபுவின் நூற்றாண்டு விழாவை யொட்டி நாடெங்கும் ஓடிய 'காந்தி தர்சன்' ரயில் கண்காட்சியில் தென்னாட்டுப் பொறுப்பு மனுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மிகுந்த ஆர்வத்துடனும் திறமையுடனும் இந்த வேலையை நடத்திக் காட்டினாள். வேலையின் கடுமையைப் பலவீனமான உடலால் தாள முடியாமல் நிமோனியா ஜுரம் வந்துவிட்டது. அதிகாலையில் எழுந்து பிரார்த்தனை நடத்துவது. ஜனங்களை - ஜனத் திரளை - இன்முகத்துடன் வரவேற்று, கண்காட்சியைக் காண்பிப்பது. கூட இருக்கும் கைடுகளை **(guides)**க் கவனித்துக் கொள்ளுவது. சுகாதாரத்தை மேற்பார்வையிடுவது. மாலை பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசுவது. எல்லாம் மனுவின் பொறுப்பில்தான் இருந்தன. ''ஏழை மக்கள் கொடுக்கும் காணிக்கைகளைத் தவறில்லாமல் அன்றன்றைக்குச் சரி பார்த்து வரவு வைத்துப் படுப்பதற்கு மணி பதினொன்றாகிவிடுகிறது. காலையில் ஐந்து மணிக்கு எழுந்து விடுகிறோம்'' என்று நான் தஞ்சாவூரில் இருந்தபோது என்னிடம் சொன்னாள். எனது கடைசிப் புதல்வன் வேலை பார்க்கும் தஞ்சாவூரிலும் பிறகு சென்னையிலும் கண்காட்சி வண்டி வந்தபோது நான் பெரும்பாலும் அவளுடன்தான் இருந்தேன். சென்னையில் எனது தந்தையைச் சந்தித்ததில் அவளுக்குப் பெருமகிழ்ச்சி. ஜுரத்தை முதலில் அவள் சட்டை செய்யவில்லை. பிறகு சுசீலா நய்யார் அவள் உடல் நிலையைப் பார்த்துக் கவலைப்பட்டுத் தம்முடன் தில்லிக்குச் சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார். இறப்பதற்குச் சரியாக ஒரு மாதம் முன்பு எனக்கு எழுதிய கடிதத்தில் 'நான் விரைவில் குணமடைந்து விடுவேன் சித்தி, சீக்கிரம் திரும்பிவிடுவேன்' என்று எழுதியிருக்கிறாள். எங்கு திரும்புவேன் என்று சொல்லவில்லை. பா - பாபுவிடம் சென்று விட்டாள்.

மனு அவளது தாய் தந்தையரின் நான்காவது பெண். அண்ணன் தம்பி இல்லை

காந்தி தர்சன ரயிலுடன் சென்னைக்கு வந்திருந்த மனு காந்தியை (நடுவில் இருப்பவர்) ஸ்ரீமதி எம். எஸ்ஸுடனும், டாக்டர் சுசீலா நய்யாருடனும் காண்கிறோம்.



யாகையால் எங்கள் குடும்பத்துப் பையன்களிடம் மிகவும் பாசம் வைத்திருந்தாள். அவளுடைய தாத்தாவும் பாபுவும் ஒன்று விட்ட சகோதரர்கள். இரு குடும்பங்களிலும் ஒற்றுமையும் தொடர்பும் இருந்து வந்தபடியால், தாயை இழந்ததும் பா-பாபுவின் பராமரிப்பில் மனு வந்தபோது அவர்கள் தங்கள் சொந்தப் பேத்திகளுக்கும் மனுவுக்குமிடையே ஒரு வித்தியாசமும் காணவில்லை. அப்போது மனுவுக்குப் பதினொன்று வயது இருக்கலாம். பிறகு 1942ல் பா-பாபு சிறை போக நேர்ந்தபோது மனுவும் அவர்களுடனேயே சிறைவாசம் செய்தாள். அந்த வாய்ப்பு சர்க்காரால் அவளுக்கு அளிக்கப்பட்டது. பாபுவிடம் கல்வி பயிலுவதும் பாவுக்குப் பிடித்ததைச் சமைத்துக் கொடுத்து மற்ற சுசுருஷைகளைச் செய்வதும் அவளது அன்றாட அலுவலாக இருந்தது. அதை உற்சாகத்துடனும் நன்றாகவும் செய்யப் பழகிக் கொண்டாள். பாவின் கடைசி நாட்களில் உதவி செய்ய மனு பக்கத்தில் இருந்தது பாபுவின் மனத்துக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. சிறையிலிருந்து பாபு மீண்ட பிறகும் பாபுவின் வேலைகளைக் கவனித்துக் கொள்ள மனு கூடவே இருந்தாள். பாபுஜிக்குப் பேரன் முறையாகும் கனு காந்தியின் மனைவி ஆபாவும் மனுவுக்குத் துணையாகச் சேர்ந்து கொண்டாள். இன வெறியை அடக்கக் கீழ் வங்காளத்தில் நோவாகாளி பிரதேசத்திலும் பீகாரிலும் பாபு கால் நடையாகப் பிரயாணம் செய்தபோது, இளவயதினர்களான இந்த இரு பெண்களும் மிக்க மனோதிடத்துடன் அட்டூழியங்களினூடே பாபுவுடன் பிரயாணம் செய்தார்கள். கடைசியாக தில்லியிலும் கலகம் மூண்டது. பாபு தில்லிக்கு வரவேண்டியதாயிற்று. கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் தில்லியில் இருந்தாள். அந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீ சதாசிவமும், எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களும் தில்லி வந்திருந்தார்கள். எம்.எஸ்ஸின் பக்தி கீதங்கள் புண்பட்டுப்போன பாபுவின் இதயத்துக்கு மிகவும் இதமளித்தன. மனு இந்த விவரத்தை அவளது குறிப்புக்களில் எழுதியிருக்கிறாள்.* 1948 ஜனவரி முப்பதாம் தேதி மனுவும் ஆபாவும் பாபுவுக்குக் கைத்தாங்கல் கொடுத்துப் பிரார்த்தனைக்கு அழைத்துப் போனபோதுதான் அவர் சுட்டு வீழ்த்தப் பட்டார்.

பாபு மறைந்ததும் மறுமுறை தாயை இழந்தது போல் மனு உணர்ந்தாள். பாபுவுடன் இருக்கும்போது எழுதப்பட்ட தினக் குறிப்புகளின் ஆதாரத்தின் பேரில் பல அரிய புத்தகத் தொகுதிகளைக் குஜராத்தி பாஷையில் எழுதியிருக்கிறாள். நவஜீவன் பிரசுரத்தார் அவற்றை வெளியிட்டிருக்கிறார்கள். சில புத்தகங்களை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துப் பிரசுரித்திருக்கிறார்கள். பாபுவுக்குப் பிறகு மனு, அவரைப் பற்றி எழுதுவதிலும், பொதுப் பணிகளிலும், தனது வயதான தந்தையைக் கவனிப்பதிலுமே தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருந்தாள்.

பாபுஜி நூற்றாண்டுக் கண்காட்சியின்போது அவள் சொன்ன ஓரிரண்டு சம்பவங்களை இங்கே எழுதுகிறேன்:

மலபாரில் ஒரு வயோதிக ஸ்திரீ மனுவிடம் ஓடோடி வந்து கையில் ஒரு பொட்டலம் வைத்தாளாம். பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்ததும் மனு அதை அப்படியே கீழே நழுவ விட்டாளாம். ஏனெனில் பொட்டலம் நிறைய புதிதாகப் பிடிக்கப்பட்ட சிறு மீன்கள் இருந்தனவாம்! வயோதிக ஸ்திரீ அவைகளைப் பொறுக்கி எடுத்து, ''குழந்தே! தாத்தாவைப் போலவே நீ மிகவும் மெலிந்து இருக்கிறாய். இந்தா, இந்த மீன்களைக் கறியாக்கிச் சாப்பிடு. உடம்புக்கு நல்லது'' என்றாளாம்! மனு கிழவியின் அன்புக்கு நன்றிகூறி, தனக்கு மீன், மாமிசம் சாப்பிடும் வழக்கம் இல்லையென்று சொல்லி அவளையே பொட்டலத்தை எடுத்துக் கொண்டு போகும்படி சொன்னாளாம். பரிசைத் திருப்பியதற்கு மன்னிப்பும் கோரினாளாம்.

புதுச்சேரியில் கடற்கரையில் மாலைப் பிரார்த்தனையும் கூட்டமும் ஏற்பாடாகியிருந்ததாம். கடலின் அலைகள் கரையோடு மோதி மோதித் திரும்புவதைக் கவனித்த மனு, ''ஜனங்களே, இந்த அலைகள் நம்மிடமிருந்து அயல் நாடுகளுக்கு நூற்றாண்டுச் செய்தி கொண்டு போகின்றன. நாம் மற்றவர்களுக்கு என்ன சேதி அனுப்புவோம்? 'பாபுவை மறவாது அவர் வழி பின்பற்றி வருகிறோம். நீங்களும் அவ்விதமே இருப்பீர்களாக' என்போமா? அல்லது நாம் பாபுவை முழுவதும் மறந்துவிட்டோம் என்று சொல்லுவோமா?'' என்று கேட்டாளாம். ''நல்ல சேதி அனுப்புவோம்'' என்றாளாம்.

தனக்குத் தெரிந்த முறையில் தன் சக்திக்குத் தகுந்த அளவில் மனு, பாபுவின் நினைவை ஜனங்களுக்குப் பரப்பினாள். அவள் மரணம் உத்தமமான மரணம். அவளது ஆத்மா பரம சாந்தி அடைந்திருக்குமென்பதில் ஐயம் இல்லை.

---

* மாலை பிரார்த்தனைக் கூட்டத்தில் ஸ்ரீமதி சுபலக்ஷ்மி பென் 'ஹரி தும ஹரோ ஜனகீபீர்' என்ற பாடலைப் பாடினார். அவரது சாரீரம் அற்புதமான மாதுரியம் பொருந்தியது. கேட்டுக் கொண்டே இருக்க மாட்டோமா என்ற உணர்ச்சி நமக்கு உண்டாகிறது. அவர் சமூகத்துறையில் சிறப்பாகப் பழகுவதற்குரியவராக இருக்கிறார். இயல்பாகவே அன்பு நிறைந்திருக்கிறார். பிரார்த்தனையின் போது பாபுஜி, சுபலக்ஷ்மியின் இனிய குரலையும் பஜனை பாடும் முறையையும் பாராட்டி, ''அவரது சாரீரம் இனிமையில் எல்லை கடந்ததாக உள்ளது. அவர் பஜனைப் பாடலில் தம்மையே இழந்து விடுகிறார். பிரார்த்தனை என்பது பகவானில் தன்னை இழப்பதுவேயாகும். வெறுமே பஜனைப் பாடலைப் பாடுவது வேறு; பகவானில் தன்னையே இழந்தவாறு அதைப் பாடுவது முற்றிலும் வேறு. தெய்வீகமாகப் பஜனைப் பாக்கள் இசைக்கப்படுகையில் அந்தச் சூழலிலேயே ஆன்மீகம் நிரம்பிவிடுகிறது'' என்றார்.

* * * *

சுபலக்ஷ்மி பென் மீரா பஜனைப் பாட அவரது ஏழு அல்லது எட்டு வயதுப் பெண் (ராதா) அதற்கு எழிலுற அபிநயம் பிடித்தாள். பாபுஜி அதை ரசித்து மகிழ்ந்தார்.

- மனுவின் குஜராத்தி நூலில் காண்பதன் தமிழாக்கம்



பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி


இருபத்தோராம் அத்தியாயம்

“நீயும் ஒரு தாயா?”

சிவபக்தியே உருவெடுத்தாற் போல்விளங்கிய மாதரசி செம்பியன் மாதேவி தொடர்ந்து கூறினார்:

“மகனே! உன் தந்தை கண்டராதித்த தேவர் சிம்மாசனம் ஏறிய பொழுது சோழ ராஜ்யத்தில் ஒரு சங்கடமான நிலைமை ஏற்பட்டிருந்தது. உன் பாட்டனார் பராந்தகச் சக்கரவர்த்தியின் பெருமையை நீ அறிந்திருக்கிறாய். அவருடைய ஆட்சிக் காலத்தில் சோழ ராஜ்யம் தெற்கே ஈழநாடு வரையிலும் வடக்கே கிருஷ்ணை நதி வரையிலும் பரவியது. ஆனால் அவருடைய அந்திய காலத்தில் இராஜ்யத்துக்கும் இராஜ குலத்துக்கும் பல விபத்துக்கள் ஏற்பட்டன. இராவணேசுவரனுடைய மூல பல சைன்யத்தைப் போல் இரட்டை மண்டலத்துப் படைகள் படை எடுத்து வந்தன. பராந்தகச் சக்கரவர்த்தியின் மூத்த புதல்வரும் ஒப்புவமையில்லாத வீராதி வீரரும் உன் பெரிய தகப்பனாருமான இராஜாதித்த தேவர் இரட்டை மண்டலத்து மாபெரும் சைன்யத்தை எதிர்க்கப் புறப்பட்டார். வடக்கே தக்கோலம் என்னுமிடத்தில் குருக்ஷேத்திர யுத்தத்தைப் போன்ற மாபெரும் போர் நடந்தது. லட்சக்கணக்கான வீரர்கள் மாண்டனர். இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. இரட்டைமண்டலத்தாரின் சைன்யம் சிதறி ஓடியது. ஆனால் அந்தப் போரில் இராஜாதித்த தேவர் பலியாகி விட்டார். உன்னுடைய சித்தப்பா அரிஞ்சய தேவரும் அந்தப் போரில் ஈடுபட்டுப் படுகாயம் அடைந்தார். ஆனால் அவரைப் பற்றி யாதொரு விவரமும் அப்போது தெரியவில்லை. அரிஞ்சய தேவரின் மூத்த புதல்வர் சுந்தர சோழர், — சின்னஞ்சிறு பிராயத்துப் பிள்ளை — ஈழத்துப் போருக்குச் சென்றிருந்தார். அவரைப் பற்றியும் செய்தி கிட்டவில்லை. இராஜ குலத்தில் பிறந்து அச்சமயம் தஞ்சை அரண்மனையில் பராந்தகச் சக்கரவர்த்தியின் அருகில் இருந்தவர் உன் தந்தைதான்.

ஆனால் உன் தந்தையோ இளம் பிராயத்திலேயே இராஜ்ய விவகாரங்களை வெறுத்துச் சிவபிரானிடத்தில் மனத்தைச் செலுத்தி வந்தவர். அவருக்கு யுத்தம் என்றால் பிடிப்பதில்லை. மன்னர்களின் மண்ணாசை காரணமாக மக்கள் போரிட்டு மடிவானேன்' என்று அவர் வருந்தினார். தந்தையிடமும் சகோதரர்களிடமும் அதைக் குறித்து வாதித்தார். சிவஞானச் செல்வர்களான பெரியோர்களின் சகவாசத்திலும் புண்ணிய ஸ்தல யாத்திரையிலும் ஆலய வழிபாட்டிலும் காலத்தைச் செலவிட்டார். வாள், வேல் முதலிய ஆயுதங்களைக் கையினால் தொடவும் அவர் விரும்புவதில்லை. யுத்த தந்திரங்களிலும் போர் முறைகளிலும் வர் பயிற்சி பெறவில்லை. பொய்யும்



புனை சுருட்டும் வஞ்சகமும் வேஷமும் சூழ்ச்சிகளும் மறு சூழ்ச்சிகளும் கொலை முதலிய பாதகங்களும் நிறைந்தது ராஜரீகம் என்று அவர் நம்பினார். 'திருடன் பிறர் பொருளைத் திருடுவதற்கும் ஒரு நாட்டு அரசன் இன்னொரு நாட்டைக் கவர்வதற்கும் என்ன வித்தியாசம்?' என்று அவர் கேட்டார்.

மகனே! விதிவசத்தால் அப்படிப்பட்ட கொள்கையுடைய உன் தந்தை இந்தச் சோழ நாட்டின் பாரத்தை வகிக்கும்படியாக நேர்ந்து விட்டது.

பராந்தகச் சக்கரவர்த்தி இராஜ்யத்துக்கு நேர்ந்த பல விபத்துக்களினாலும் இராஜாதித்தரின் மரணத்தினாலும் மனம் நொந்து மரணத்தை எதிர்பார்த்திருக்கும் வேளையில் உன் தந்தையை அழைத்து, 'இராஜ்ய பாரத்தை நீதான் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்றார். உன் தந்தை மரணத் தறுவாயிலிருந்த உன் பாட்டனாரின் மனத்தை மேலும் புண்படுத்த விரும்பாமல் ஒப்புக் கொண்டார். உன் தந்தையை எனக்கு முன்னால் மணந்திருந்த பாக்கியவதியான வீரநாராயணி தேவி அதற்கு முன்னரே சிவ பதம் அடைந்து விட்டார். நானோ அப்போது உன் தந்தையைப் பார்த்ததேயில்லை. ஆகையால், உன் தந்தையின் காலத்துக்குப் பிற்பாடு சோழ மகாராஜ்யம் என்ன ஆவது என்ற கவலை உன் பாட்டனாருக்கு ஏற்பட்டது.

அதிர்ஷ்டவசமாக அச்சமயத்தில் உன் சிறிய தந்தையின் குமாரரைத் தேடுவதற்காக ஈழத்துக்குப் போனவர்கள், அங்கே ஒரு தீவிலிருந்த சுந்தர சோழரைக் கண்டுபிடித்து அவரை அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

பராந்தகச் சக்கரவர்த்தி சுந்தரசோழரிடம் அளவிலாத பிரியம் வைத்திருந்தார். பேரப் பிள்ளையைக் கைக்குழந்தையாயிருந்த நாளிலிருந்து மடியில் வைத்துத் தாலாட்டிப் பாராட்டி வளர்த்து வந்தார். பெரியோர்கள் பலர் சுந்தர சோழர் மூலமாய்ச் சோழ குலம் மகோந்நதம் அடையப் போகிறது என்று சொல்லியிருந்தார்கள்.

இத்தகைய காரணங்களினால் உன் பாட்டனாருக்குச் சுந்தர சோழர் மீது அபாரமான பிரேமை. ஆகையால் உன் தந்தை சிம்மாசனம் ஏறும்போது சுந்தர சோழருக்கு இளவரசுப் பட்டம் கட்டிவிடவேண்டும் என்றும், அவருடைய சந்ததியார்கள்தான் சோழ நாட்டை ஆண்டு வர வேண்டும் என்றும் சொல்லிவிட்டுச் சிவபதம் அடைந்தார்.

இந்த விவரங்களையெல்லாம் உன் தந்தை என்னிடம் கூறினார். பராந்தகச் சக்கரவர்த்தி மரணத் தறுவாயில் வெளியிட்ட விருப்பத்தை நிறைவேற்ற அவர் உறுதி கொண்டிருந்தார். சுந்தர சோழரும் அவருடைய சந்ததியாரும் பட்டத்துக்கு வருவதில் எவ்வித இடையூறும் நேரிடக் கூடாதென்று எண்ணினார். உன் தந்தைக்கு இராஜ்யம் ஆளும் ஆசை இல்லை; இராஜரீக காரியங்களில் பற்றுதலும் இல்லை. அவர் புண்ணிய புருஷர். அவருடைய உள்ளம் சதாசர்வ காலமும் நடராஜப் பெருமானின் இணையடித் தாமரைகளில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. ஆகவே தமது தம்பியாகிய அரிஞ்சயரிடமும் அவருடைய புதல்வர் சுந்தர சோழரிடமும் இராஜ்ய காரியங்கள் முழுவதையும்

ஒப்படைத்திருந்தார்.' 'தாம் சிவபெருமானுடைய கைங்கரியத்தில் ஈடுபட்டிருந்தார். முன்னமே சொன்னேனே, அதுபோல் அவருக்கு மறுபடியும் மணம் செய்து கொள்ளும் எண்ணமே இருக்கவில்லை. ஆனால் அவருடைய மன உறுதியைக் கலக்க நான் ஒருத்தி வந்து சேர்ந்தேன். நானும் சிவபக்தியில் ஈடுபட்ட 'பிச்சி' என்பதை அறிந்ததினாலேயே அவர் என்மீது பிரியங்கொண்டு என்னைத் திருமணம் புரிந்தார். அவரைப் பதியாக அடைந்த நான் பாக்கியசாலி. எத்தனையோ 'ஜன்மங்களில் அவரை அடைய நான் தவம் செய்திருக்க வேண்டும். அவரைத் தந்தையாகப் பெற்ற நீயும் பாக்கியசாலி. இந்த உலகில் இறைவனைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்த மகான்கள் வெகு சிலர்தான். சிவபெருமான் ரிஷபாரூடராய் வந்து உன் தந்தைக்குக் காட்சி தந்து அவரை இம்மண்ணுலகிலிருந்து அழைத்துப் போனார். நான் இப்போது உன்னை என் ஊனக் கண்களால் பார்ப்பதுபோல உன் தந்தை பரமசிவனைத் தரிசித்தார். அப்படிப்பட்ட புண்ணிய புருஷருடைய விருப்பத்தை நிறைவேற்ற நானும் நீயும் கடமைப்பட்டவர்கள்!''

அன்னை இவ்விதம் கூறி நிறுத்தியபோது, கேட்டுக்கொண்டிருந்த மகனுடைய உடல் பதறிக் கொண்டிருந்தது; அவனுடைய உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தது.

''அது எப்படி, தாயே! என் தந்தை என்னிடம்



ஒன்றும் தெரிவிக்கவில்லையே? நான் என்ன கடமைப்பட்டிருக்கிறேன்? எந்த விதத்தில் கடமைப்பட்டிருக்கிறேன்?'' என்றான் மதுராந்தகன்.

''மகனே! கேள்! உன் தந்தை சிவபெருமானுடைய பாத மலர்களை அடைந்தபோது நீ சின்னஞ்சிறு பிள்ளை. ஆகையால், உன்னிடம் அவர் ஒன்றும் தெரியப்படுத்த முடியவில்லை. ஆனால் என்னிடம் சொல்லி விட்டுப் போனார். நாங்கள் மணம் புரிந்த புதிதில் மக்கள் பேற்றை விரும்புவதில்லை யென்று முடிவு செய்திருந்தோம். ஆனால் பேதையாகிய என்னால் அந்த மன உறுதியை நிறைவேற்ற முடியவில்லை. கன்னிப் பருவத்தில் சிவபெருமானிடம் நான் கொண்டிருந்த பக்தி உன் தந்தையிடம் கொண்ட பிரேமையாக மாறியது. நாளடைவில், என் கையில் ஏந்தி மார் போடு அணைத்து மடியில் வைத்துத் தாலாட்டிப் பாராட்டிக் கொஞ்சுவதற்குக் குழந்தை வேண்டும் என்று என் இருதயம் தாபம் கொண்டது. மற்றப் பெண்களின் கையிலும் மடியிலும் குழந்தையைக் கண்டால் என் உடம்பெல்லாம் துடித்தது; உள்ளம் பற்றி எரிந்தது. குழந்தைப் பருவத்தில் என்னை ஆட்கொண்ட இறைவனிடம் வரம் கோரினேன். இறைவனும் இந்தப் பேதையின் கோரிக்கையை நிறைவேற்றினார். உன்னை எனக்கு அளித்தார். ஒரு பக்கத்தில் உன்னைப் பெற்றதினால் நான் உள்ளமும் உடலும் பூரித்தேன்; மற்றொரு பக்கத்தில் உன் தந்தையின் கோபத்துக்கு ஆளாகி விட்டேனோ என்று பயந்தேன். அந்த மகா புருஷர் என்மீது கோபிக்கவில்லை. ஆனால் அவருடைய வாக்கை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை மட்டும் என்மீது சுமத்தி விட்டுப் போனார்.

''மகனே! உன்னை இந்த மண்ணுலக வாழ்க்கையில் பற்றுதல் கொள்ளாமல் சிவபக்த சிகாமணியாகும்படி வளர்ப்பேன் என்று உன் தந்தைக்கு வாக்குக் கொடுத்தேன். அதை நிறைவேற்றி விட்டதாகவே சில காலத்துக்கு முன்பு வரையில் எண்ணி இறுமாந்திருந்தேன்.

''ஆனால், என் உயிர்க்குயிரான மகனே! என் கண்ணுக்குக் கண்ணான செல்வப் புதல்வனே! சில நாளாக நான் ஏதேதோ கேள்விப்படுகிறேன். அப்படிப்பட்ட பேச்சைக் கேட்கும்போதெல்லாம் என் நெஞ்சு புண்ணாகிறது. நான் கேள்விப்படுவதெல்லாம் பொய் யென்று நீ உறுதி சொல்லி என் நெஞ்சில் உள்ள புண்ணை ஆற்ற மாட்டாயா?'' என்று அன்னை செம்பியன்மா தேவி கெஞ்சினாள்.

''தாயே! தங்களுடைய மர்மமான வார்த்தைகள் என்னுடைய நெஞ்சையும் புண்ணாக்குகின்றன. என்னிடம் என்ன உறுதி கேட்கிறீர்கள்?'' என்று மதுராந்தகன் சீறினான்.

''குழந்தாய்! என் மனத்திலுள்ளதை அறிந்து கொள்ளும் சக்தியை நீ இழந்து விட்டாய் போலும். வெளியிட்டுச் சொல்லத்தான் வேண்டும் என்கிறாய். நல்லது, சொல்லுகிறேன். உன் மனம் சிவபக்தியாகிற கங்கை நதியிலிருந்து மண்ணாசையாகிய குட்டையில் விழுந்து விட்டது என்று கேள்விப்படுகிறேன். சோழ குலத்துச் சிம்மாசனத்தில் ஏற நீ ஆசை கொண்டிருக்கிறாய் என்று கேள்விப்படுகிறேன். உன் புனிதமான உள்ளத்தை நம் விரோதிகள் அவ்விதம் கெடுத்து விட்டார்கள் என்று அறிகிறேன். நான் இவ்வாறு கேள்விப்பட்டது உண்மையல்ல என்று நீ கூறினால், என் மனம் நிம்மதி அடையும்!''

மதுராந்தகன் இதுவரை உட்கார்ந்திருந்த பீடத்திலிருந்து எழுந்து நின்றான். அவனுடைய படபடப்பைப் பார்த்துத் தாயும் எழுந்தாள்.

''என்னுடைய மனத்தை விரோதிகள் யாரும் கெடுக்கவில்லை. என்னைச் சிம்மாசனம் ஏற்ற விரும்புகிறவர்கள் என் விரோதிகளா? எனக்காகத் தங்கள் உயிரையும் கொடுக்க முன்வந்திருப்பவர்கள் என் விரோதிகளா? ஒரு நாளும் இல்லை. உண்மையில் என் ஜன்ம விரோதி யார்? என்னைப் பெற்றவளாகிய நீதான்!....'' என்று மதுராந்தகன் கூவினான்.

ஆத்திர மிகுதியால் அச்சமயம் அவன் மரியாதையை மறந்தான்; சின்னப் பழுவேட்டரையர் நல்ல வார்த்தைகளினால் அன்னையின் மனத்தை மாற்றும்படி சொல்லியிருந்ததை மறந்து வசைமாரி பொழிந்தான்.

''ஆம்; நீதான் என் ஜன்ம சத்துரு. வேறு யாரும் இல்லை. நீயும் ஒரு தாயா? நீயும் ஒரு ஸ்திரீயா? உலகத்தில் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளின் உரிமைக்காகப் படாத பாடுபடுவார்கள். கதைகளிலும் காவியங்களிலும் கேட்டிருக்கிறேன். வாழ்க்கையிலும் பார்த்திருக்கிறேன். அன்னையின் இயல்புக்கே மாறான இயல்புடைய நீ மானிட ஸ்திரீதானா? அல்லது மனிதப் பெண் உருக்கொண்ட அரக்கியா? எதற்காக இந்தப் பெரும் துரோகத்தை எனக்குச் செய்கிறாய்? எல்லாவித நியாயங்களினாலும் எனக்குச் சேர வேண்டிய இராஜ்யத்தைப் பிடுங்கி இன்னொருவனுக்குக் கொடுப்பதில் உனக்கு என்ன சிரத்தை?

என் தந்தையின் விருப்பம் என்று சொல்லுகிறாய். அவருக்கு நீ வாக்குக் கொடுத்ததாகச் சொல்லுகிறாய். அதற்கெல்லாம் அத்தாட்சி என்ன? நான் நம்பவில்லை. எனக்கு யாரோ துர்ப்போதனை செய்து விட்டதாகச் சொல்லுகிறாய். இல்லவே இல்லை. உனக்குத்தான் யாரோ துர்ப் போதனை செய்து உன் மனத்தைத்தான் கெடுத்துவிட்டிருக்கிறார்கள். தாயை மகனுக்கு விரோதியாக்கி யிருக்கிறார்கள். நியாயமாக எனக்கு உரிய சோழ சிங்காதனத்தை நான் ஒரு நாளும் கைவிடமாட்டேன். நீ சொன்னாலும் விடமாட்டேன். சிவபதம் அடைந்த என் தந்தையே திரும்பி வந்து சொன்னாலும் கேட்க மாட்டேன். இந்தச் சோழ சாம்ராஜ்யம் என்னுடையது; இந்தப் பழைமையான சிங்காதனம் எனக்குரியது; கரிகால் பெருவளத்தான் அணிந்திருந்த மணிமகுடம் எனக்கு உரியது. அவற்றை நான் அடைந்தே தீருவேன். இதோ என் கழுத்தில் போட்டிருக்கும் உருத்திராட்ச மாலை நீ எனக்கு அளித்தது; தாய் என்ற மரியாதைக்காக இத்தனை நாளும் அதைத் தரித்திருந்தேன்; என்னைப் பேடியாக்கி நாடு நகரமெல்லாம் நகைக்கும்படி செய்த இந்த ருத்திராட்ச மாலையை இதோ இந்தக் கணமே கழற்றி எறிகிறேன்; நீயே அதை வைத்துக் கொள்ளலாம்!''

இவ்விதம் பித்தம் பிடித்தவனைப் போல் பிதற்றிவிட்டு மதுராந்தகன் தன் கழுத்திலிருந்த ருத்திராட்ச மாலையை அவசரமாகக் கழற்ற முயன்றான்; கழற்ற முடியாமல் அதை அறுக்க முயன்றான்; ஆனால் கழுத்து நெறிந்ததே தவிர மாலை அப்படியே இருந்தது.

மதுராந்தகன் அழகிய தோற்றமுடையவன். சுந்தர சோழரின் புதல்வர்களைக் காட்டிலும் அழகன் என்று சொல்லலாம். அவர்களிடம் இல்லாத பெண் தன்மையின் வசீகரமான சாயல் அவன் முகத்தில் பொலிந்தது. அத்தகைய களை பொருந்திய அவன் முகம் கோபத்தினாலும் ஆத்திரத்தினாலும் இப்போது விகாரமடைந்து காட்டியது. அதைக் காணச் சகியாமல் செம்பியன் மாதேவி கண்களை மூடிக் கொண்டாள்.

அவன் சத்தமிட்டு ஓய்ந்த பிறகு தன் கண்களைத் திறந்து பார்த்தாள். குரலின் சாந்தத்தில் சிறிதும் மாறுதல் இல்லாமல், ''மகனே! சற்று அமைதியாயிரு. நான் வஞ்சக அரக்கியாகவே இருந்தாலும், என் வார்த்தைகளைச் சற்று செவிசாய்த்துக் கேள்!'' என்றாள்.

மதுராந்தகன் அந்தக் குரலைக் கேட்டுச் சிறிது அடங்கினான். ''நன்றாய்க் கேட்கிறேன். கேட்க மாட்டேன் என்று மறுக்கவில்லையே!'' என்றான்.

''தாயின் இயல்பைக் குறித்து நீ குறிப்பிட்டாய். பொல்லாத அரக்கியாயிருந்தாலும் தன் குழந்தைக்குத் துரோகம் செய்யமாட்டாள். துஷ்ட மிருகங்களும் தங்கள் குட்டிகளை மற்ற துஷ்ட மிருகங்களிடமிருந்து காப்பாற்ற முயல்கின்றன. அது போலவேதான் நானும் உன்னைக் காப்பாற்ற முயல்கிறேன். நீ இராஜ்யத்துக்கு ஆசைப்பட வேண்டாம் என்று நான் சொல்லுவதற்கு முன்னமே கூறியதைத் தவிர வேறு காரணமும் இருக்கிறது. இராஜ்ய ஆசையினால் உன் உயிருக்கே ஆபத்து வரும். பெற்று வளர்த்த தாய் தன் மகன் உயிரோடிருக்க வேண்டும் என்று ஆசைப்படுவதில் குற்றம் உண்டா? நீ இராஜ்யத்துக்கு ஆசைப்பட்டால், சுந்தர சோழரின் புதல்வர்களுக்கு எதிரியாவாய். ஆதித்த கரிகாலனும் அருள்மொழிவர்மனும் வீராதி வீரர்கள். நீயோ ஆயுதம் எடுத்து அறியாதவன். சோழ நாட்டுச் சைன்யம் முழுவதும் சுந்தர சோழருடைய புதல்வர்களின் கட்சியிலேயே இருக்கும். படைத் தலைவர்களும் அவர்களுக்குச் சார்பாக இருப்பார்கள். உனக்குத் துணைவர்கள் யார்? யாரை நம்பி நீ அவர்களுடன் போர் தொடங்குவாய்? சில நாளாக வானத்தில் தூமகேது தோன்றியிருப்பதை நீ அறிவாய். வால் நட்சத்திரம் வானில் தோன்றினால் அரச குலத்தினர் உயிருக்கு அபாயம் என்பது உலகம் கண்ட உண்மை. அப்படி நேரும் விபத்து உனக்கு நேராமலிருக்க வேண்டுமே என்றுதான் கவலைப்படுகிறேன். குழந்தாய்! என் ஏக புதல்வன் உயிரோடிருக்க வேண்டும் என்று நான் ஆசைப்படுவது தவறா? அது உனக்கு நான் இழைக்கும் துரோகமா?''

இவ்வார்த்தைகளினால் மதுராந்தகனுடைய ஆத்திரம் சிறிது தணிந்தது. அவன் உள்ளம் கனிவடைந்தது.

''அன்னையே! மன்னியுங்கள். தங்களுடைய கவலை இதுதான் என்று முன்னமே சொல்லியிருக்கலாமே? ஒரு நொடியில் தங்கள் கவலையைத் தீர்த்திருப்பேனே! நான் அப்படியொன்றும் துணைவர்கள் இல்லாத அநாதையல்ல. சோழ சாம்ராஜ்யத்தில் மிகச் செல்வாக்கு வாய்ந்த சிற்றரசர்களும் பெருந்தரத்து அதிகாரிகளும் என் பக்கம் இருக்கிறார்கள். பழுவேட்டரையர்கள் என் கட்சியில் இருக்கிறார்கள். கடம்பூர் சம்புவரையர் என் பக்கம் இருக்கிறார். தங்கள் சகோதரரும் என் மாமனுமான மழவரையரும் என் கட்சியில் இருக்கிறார். மற்றும் நீலதங்கரையரும்,

இரட்டைக்குடை இராஜாளியாரும், குன்றத்தூர்ப் பெருங் கிழாரும் தங்களுடைய பூரண பலத்துடன் என்னை ஆதரித்து நிற்பதாகச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறார்கள்......''

''மகனே! இவர்கள் செய்து கொடுக்கும் சத்தியத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. சுந்தர சோழச் சக்கரவர்த்திக்கும் அவருடைய சந்ததிகளுக்கும் உண்மையுடன் நடப்பதாக இவர்கள் ஒரு காலத்தில் சத்தியம் செய்து கொடுத்தார்கள். இவர்கள் உனக்கு உண்மையாக நடப்பார்கள் என்று வைத்துக் கொள்ளலாம். இவர்களிடம் உள்ள சைன்யம் வெகு சொற்பம் என்பது உனக்குத் தெரியாதா? வடக்கேயுள்ள சைன்யம் ஆதித்த கரிகாலனுடைய தலைமையில் இருக்கிறது. தென் திசைச் சேனையோ கொடும்பாளூர் வேளாரின் தலைமையில் இருக்கிறது....''

''தாயே! என் கட்சியை ஆதரிக்கும் சிற்றரசர்கள் எந்த நேரத்திலும் தலைக்குப் பதினாயிரம் வீரர்களைச் சேர்த்துக் கொண்டு வரக் கூடியவர்கள்.''

''சைன்யம் ஒரு பக்கம் இருக்கட்டும். மக்களைப் பற்றி என்ன? சோழ நாட்டு மக்கள் சுந்தர சோழரின் புதல்வர்களிடம் எவ்வளவு அபிமானம் கொண்டவர்கள் என்பது உனக்குத் தெரியாதா? இன்றைக்கு நீயே பார்த்தாய். இந்தப் பழையாறை நகருக்கு இன்று அருள்மொழிவர்மனோ ஆதித்த கரிகாலனோ வந்திருந்தால் மக்கள் எப்படித் திரண்டு கூடி வரவேற்றிருப்பார்கள்? இந்த ஊர் மக்கள் ஒரு காலத்தில் உன்னிடமும் அன்புடனேதான் இருந்தார்கள். பழுவேட்டரையர்களுடன் நீ உறவுபூண்டது முதல் உன்னை மக்கள் வெறுக்கவே தொடங்கி விட்டார்கள்....''

''தாயே! மக்களின் அபிமானத்தைப் பற்றி நான் சிறிதும் கவலைப்படவில்லை. மக்களின் அபிமானம் என்னத்துக்கு ஆகும்? மக்கள் ஆளப்பட வேண்டியவர்கள். சிம்மாசனத்தில் யார் வீற்றிருந்து அரசு செலுத்துகிறார்களோ, அவர்களிடம் மக்கள் பக்தி செலுத்த வேண்டியவர்கள்....!''

''மகனே! உனக்குப் போதனை செய்திருப்பவர்கள் அரசியல் நீதியின் ஆரம்ப தத்துவத்தைக்கூட உனக்கு உணர்த்தவில்லை. மக்களின் அபிமானம் இல்லாமல் எந்த அரசனும் நீடித்து அரசு செலுத்த முடியாது!....''

இவ்வாறு அந்தப் பெருமூதாட்டி சொல்லிக் கொண்டிருந்தபோது அரண்மனை வாசலில் ஒரு பெரும் ஆரவாரம் கேட்டது. ஓலக் குரலும் சாபக் குரலும் கோபக் குரலும் கேள்விக் குரலும் ஆயிரக்கணக்கான மனித கண்டங்களிலிருந்து எழுந்து பெருங் காற்று அடிக்கும்போது சமுத்திரத்தில் உண்டாகும் பயங்கரப் பேரொலியாகக் கேட்டது.

''மகனே! சோழ சாம்ராஜ்யத்துக்கு ஏதோ பெரும் விபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதன் முதல் அறிகுறிதான் இது. நான் அரண்மனைக்கு வெளியே சென்று என்ன விஷயம் என்று தெரிந்து வருகிறேன். அதுவரையில் நீ இங்கேயே இரு!'' என்றாள் அன்னை.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

"அது என்ன சத்தம்?"

ஓடையருகில் வந்ததும் படகில் வீற்றிருந்த அரசிளங்குமரி குந்தவைதான் என்பதை வந்தியத் தேவன் நன்கு தெரிந்து கொண்டான். ஆழ்வார்க்கடியான் அவ்விடத்தில் நிற்கவே, வந்தியத் தேவனும் தயங்கி நின்றான்.

''அப்பனே! ஏன் நிற்கிறாய்? இளைய பிராட்டி வெகு நேரமாய் உனக்காகக் காத்திருக்கிறார். படகில் ஏறியதும் 'இளவரசர் வந்து விட்டார்; பத்திரமாய் இருக்கிறார்' என்ற நல்ல சமாசாரத்தை முதலில் சொல்! உன்னுடைய வீரப் பிரதாபங்களை அளந்து கொண்டு வீண் பொழுது போக்காதே! நான் திரும்பிப் போகிறேன். பழையாறையில் இன்றைக்கு நாம் கலவரப் பிசாசை அவிழ்த்து விட்டு விட்டோம். அதை மறுபடியும் பிடித்துக் கூண்டில் அடைக்க முடியுமா என்று பார்க்கிறேன். உன்னுடைய தடபுடல் சாகஸங்களினால் எத்தனை தொந்தரவுகள் நேர்கின்றன?'' என்று ஆழ்வார்க்கடியான் சொல்லிவிட்டு வந்த வழியாக விரைந்து திரும்பிச் சென்றான்.

வந்தியத் தேவன் மனத்தில் ஒரு பெரும் வியப்பு ஏற்பட்டது. இவன் எப்படி எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டிருக்கிறான்? இத்தனைக்கும் நம்மை ஒரு விவரமும் கேட்கவில்லை. வெறும் ஊகமா? அல்லது எல்லாம் அறிவானா? ஆண்டிகளில் பரம்பரை ஆண்டி என்றும், பஞ்சத்துக்கு ஆண்டி என்றும் இரண்டு வகை உண்டு. ஒற்றர்களிலும் அப்படி இரு வகை உண்டு போலும். நான் அவசரத்துக்கு ஒற்றன்

ஆனேன். ஆகையால் அடிக்கடி சங்கடத்தை வரவழைத்துக் கொள்கிறேன். இந்த வைஷ்ணவன் பரம்பரை ஒற்றன் போலும். அதனால் ஒரு விதப் பரபரப்புமில்லாமல் சாவதானமாகத் தன் வேலையைச் செய்து வருகிறான். ஆனால் யாருக்காக இவன் வேலை செய்கிறான்? இவன் தன்னைப் பற்றிக் கூறியதெல்லாம் உண்மைதானா?

இவ்விதம் யோசித்துக் கொண்டே ஓடை நீர்க்கரைக்கு வந்த வந்தியத்தேவன் ஓடத்திலிருந்த இளவரசியின் முகத்தைப் பார்த்தான், ஆழ்வார்க்கடியானை மறந்தான். தான் போய் வந்த காரியத்தையும் மறந்தான். உலகத்தை மறந்தான். தன்னையுமே மறந்தான். ஆகா! இந்தப் பெண்ணின் முகம் தன்னை விட்டுச் சிறிது நேரம் கூடப் பிரிந்திருக்கவில்லை. கனவிலும் நனவிலும் புயலிலும் மழையிலும் காட்டிலும் கடல் நடுவிலும் தன்னுடன் தொடர்ந்து வந்தது. ஆயினும் என்ன விந்தை! நேரில் பார்க்கும்போது இந்தப் பொன் முகத்தின் அழகு எதனால் அதிகப்பட்டுக் காண்கிறது? ஏன் என் உள்ளத்தில் இத்தகைய கிளர்ச்சி உண்டாகிறது?

சுயநினைவு இல்லாமலே வந்தியத்தேவன் தண்ணீரில் சில அடிகள் இறங்கிச் சென்று ஓடத்தில் ஏறிக் கொண்டான். இளவரசி ஓடக்காரனைப் பார்த்துச் சமிக்ஞை செய்தாள். ஓடம் நகரத் தொடங்கியது. வந்தியத்தேவனுடைய உள்ளமும் ஊசலாடத் தொடங்கியது.

''நிமித்தக்காரா! இளவரசர்களுக்கு மட்டும் தான் நீ நிமித்தம் சொல்வாயா? எனக்கும் சொல்வாயா? நிமித்தம் எப்படிச் சொல்வாய்? வானத்துக் கிரஹங்களையும் நட்சத்திரங்களையும் பார்த்துச் சொல்வாயா? அல்லது காக்கை குருவிகளைப் பார்த்துச் சொல்வாயா? கைரேகை பார்த்துத்தான் சொல்வாயா?...முகக்குறி பார்த்துச் சொல்வாய் போலிருக்கிறது. இல்லாவிட்டால் ஏன் என் முகத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறாய்? இப்படிச் செய்தாயானால் உயர்குலத்துப் பெண்கள் யாரும் உன்னிடம் நிமித்தம் கேட்க முன்வர மாட்டார்கள்!'' என்று அரசிளங்குமரி கூறியது வந்தியத்தேவன் செவிகளில் இனிய கிண்கிணி நாதமாகக் கேட்டது.

''அம்மணி! நிமித்தம் பார்ப்பதற்காகத் தங்கள் முகத்தைப் பார்க்கவில்லை. எங்கேயோ எப்போதோ பார்த்த முகம் போலிருக்கிறதே என்று ஞாபகப்படுத்திக்கொள்ள முயன்றேன்...''

''தெரியும், தெரியும்! நீர் மிக்க மறதிக்காரர் என்று எனக்குத் தெரியும். நான் ஞாபகப்படுத்துகிறேன். ஏறக்குறைய நாற்பது நாட்களுக்கு முன்னால் குடந்தை ஜோதிடர் வீட்டில் முதன் முதலாகப் பார்த்தீர். பிறகு அன்றைக்கே அரசிலாற்றங் கரையில் பார்த்தீர்...''

''அம்மணி! நிறுத்துங்கள்! தங்கள் வார்த்தையை நான் நம்ப முடியவில்லை. நாற்பது நாளைக்கு முன்புதானா தங்களை முதன் முதலாகப் பார்த்தேன்! நாற்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பார்க்கவில்லையா? நூறு நூறு ஜன்மங்களில் நூறாயிரம் தடவை தங்களைப் பார்க்கவில்லையா? மலையடிவாரத்தில் பார்க்கவில்லையா? குன்றின் உச்சியிலே பார்க்கவில்லையா? நீர்ச்சுனையின் ஓரத்தில் பார்க்கவில்லையா? அடர்ந்த காட்டின் மத்தியில் கொடும் புலியினால் துரத்தப்பட்டு ஓடிவந்த தங்களை நான் காப்பாற்றவில்லையா? வேல் எறிந்து அந்தப் புலியைக் கொல்லவில்லையா? அப்போது நான் காட்டில் வேட்டையாடித் திரிந்த வேடுவனாயிருந்தேன். விதவிதமான வர்ணச் சிறகுகள் உள்ள அழகழகான கிளிகளை வலை போட்டுப் பிடித்துக் கொண்டு வந்து கொடுத்தேன். தாங்கள் அந்தக் கிளிகளை என்னிடமிருந்து வாங்கிக்கொண்டு வானத்தில் பறக்கவிட்டு விட்டுக் கலகலவென்று சிரித்தீர்கள். ஒரு சமயம் நான் மீன் பிடிக்கும் வலைஞனாயிருந்தேன். தூர தூரங்களிலுள்ள ஏரிகளுக்கும் ஆறுகளுக்கும் சென்று வெள்ளி மீன்கள், தங்க மீன்கள் மரகத மீன்களைப் பிடித்துக் கொண்டு வந்து கொடுத்தேன். அவற்றைத் தாங்கள் வாங்கிக் கொண்டு மறுபடியும் ஓடும் தண்ணீரில் விட்டு அவை துள்ளி நீந்திச் செல்லுவதைப் பார்த்து மகிழ்ந்தீர்கள். தொலை தூரங்களிலுள்ள கடல்களுக்குச் சென்று கடலின் ஆழத்தில் மூச்சுப் பிடித்து முழுகி முத்துக்களையும் பவளங்களையும் சேகரித்துக் கொண்டு வந்து கொடுத்தேன். தாங்கள் அவற்றைக் கையினால் அளைந்து பார்த்து விட்டு ஊரிலுள்ள சிறுவர் சிறுமியரை அழைத்து அவர்களுடைய சின்னஞ்சிறு கைகளிலே முத்துக்களையும் பவளங்களையும் சொரிந்து அனுப்பினீர்கள். முந்நூறு வருஷங்கள் வளர்ந்த இலந்தை மரத்திலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை விளையும் இலந்தைக் கனியைக் காத்திருந்து பறித்து வந்து தங்களிடம் சமர்ப்பித்தேன். அதைத் தாங்கள் வளர்த்த நாகணவாய்ப் பறவைக்குக் கொடுத்து அது கனியைக் கொத்திக் கொத்தித் தின்னுவதைப் பார்த்துக் களித்தீர்கள். தேவலோகத்துக்குப் போய் அங்குள்ள மந்தார மலர்களையும் பாரிஜாத புஷ்பங்

களையும் பறித்துக் கொண்டு வந்து தங்கள் முன் பொழிந்தேன். 'எங்கள் கொல்லை வேலியில் பூக்கும் முல்லை மலரின் அழகுக்கும் மணத்துக்கும் ஈடாகுமா?' என்று சொல்லிவிட்டீர்கள். தேவேந்திரனிடமிருந்து அவன் அணியும் ஒப்பில்லா இரத்தின ஹாரத்தை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தேன். 'ஒழுக்கமற்ற இந்திரன் அணிந்த மாலையை நான் கையினாலும் தொடுவேனா?' என்று சொல்லி விட்டீர்கள். கைலாசத்துக்குச் சென்று பார்வதி தேவியின் முன்னால் தவம் கிடந்து தேவியின் பாதத்தில் அணியும் சிலம்பை வாங்கிக் கொண்டு வந்தேன். தங்கள் பாதங்களில் சூட்டி விடுவதாகச் சொன்னேன். 'ஐயையோ! ஜகன்மாதாவின் பொற்பாதச் சிலம்பு என் காலிலே படலாமா? என்ன அபசாரம்? திரும்பக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வா' என்றீர்கள். போர்க் களத்துக்குச் சென்று அறுபத்து நாலு தேசங்களின் அரசர்களையும் வென்று அவர்களுடைய மணிமகுடங்களை யெல்லாம் சேகரித்துக் கொண்டுவந்து தங்கள் முன் காணிக்கை செலுத்தினேன். தாங்கள் அந்த மணி மகுடங்களைக் கால்களால் உதைத்துத் தள்ளினீர்கள். 'ஐயோ! தங்கள் மெல்லிய மலர்ப் பாதங்கள் நோகுமே!' என்று கவலைப்பட்டேன். இளவரசி! இவையெல்லாம் உண்மையா இல்லையா? அல்லது நாற்பது நாளைக்கு முன்பு முதன் முதலாகத் தங்களை நான் பார்த்தது தான் உண்மையா?'' என்றான் வந்தியத் தேவன். அப்படியும் அவன் பேசி முடித்துவிட்டதாகக் காணப்படவில்லை.

''தேவி! இன்னொரு ஞாபகமும் வருகிறது. ஒரு சமயம் வெள்ளி ஓடத்தில் நாம் ஏறி, தங்கப் பிடி போட்ட தந்தத் துடுப்புகளைப் பிடித்துக் கொண்டு, வானக் கடலில் வெண்ணிலா அலைகளைத் தள்ளிக் கொண்டு, பிரயாணம் செய்தோம்...'' என்று ஆரம்பித்தான்.

''ஐயையோ! இந்த நிமித்தக்காரனுக்கு நன்றாய்ப் பைத்தியம் பிடித்து விட்டது போலிருக்கிறது. படகைத் திருப்பிக் கரைக்குக் கொண்டு போக வேண்டியதுதான்!'' என்றாள் இளவரசி.

''இல்லை, தேவி, இல்லை! சற்று முன்னால் இந்த ஓடைக் கரைக்கு வந்து சேரும் வரையில் என் அறிவு தெளிவாகத்தான் இருந்தது. இல்லாவிட்டால் இந்தப் பழையாறை நகருக்குள் பிரவேசிப்பதற்கு நான் உபாயம் கண்டு பிடித்திருக்க முடியுமா? மதுராந்தகத் தேவரிடம் நிமித்தக்காரன் என்று சொல்லி, அதை நம்பும்படியும் செய்து, அரண்மனைக்கு வந்திருக்க முடியுமா? வைத்தியர் மகனிடமிருந்துதான் அவ்வளவு எளிதாகத் தப்பி வந்திருக்க முடியுமா? இந்தப் படகில் ஏறித் தங்கள் திருமுகத்தைப் பார்த்தவுடனேதான், மது உண்டவனைப் போல் மதிமயங்கிப் போய்விட்டேன்!''

''ஐயா! அப்படியானால் என் முகத்தைத் தாங்கள் பார்க்க வேண்டாம். இந்த ஓடையின் தெளிந்த நீரைப் பாரும். நீல வானத்தைப் பாரும். ஓடைக் கரையில் வானளாவி வளர்ந்திருக்கும் மரங்களைப் பாரும். பளிங்குக் கல் படித்துறைகளைப் பாரும். இந்த ஓடையில் பூத்திருக்கும் ஆம்பல் மலர்களையும் செங்கழுநீர்ப் பூக்களையும் பாரும். அல்லது இந்தச் செவிட்டு ஓடக்காரனின் முகத்தையாவது சற்றே பாரும். அவ்விதம் பார்த்துக்கொண்டே தாங்கள் போன காரியம் என்ன ஆயிற்று, காயா, பழமா என்று சொல்லும். இளவரசரை அழைத்து வந்தீரா, சௌக்கியமா இருக்கிறாரா, எங்கே விட்டு வந்தீர், யாரிடம் விட்டு வந்தீர் என்று முதலில் தெரியப்படுத்தும். பிறகு இங்கிருந்து புறப்பட்டது முதல் நடந்தவை எல்லாவற்றையும் சொல்லும்!''

''தேவி! தங்களிடம் ஒப்புக்கொண்ட காரியத்தை வெற்றிகரமாக முடித்திரா விட்டால், தங்களிடம் திரும்பி வந்து என் முகத்தைக் காட்டியிருப்பேனா? இளவரசரை இலங்கையிலிருந்து அழைத்துக் கொண்டு வந்தேன். அதற்கேற்பட்ட ஆயிரம் இடையூறுகளையும் வெற்றி கொண்டு அழைத்து வந்தேன். இளவரசர் சுகமா யிருக்கிறார் என்று நான் சொல்ல முடியாது. நான் அவரை விட்டுப் பிரியும்போது அவருக்குக் கடுமையான சுரம். ஆனால் பத்திரமான கைகளில் அவரை ஒப்படைத்து வந்திருக்கிறேன். ஓடக்காரப் பெண் பூங்குழலியிடமும், பூக்காரச் சிறுவன் சேந்தன் அமுதனிடமும் இளவரசரை விட்டு வந்திருக்கிறேன். அவர்கள் இளவரசரைக் காப்பாற்றுவதற்காக நூறாயிரம் தடவை வேண்டுமென்றாலும் தங்கள் உயிரைக் கொடுக்கக் கூடியவர்கள்!''

அச்சமயம் தூரத்தில் பயங்கரமான, குழப்பமான அநேகமாயிரம் குரல்களின் ஒருமித்த ஓலம் போன்ற சத்தம் எழுந்தது. சத்தம் வந்த திசையை அரசிளங் குமரியும் வந்தியத் தேவனும் பயத்தோடும் கவலையோடும் நோக்கினார்கள்.

''அது என்ன ஆரவாரம்? கோபங் கொண்ட ஜனத் திரளின் கூக்குரல் போல் அல்லவா இருக்கிறது?''

''ஆம்; அப்படித்தான் தோன்றுகிறது!'' என்றான் வந்தியத் தேவன்.*

(தொடரும்)


* இந்தக் காட்சியை நமது இந்த இதழின் அட்டைப்படம் சித்திரிக்கிறது. —ஓவியம் : மணியம்.

கோவூர் பஞ்சரத்தினம்

—ராஜன்—




தியாகராஜ சுவாமிகளின் ஆராதனை விழா ஜனவரி 27-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை மூன்று நாட்கள் கொண் டாடப்படுகிறது. சென்னையை அடுத்த கோவூரில் அவர் ஆறு மாதங்கள் தங்கி அந்த ஊர் ஆலய அம்பிகை சௌந்தரிய நாயகியின்மீது பஞ்சரத்ன கீர்த்தனை களைப் பாடிய வரலாறு பற்றிய கட்டுரை இது:



● குன்றத்தூருக்கு அருகிலுள்ள கோவூர் ஆலயம். தியாகப்பிரும்மத்தின் பஞ்சரத்ன கீர்த்தனங்களைப் பெற்ற பெருமை இதற்குண்டு.

தியாகராஜ சுவாமிகள் க்ஷேத்திராட னம் செய்ய உத்தேசித்திருந்த போது காஞ்சியில் வசித்து வந்த உபநிஷத் பிரும்மம் என்பவர் அவருக்குக் காஞ்சிக்கு வந்து சில நாட்கள் தம்முடன் தங்கியிருக்க வேண்டும் என்று ஒரு கடிதம் எழுதினார். இக்கடிதம் 1834ல் எழுதப்பட்டதாகத் தெரிய வருகிறது. உபநிஷத் பிரம்மம் தியாகையருடைய பிதா வான ராமப் பிரும்மத்தின் ஆப்த நண்பர். அப்போது உபநிஷத் பிரம்மத்துக்கு வயது 100. இவர் 115 வயது வரை வசித்தவர். உபநிஷத்துகளுக்கு இவர் எழுதிய வியாக்கி யானங்கள் அடையாறு பிரும்ம ஞான நூல கத்தில் சுவடிகளாக இன்றும் இருந்து வருகின்றன.

இந்த அழைப்பை ஏற்றுத் தியாகராஜர் காஞ்சியில் சில நாட்கள் தங்கி பகவந் நாமாவைப் பாடி வந்தார். அநேக பிர புக்கள் இவருடைய தெய்வ கானத்தைக் கேட்க வந்தனர். அவர்களில் ஒருவர் கோவூர் சுந்தரேச முதலியார். மிகவும் தெய்வபக்தி வாய்ந்தவர். கொடை வள்ளல். இவருடைய அன்பான அழைப்பின் பேரில் தியாகையர் கோவூரில் ஆறு மாத காலம் தங்கினார். அந்தச் சமயத்தில் அவர் சென்னைக் கும் விஜயம் செய்தார். அப்போது கறுப்பர் நகரம் என்று அழைக்கப்பட்ட பகுதியில்



● கோவூர் ஆலயத்தில் தியாகப்பிரும்மம் பஞ்சரத்னம் கல்வெட்டு.

இருந்த கோவூர் முதலியார் மாளிகையிலேயே தங்கினார். அப்போதுதான் சுமார் எட்டு நாட்கள் வரை தேவகாந்தாரி ராகத்தைத் தியாகப் பிரும்மம் பாடியதாகக் கூறப்படுகிறது. அவர் தங்கிய இடம், 4, பந்தர் தெரு, ஜார்ஜ் டவுன் என்று சொல்லப்படுகிறது. இன்று அங்கு கடைகள்தாம் இருக்கின்றன.

கோவூர் என்ற இத்தலம் குன்றத்தூரை அடுத்துள்ள சிவ க்ஷேத்திரம். கடவுளின் பெயர் சுந்தரேசுவரர். அம்மனின் பெயர் சௌந்தர்ய நாயகி. மூலக் கடவுளைச் சௌந்தர்ய நாயகர் என்று அழைப்பதும் ஒரு மரபு. தியாகராஜ சுவாமிகள் ராம பக்தர் என்பதுடன் சிறந்த தேவி பக்தருமாவார். வெள்ளிக் கிழமைகளில் திருவையாறு தர்மசம்வர்த்தனி (அறம் வளர்த்த நாயகி) சந்நிதியில் மெய்ம் மறந்து மணிக்கணக்காக உட்கார்ந்து பாடுவார். சௌந்தரிய நாயகியின் அருள் அவரை அந்த அம்பிகை மீது பாடத் தூண்டியது.

ஈவஸூத நீவண்டி தைவமு (சகாணா) கோரி ஸேவிம்பராரே (கரகரப்பிரியா) நம்பி வச்சிந (கல்யாணி) ஸுந்தரேச்வருநி (சங்கராபரணம்) சம்போ மஹாதேவ (பந்துவராளி) இந்த ஐந்து (பஞ்ச) ரத்தினங்களைத் தியாகையர் கோவூர் ஆலயத்தில்தான் பாடினார்.

கோவூரில் தியாகப் பிரம்மம் தங்கிய சத்திரத்தை அர்ச்சகர் காட்டுகிறார். கோயிலின் பிராகாரத்தில் சலவைக் கல்லில் இந்தப் பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் பொறிக்கப் பட்டுள்ளன.

தியாகப் பிரும்மம் இம்மண்ணுலகத்தை விட்டுப் பிரியுமுன் பாடிய கடைசிப் பாட்டு என்று கருதப்படும் 'கிரிபை' என்ற கீர்த்தனையும் சகாணாவில் பாடப்பட்டதுதான். சகாணா ராகத்தைப் பற்றி நன்கு தெரிய வேண்டும் என்றால் கோவூர் பஞ்சரத்தினங்களில் ஒன்றான ''ஈவஸூத''வையும் ''கிரிபை''யையும் நன்கு கவனித்து சுவரப்ரஸ்தாரத்தை அறிந்தால் போதும் என்று காலஞ்சென்ற டைகர் வரதாச்சாரியார் அடிக்கடி கூறுவதுண்டு.

'சம்போ மஹாதேவ' சம்ஸ்கிருதத்தில் கவனம் செய்யப்பட்ட கிருதி. கோரிஸேவிம்பராரே சௌந்தர்ய லகரியில் அமைந்த ஒரு சிறந்த காவியம். சௌந்தர நாயகியுடன் அமர்ந்துள்ள சுந்தரேசுவரனைச் சேவிக்க வாருங்கள் என்று பக்த கோடிகளுக்குத் தியாகராஜ சுவாமிகள் அழைப்பு விடுகிறார்.

ஈவஸூத (சகாணா) கீர்த்தனையின் அனுபல்லவியில் கோவூரின் சிறப்பைத் தியாகராஜர் வருணித்திருக்கிறார். ஸுந்தரேச்வருநி என்கிற சங்கராபரணக் கீர்த்தனை மதுரை சுந்தரேசுவரர் மீது பாடியுள்ளது என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் இது சரியல்ல என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இந்தக் கோவூர் ஆலயம் சோழ அரசர்கள் கட்டி வழிபட்டதாகும் என்பதற்கான கல்வெட்டுக்கள் உள்ளன. கர்ப்பக்கிருக வெளி அமைப்பு கஜ பிரஷ்ட (யானையின் பின்புறம் போன்ற) பாணியில் உள்ளது. அக்காலச் சோழர் கோவில்கள் பெரும்பாலும் இப் பாணியிலேயே கட்டப்பட்டுள்ளன.


கண்ணீர்த் துளி!




''ஏன் சார், கண் கலங்குகிறீர்கள்? என்ன காரணம் ?''
''உன் வெங்காயக் கலர் புடவை தான் காரணம்!''

முதலாளி: நம் ஆபீசுக்கு வேலைக்காகப் பல பேர் போட்டிக்கு வந்ததில் இவரை மட்டும் தேர்ந்தெடுத்திருக்கிறீரே.. ஏன் ?''

மானேஜர்: அத்தனை பேரையும் 'டெஸ்ட்' செய்ததில் இவர் ஒருவர் தான் தூங்கும் போது குறட்டை விடாமல் தூங்குகிறார். அதனால் தான்.



உஷ்...!



''யார் அங்கே?''
''நான்தான் !''
''சரி; சரி! சத்தம் போடாமல் போ!''

ரகுபதி ராகவ மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

15.

பெயரும் அளவும் கடந்த ஈசனுக்கு நம்முடைய அறிவையொட்டி நாம் வைக்கும் பெயர்கள் பல்லாயிரம். அவற்றில் தரித்திர நாராயணன் என்பதும் ஒரு பெயர். வறுமையில் கஷ்டப்படும் மக்கள் வழிபடும் மூர்த்தி. ஏழைகளுடைய இதயத்தில் குடியிருக்கும் தெய்வம் என்பது அதற்குப் பொருள்.

(யங் இந்தியா 4-4-29)

ஏழை மக்களின் கருத்தெல்லாம் தங்களுடைய கஷ்டத்தை எப்படி நிவாரணம் செய்வது என்பதிலேயே செல்லும். ஆத்ம உபதேசம் அவர்கள் உள்ளத்தை எட்டாது. போதிய உணவு இன்றித் தவிக்கும் மக்களின் மனத்தை மற்ற விஷயங்களில் இழுக்க முடியாது. என்ன சொன்னாலும் ஏறாது. ஆனால் தங்களுக்கு உணவு கொடுத்தவனைத் தெய்வம் என்று நினைப்பார்கள். வேறு கருத்துக்கள் பசியில் தவிப்பவர்களின் உள்ளத்தில் ஏறாது.

(யங் இந்தியா 5-5-27)

ஏழைகளின் கந்தல் துணியில் முடிபோட்டு வைத்திருந்த செப்புக்காசுகளை, கழும்பேறிய தம்பிடிகளை, நான் அவர்களிடம் இந்தக் கையால் வாங்கியிருக்கிறேன். அவர்களிடம் நான் புது நாகரிகங்களைப் பற்றியும் முன்னேற்றங்களைப் பற்றியும் பேசலாம், ஆனால் பயனில்லை. அவர்களிடம் வேதாந்தம் பேசுவது அவர்களைப் புண்படுத்துவது ஆகும். பேசினால் என்னையும், உங்களையும் கொடிய அரக்கர்களாகப் பாவிப்பார்கள். அவர்கள் அறிந்த தெய்வம் கருணையற்ற கொடுங்கோல் தெய்வமே அல்லவா?

கோபமும் பயங்கரமும் நிறைந்த தெய்வம்தான் அவர்கள் கண்டது. இவர்களிடம் நான் ஆண்டவனைப் பற்றி என்ன பேச முடியும்? பேச எனக்குத் தைரியமில்லை. இந்த ஏழை மக்களின் ஒளியற்ற கண்களைப் பார்க்கும்போது அவர்களிடம் ஆண்டவனைப் பற்றிப் பேச எனக்கு எப்படி மனம் வரும்? சோறே தான் அவர்களுக்குத் தெய்வம். ஊமைப் பிராணிகளிடம் நான் சாஸ்திரம் பேசுவது போலவே ஆகும், இவர்களிடம் நான் தெய்வ உபந்நியாசம் செய்வது. அவர்களுக்குக் கூலி தரும் வேலையைக் காட்டிய பிறகே நான் அவர்களிடம் ஆண்டவனைப் பற்றிப் பேச முடியும். இங்கே நாம் கூடி உட்கார்ந்து காலைப் பலகாரம் நன்றாக முடித்து மத்தியானச் சாப்பாடு என்னவாக இருக்கலாம் என்று யோசனை செய்யும் நிலையில் நாம் தெய்வத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யலாம். ஒரு வேளைச் சோற்றுக்கே திண்டாடும் நிலையில் வாழும் மக்களிடம் நான் என்ன தெய்வ ஆராய்ச்சி செய்ய முடியும்? அவர்களுக்கு ஈசனுடைய அவதாரம் சோறும் சாறுமே. ஏழைக் குடியானவர்கள் நிலத்தை உழுது சோறு சம்பாதித்துக் கொள்வார்கள். அந்தச் சோற்றுக்கு வஞ்சனம் கிடைக்குமாறு! ராட்டையைக் கொடுத்தேன். இன்று நான் முழங்காலுக்கு மேல் வேஷ்டி கட்டிக் கொண்டு பசியில் தவிக்கும் அந்த ஏழை மக்களின் தனிப் பிரதிநிதியாக உங்கள் முன் நிற்கிறேன்.

(யங் இந்தியா 15-10-31)

என் நாட்டின் ஏழை மக்களின் உள்ளம் எனக்குத் தெரியும். அவர்களிடையில் அல்லவோ நான் வாழ்ந்து வருகிறேன். அவர்களுடைய நலமே எனது முதல் கவலை. மற்றதெல்லாம் அதற்குப் பின். அவர்கள் நிலை சீர்திருத்தப் பட்டால் என் கவலை தீர்ந்தது. அவர்கள் உள்ளத்தில் காணும் நாராயணனே என்னுடைய நாராயணன். அந்த நாராயணனை அவர்கள் காணவில்லை. நான் காண்கிறேன். கண்டு வணங்குகிறேன். அவர்களுக்குப் பணி செய்து சத்திய தெய்வத்தைக் காண்கிறேன். எந்த சத்தியம் தெய்வமோ, எந்தத் தெய்வம் சத்தியமோ அதைக் காண்கிறேன்.

(ஹரிஜன் 11-3-39)

நாமெல்லோரும் திருடர்கள் என்றே சொல்ல வேண்டும். என்னுடைய அவசியத்துக்கு மேல் இந்தச் சமயம் எனக்கு வேண்டாத ஒன்றை நான் எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்தேனானால் அதை நான் திருடியவனே ஆவேன். மற்றவர்களின் அவசியத்துக்கு வேண்டியதான ஒன்றை அவர்களுக்குக் கிடைக்காமல் நான் மூடிவைத்தால் அது திருட்டே அல்லவா? மக்கள் சமூகத்துக்கு வேண்டியதை இயற்கை அன்னை தருகிறாள். அவனவனுக்கு வேண்டியதை அவனவன் அந்த அளவில் மட்டுமே எடுத்துக் கொண்டு வாழ்ந்தால் இந்த உலகத்தில் பிச்சை எடுக்கும் ஏழைகள் இருந்தே இருக்க மாட்டார்கள். யாருமே பசியால் சாகமாட்டார்கள். (1918)

இந்தியாவில் தற்போது ஒரு வேளை உணவு உண்டு இருப்போர் லட்சக் கணக்கு. அந்த ஒரு வேளைச் சாப்பாட்டில் நெய்யுமில்லை எண்ணெயுமில்லை. இந்த லட்சக் கணக்கான ஏழைகள் பசியாற உண்டு, மானம் காக்க உடையும் அடைந்த பிறகே நீங்களும் நானும் எதையும் நமது என்று சொல்லி உரிமை பாராட்ட முடியும். நமக்கு அறிவு வேண்டும். நம்முடைய ஆசைகளைக் குறைத்துக்கொண்டு ஏழைகளுக்கு ஓரளவு மிஞ்சும்படி செய்வது நம்முடைய கடமை. (1918)

(காந்தியடிகளின் ஜனன நூற்றாண்டில் நிகழும் அவரது மறைவு நாளுக்குத் தனியானதொரு முக்கியத்துவம் உண்டு. காந்தியத்தில் நிலைத்தவரும், பழம்பெரும் தேசத் தலைவருமான ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்கள், அண்ணல் அமரரான சர்வோதய தினத்தை முன்னிட்டு நமக்கு அளிக்கும் நல்லுரையை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். - ஆசிரியர்)

உத்தமர் காட்டும் உதாரணம்

ஸ்ரீபிரகாசா

ஒரு மகானுடைய மகிமை அவர் ஒருவருக்கே உரியது. மற்றவர்கள் அவரைப் போல் அப்படியே நடக்க முயல்வது ஆபத்தாகும். அவரது புற அம்சங்களான நடை உடை பாவனைகளை ஒருவர் பின்பற்றினால் அது கேலிக்கூத்தாக இருக்குமேயன்றி அவரை உண்மையில் பின்பற்றியதாகாது. அவரது அக அம்சத்தின் சக்தியால் அவர் உலகில் சாதித்ததை நாமும் செய்ய முயன்றாலோ படுதோல்வியே அடைவோம்; சாதாரணமாக நம்மால் செய்யக் கூடியதைக் கூடச் செய்வதற்குத் தவறி விடுவோம். இந்த நோக்கில் பார்த்தால் மகான் ஒருவருடைய வாழ்வால் சாதாரண மக்களுக்கு எவ்வித உபயோகமும் இல்லை என்றே தோன்றும். ஆனால் உண்மையில் இப்படிப்பட்ட மகான்களிடமும் மனிதத் தன்மையின் சாரமாக ஏதோ ஒன்று இருந்தேயாக வேண்டும். இதனை மிகத் தாழ்ந்த மக்களும் பின்பற்ற முடியும். இவ்வாறு பின்பற்றுவதால் சாதாரண மானுடன் உலகுக்கெல்லாம் நன்மை செய்ய முடியாதெனினும் தனக்குத் தானே நன்மை செய்து கொண்டவனுவான்; தன்னுடைய சிறிய குடும்ப, சமூக உலகுக்கும் நன்மை செய்தவனுவான்.



இந்தச் சிந்தனையுடன்தான் மகாத்மா காந்தியை நான் ஆராய்கிறேன். அக்கோணத்தில் மகாத்மாவை அனுகிப் பின்பற்றச் சாத்தியமான குண நலன்களை இளைஞர்கள் கடைப்பிடித்தால் அவர்கள் நல்ல பிரஜைகளாவதுடன், தங்களுக்கும் மற்றவர்களுக்கும் உபயோக முள்ளவராகவும் இருப்பர்.

மகாத்மாஜியின் அதிமுக்கியமான குண நலன் அவரது தீரம். பௌதிகமாகவும், தார்மிகமாகவும், சமூக ரீதியிலும், அரசியல் ரீதியிலும் அவருக்கு இருந்த தீரம் நமக்குச் சிறிதளவும் இல்லை. நாம் எதைக் கண்டாலும் அஞ்சுபவர்களாக இருக்கிறோம். தமக்குச் சரி என்று தோன்றியதை அச்சமின்றிச் சொல்லி, அவ்வாறு சொன்னதையே அஞ்சாமல் செயலிலும் செய்த மகாத்மாவின் இச்சிறப்பை, நாமும் முயன்று பெறலாம். அவரது தீரத்துக்குத் துணையாக இருந்தது அவருடைய கடுமையான ஒழுக்கம். எவ்விதப் படாடோபமும் இல்லாமல், அவர் தாம் செய்ததில் எல்லாம் இயல்பாகவே சீரிய ஒழுக்க விதிகளைப் பூரணமாகக் கடைப்பிடித்தார்.

பலப் பல ஆண்டுகளுக்கு முன்பு அவர் காசியில் நிகழ்த்திய உரை நினைவுக்கு வருகிறது. அந்த நகரில் பெருரல் இயந்து சர்வகலாசாலைக்கு அடிக்கல் நாட்ட வைஸ்ராய் வந்தபோது அதிகமான பந்தோபஸ்து செய்யப் பட்டது. அப்போது காவல் ஏற்பாடுகளால் வாரணாசியை முற்றுகை விட்டிருப்பது போலவே தோன்றியது. மக்களுக்கு இழைக்கப்பட்ட உபத்திரவம் கொஞ்சநஞ்சமல்ல.

அடிக்கள் நாட்டு விழாவுக்குப் பிறகு சர்வகலாசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உரைத் தொடர்களில் காந்திஜியும் ஒரு சொற்பொழிவாற்றினார். அப்போது அவர் ஒரு நகரம் முழுவதையும் பயப்பிராந்தியில் ஆழ்த்தித்தான் வைஸ்ராயைக் காப்பாற்ற முடியும் எனில், இதைக் காட்டிலும் அந்த வைஸ்ராயைத் துப்பாக்கி கொண்டு சுட்டு விடுவதே கௌரவமாக இருந்திருக்கும் என்று தைரியமாகக் கூறினார். காந்திஜி இப்படிக் கூறுகையில் அவைத் தலைவர் அவரை இடைமறித்தார். ஆனால் பேச்சைக் கேட்பவர்களோ உற்சாகத்துடன், ''நிறுத்தாமல் பேசுங்கள், மேலும் பேசுங்கள்'' என்று கோஷித்தனர். காந்திஜி பேச மறுத்தார். தலைவருக்குப் பணிந்து நடக்க வேண்டியதே தமது கடமை என்று கூறி விட்டார். மீண்டும் அவர் அநுமதித்ததற்குப் பிறகே காந்திஜி பேச்சைத் தொடர்ந்தார். தைரியம், ஒழுக்கக் கட்டுப்பாடு இரண்டுக்கும் இச் சம்பவம் ஒரு சான்று.



(முன்பு தாம் பேசிய ரீதியிலேயே உரையைத் தொடர்ந்தார் காந்திஜி. உடனே அக்கிராசனரும், மற்றப் பிரமுகர்களும் வெளியேறினர். கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.)

மகாத்மாவின் அடுத்த சிறப்பியல்பு அவரது பொறுப்புணர்ச்சி. சிறிய விஷயமாயினும் சரி, பெரிய விஷயமாயினும் சரி — அவர் தாம் எடுத்துக் கொண்ட காரியத்தில் மிகவும் நுணுக்கமாகத் தமது பொறுப்பை நிறைவேற்றினார். காந்திஜி தம்முடைய பொறுப்பில் இம்மியும் சளைக்க மாட்டார் என்பதில் எவருக்குமே ஐயம் இருந்ததில்லை. ஆனால் நாம் அனைவரும் மிகவும் பொறுப் பற்றவர்களாக இருக்கிறோம். நம்மில் யாரையும் எவராலும் எந்த விஷயத்திலும் நம்ப முடியாமலிருக்கிறது. நம்முடைய சமூக வாழ்வில் காணப்படும் குழப்பத்துக்கும், பொருளாதார வாழ்வில் காணும் ஊழலுக்கும், கலப்படத்துக்கும் பெரும்பாலும் இதுவேகாரணம்.

ஒரு பழைய நிகழ்ச்சியை நினைவுகூருகிறேன். என் நண்பரின் பெண் குழந்தை தனக்கு மகாத்மாஜியின் கையெழுத்தைப் பெற்றுத் தர வேண்டும் என்று என்னிடம் கேட்டுக் கொண்டிருந்தாள். மிகவும் பரபரப்பாகக் காங்கிரஸ் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. காந்திஜியுடன் ஒரு வார்த்தை பேச எனக்கு வாய்ப்புக் கிட்டுகிறது. அப்போது அந்தச் சிறுமியின் ஆசையைச் சொல்லி அவளது கையெழுத்து நோட்டுப் புத்தகத்தை அவரிடம் நீட்டினேன். அவர் அதை வாங்கிக் கொண்டார். ''இது என்னிடம் இருக்கட்டும். ஆனால் நான் கையால் தயாரித்த காகிதத்தில்தான் கையெழுத்துப் போடுவது வழக்கம். அப்படிப்பட்ட நோட்டுப் புத்தகம் வாங்கி, அதில் கையெழுத்திட்டு, அதையும் இந்த நோட்டோடு சேர்த்துத் திருப்பி அனுப்புகிறேன்'' என்றார். காந்திஜியின் எண்ணற்ற அலுவல்களில் இந்த விஷயத்தை அவர் நினைவாகக் கவனிப்பாரோ, அவரிடம் ஏற்கனவே பல பிரமுகர்கள் கையெழுத்திட்ட நோட்டைக் கொடுத்து விட்டு அது எங்கேனும் தவறிவிடப் போகிறதே என்றெல்லாம் எனக்கு உதைப்பு.

ஆயினும் அவரிடம் எப்படி மறுத்துப் பேச முடியும்? அவர் சொன்னதையே செய்து விட்டு, விடைபெற்றுக் கொண்டேன். அவர் குறிப்புப் புத்தகத்தில்கூட இதைப் பற்றி எழுதிக் கொள்ளவில்லையே என்று எண்ணியபடி இருந்தேன். சிறிது நாட்கள் சென்றன. அவரிடமிருந்து ரிஜிஸ்தர் தபால் வந்தது. பழைய கையெழுத்து நோட்டோடு, புதி

தாகக் கையால் தயாரித்த காகிதங்களைக் கொண்ட ஒரு நோட்டுப் புத்தகமும் அதில் இருந்தது. புதிய நோட்டில் அவரது கையெழுத்தும் இருந்தது. சிறியதோ, பெரியதோ தாம் சொன்னதை எப்போதும் பொறுப்புடன் நிறைவேற்றியவர் காந்திஜி. நாமும் இந்த அம்சத்தில் அவரைப் பின்பற்றலாம்.

அடுத்தபடியாக மகாத்மாஜியின் கடும் உழைப்பைக் குறிப்பிட வேண்டும். ஒரு நாளில் மூன்று நாள் காரியத்தை முடித்தவர் அவர். நாள் முழுதும் வேலை செய்தார். தமது பலபடித்தான பணிகளில் எல்லாத் துறைகளிலும் விடாமல் கவனம் செலுத்தினார். அவற்றில் ஈடுபட்டுள்ள எல்லாத் தொண்டர்களுடனும் இடையறாமல் தொடர்பு கொண்டிருந்தார். ஆனால் நாமோ சோம்பேறிக் கூட்டமாக இருக்கிறோம். உருப்படியாக ஏதும் செய்யாமலே பெரும்பாலும் பொழுதைப் பாழாக்குகிறோம். அவர் போல் உழைக்க நம்மால் இயலாதிருக்கலாம். ஆயினும் இப்போது நாம் செய்வதைவிட அதிகம் உழைக்க நிச்சயமாக நம்மால் முடியும். 'இதெல்லாம் மகாத்மாக்களுக்கே முடிந்த விஷயம்' என்று இருந்து விடாமல் நாம் நமது சக்திக்குத் தகுந்த அளவில் உழைப்பை நல்கியே ஆக வேண்டும்.

ஒழுக்கத்துக்குக் கட்டுப்பட்ட தீரம், பொறுப்புணர்ச்சி, உழைப்பு இம்மூன்றையும் காந்திஜியின் வாழ்விலிருந்து நாம் படிப்பினைகளாகக் கொள்வோம்; தீரர்களாக, பொறுப்புள்ளவர்களாக, உழைப்பாளிகளாக ஆவோம். முக்கியமாக, அடுத்த தலைமுறையினருக்கு இளமையிலேயே இந்த இயல்புகளைப் பயிற்றுவித்து விட்டால் பிற்பாடு அவை நன்கு நிலைத்து நிற்கும்.

பரந்த உலகெங்கும் காந்திஜியின் பணி பரவியது போல் நம்மால் செயலாற்ற முடியாதாயினும், நம் சிறிய வட்டாரத்துக்குள் உபயோகமாகப் பணி புரிய நம்மாலும் முடியும். மக்கட் குலம் முழுதற்கும் அவர் போல் நம்மால் பயன் தர முடியாவிடினும், நமது வாழ்வு எந்தச் சமூகத்திடையே அமைந்துள்ளதோ அதற்குப் பயன் தருமாறு நம்மால் வாழ முடியும். மகாத்மாஜி தாம் செய்த காரியங்களாலும், தாம் மக்களை அணுகிய விதத்தாலும் நமக்குப் பெரிய போதனையை விட்டுச் சென்றிருக்கிறார். அவற்றைப் பின்பற்றுவதே நமக்கு மேன்மை.




"வீட்டு வேலை செய்யணும் மாசம் என்ன கேட்கறே?"
"வீட்டு வேலைக்குப் பத்து ரூபா. உங்க வீட்டுச் சமாச்சாரங்களை மற்ற வீடுகளில் சொல்லாமே இருக்கணும்னு அதுக்கு ஐந்து ரூபா. மற்ற வீட்டுச் சமாச்சாரங்களை இங்கே வந்து சொல்லணும்னு அதுக்குப் பத்து ரூபா."



"என்ன ஸார்! வயலின் வித்வான் கொட்டாங்கச்சியில் செய்த வயலினை வாசிக்கிறாரே, எப்படி எடுபடும்?"
"என்ன பண்றது? தேங்காய் மூடிக் கச்சேரிக்கு எடுத்துண்டு போவதற்கு மட்டும் இது மாதிரி வயலின் தயாரித்து வைத்திருக்கிறாராம்!"

- சுதாகரன்





கண்டக்டர்: "மன்னிக்கணும். பேசி முடித்தாகி விட்டதா?"
"ஏன் கேட்கிறீங்க? டிக்கெட் வாங்க மறந்துட்டோமா என்ன?"
"அதுக்கில்லே; பஸ்ஸை ஷெட்டில் கொண்டு விடணும்!"



"பட்டாணிக் கடலை வாங்கிட்டுப் போங்க... சூடு இல்லேன்னு காசு கொடுக்க வேண்டாம்."
"அப்போ சூடு இல்லாத பட்டாணியே கொடு போதும்.... என் கிட்ட காசு இல்லே!" -சுதாகரன்

வித்யாபவனின் முத்தான பணி





மேலே: ராஷ்டிரபதி வி. வி. கிரி தமது உரையைப் படிக்கிறார். அருகில் அமர்ந்திருப்போர் ஸ்ரீ கே.எம். முன்ஷியும் ஸ்ரீ ஜீவராஜ் மேத்தாவும்.
கீழே: பவன்ஸ் ஜர்னல் பிரதம நிர்வாகி ஸ்ரீ ராமகிருஷ்ணன் ராஷ்டிரபதிக்குப் புத்தகங்களை வழங்குகிறார்.

பம்பாய் பாரதிய வித்யா பவனத்தார் சமீபத்தில் பிரசுரித்துள்ள ஐந்து அருமையான புத்தகங்களை ராஷ்டிரபதி டாக்டர் வி. வி. கிரி அவர்கள் பம்பாயில் சென்ற 29—12—69ல் வெளியிட்டார்.

காந்தி மகானுக்கும் பம்பாய் நகரத்தாருக்கும் எவ்வளவோ விதங்களில் நெருங்கிய தொடர்பு. பாரத நாட்டின் சரித்திரத்தை மாற்றி அமைக்கும்படியான ஒத்துழையாமை இயக்கம் (1919) ''வெள்ளையனே வெளியேறு'' என்ற 1942 முடிவு எல்லாம் அங்குதான் எடுக்கப்பட்டன. இப்படிப் பல சம்பவங்களைத் தொகுத்து திரு கே. கோபால்சாமி ''காந்தியும் பம்பாயும்'' என்ற நூல் எழுதியிருக்கிறார்.

நமது அரசியல் நிர்ணய யாதாஸ்தில் 8வது பிரிவில் நமது தேசிய பாஷைகளாக அங்கீகரிக்கப்பட்ட பதினைந்து மொழிகளின் சென்ற நூற்றைம்பது வருடத்திய வரலாறும், அம் மொழிகளைச் செம்மைப்படுத்திய இலக்கியஆசிரியர்களின் அறிமுகமும் அவர்களது இலக்கியங்களிலிருந்து சிறந்த சில பகுதிகளையும் திரட்டிப் பதினைந்து அத்தியாயங்களாக வழங்கியிருக்கிறார் திரு கே. சந்தானம். கடைசி 16வது அத்தியாயமாக ஆங்கிலம் இவ்வெல்லா மொழியினரையும் எவ்வகையில் ஒன்றாக இணைக்கிறது என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்.

வி. பி. குல்கர்னி என்ற பிரபல பத்திரிகையாளர், ''இந்தியாவின் மும்மூர்த்திகள்'' என்ற தலைப்பில் காந்திஜி, நேருஜி, பட்டேல் ஆகிய மூவரும் இணைந்து இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் எப்படிப் பணியாற்றினர் என்பதனை ஓர் அரிய நூலாக வடித்துத் தந்திருக்கிறார்.

ராஜாஜி எழுதிய மகாபாரதம் ஆங்கிலத்தில் பத்தாவது வெளியீடாக வந்துள்ளது. இதுவரை இரண்டு லட்சம் பிரதிகள் (ஆங்கிலம்) விற்பனையாகியுள்ளன. இது முதன் முதலில் கல்கி நேயர்கள் 'வியாசர்விருந்து' என்ற பெயரில் படித்த புத்தகமே. இதை உலக மக்கள் ஆர்வத்தோடு இன்று லட்சக் கணக்கில் வாங்கிப் படிக்கிறார்கள் என்பது ஒவ்வொரு தமிழனுக்கும் பெருமிதமூட்டக்கூடிய விஷயம். ராஜாஜி வழங்கிய விருந்தை உலக மக்களுக்குப் பரிமாறும் பெருமை பம்பாய் பாரதிய வித்யா பவனத்தாருக்குக் கிடைத்துள்ளது.

திருக்குறளை ஆங்கிலச் செய்யுள் வடிவில் யாத்த பெருமை ஸ்ரீ கே. ஸ்ரீநிவாஸன் அவர்களுடையது. இந்த ஆங்கிலத் திருக்குறளும் அன்று வெளியிடப்பட்டது.

இந்த வெளியீட்டு விழாவில் பம்பாய் பிரமுகர்கள் மட்டுமின்றி மற்ற பல இந்திய நகரங்களிலிருந்தும் முக்கியஸ்தர்கள் வந்து கலந்துகொண்டனர்.

டாக்டர் திவாகர், காந்தி நினைவு நிதிக்குழுவின் தலைவர் என்ற முறையிலும், பாரதிய வித்யா பவனத்தின் புத்தக வெளியீட்டுப் பிரிவின் பொது ஆசிரியர் என்ற முறையிலும் விழாவில் பங்குகொண்டார்.

பாரதிய வித்யா பவனத்தின் உயிர்நாடியாக விளங்கும் டாக்டர் கே. எம். முன்ஷி தமது கனவுகள் நனவாவதை எல்லாருடனும் பகிர்ந்து மகிழ்ந்தார். பாரதப் பண்பாடு வாழ்க! பாரதிய வித்யாபவனம் வளர்க!



ராமாயணம்

ராஜாஜி

ஒரு காலத்தில் விந்திய மலை வளர்ந்து மிக உயர்ந்து கொண்டே போய், சூரியனுடைய தக்ஷிணாயன உத்தராயணப் போக்கைத் தடுப்பதாகப் பயந்து அகஸ்தியரைத் தேவர்கள் இறைஞ்சினார்கள் என்றும், முனிவர் விந்திய மலைக்கு எதிரில் நின்ற போது மலை தெண்டனிட்டு வணங்கிற்று என்றும், முனிவர் ''நீ என்றென்றைக்கும் இவ்வாறே குறையாமல் இருப்பாய்!'' என்று ஆசீர்வதித்தார் என்றும், அதனால் விந்திய மலை மிக நீண்ட மலையாய்ப் படுத்துக் கிடக்கிறது என்றும் சொல்லுவார்கள்.

வாதாபி, இல்வலன் என்ற இரண்டு அரக்கர்கள் ரிஷிகளை மிகவும் தொந்தரவு செய்து கொண்டிருந்தார்கள். வாதாபி ஒரு வரம் பெற்றிருந்தான். அவன் உடல் எவ்வளவு வெட்டித் துண்டு துண்டாகச் செய்யப்பட்டாலும் பிறகு ஒன்றுசேர்ந்து உயிருடன் தோன்றும் என்கிற வரம் பெற்றிருந்தான். இல்வலன் ரிஷிகள் ஆசிரமத்துக்குப் பிராமண வேஷம் தரித்துப் போவான், ''சுவாமி! என் இல்லத்துக்கு வந்து சிராத்த போஜனம் பெற்றுக் கொண்டு ஆசீர்வதிக்க வேண்டும்'' என்று கேட்பான். சாஸ்திர விதிப்படி இத்தகைய விண்ணப்பத்தை எந்தக் காரணம் கொண்டும் மறுக்கக் கூடாது. ரிஷிகள் போய்ச் சிராத்தமும் போஜனமும் முடிந்த பிறகு, 'திருப்தியா?' என்று இல்வலன் சிராத்த விதிப்படி கேட்பான். அவர்களும் வழக்கப்படி, ''திருப்தி'' என்பார்கள். அப்போது இல்வலன், ''வாதாபி! வெளியே வருவாய்'' என்பான். வாதாபி வஞ்சகமாக ஆட்டு உடல் தரித்து வெட்டிச் சமைக்கப்பட்டு, சிராத்த போஜனத்துடன் பித்ருக்கள் திருப்திக்காக போஜனம் உண்டவர்களுடைய வயிற்றிலிருப்பான். இல்வலன் 'வா' என்றதும் வயிற்றிலிருந்த வாதாபி பிராமணருடைய வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்து விடுவான். இம்மாதிரி பல ரிஷிகள் மாண்டார்கள். வாதாபி தான் அடைந்த வரத்தின் நிபந்தனைப்படி ஆயுதமின்றியும் எதிர் நின்று எதிர்க்காமலும் ரிஷிகளை இவ்விதமாகக் கொன்று வந்தான்.

ஒரு நாள் அகஸ்தியரை இந்த வஞ்சக முறையில் சிராத்தத்துக்கு இல்வலன் அழைத்தான். அவர்களுடைய சூழ்ச்சியின்படி வாதாபி அகஸ்தியருடைய வயிற்றுக்குள் சிராத்தப் போஜனத்துடன் மேஷ மாமிசமாகப் பிரவேசித்தான். அகஸ்தியருக்கு இது தெரியும். அவர் கணபதியை உபாசித்து அடைந்திருந்த சக்தியினால் அரக்கனை முற்றிலும் ஜீரணித்துவிட்டார்.



''திருப்தியா?'' என்று கேட்டான் இல்வலன்.

''ஆகா! திருப்தி!'' என்றார் அகஸ்தியர்.

''வாதாபி, வெளியே வா!'' என்றான் இல்வலன்.

அகஸ்தியர் சிரித்தார். ''வாதாபி ஜீரணமாய்ப் போனானே'' என்றார்.

இதைக் கேட்ட இல்வலன், '' என் சகோதரனைக் கொன்றீரா ?'' என்று ரோஷத்துடன் அகஸ்தியர் பேரில் பாய்ந்தான். அகஸ்தியருடைய கோபப் பார்வையினால் அந்தக் கணமே இல்வலன் எரிக்கப்பட்டான்.

அகஸ்தியர் இருந்த இடத்தில் எந்த ராக்ஷசரும் வரமாட்டார்கள். அவர் மற்ற முனிவர்களுக்குப் பெருங் காப்பாக இருந்தார்.

* * *

இராமன் அகஸ்தியருடைய தம்பியின் ஆசிரமத்துக்குச் சென்று முனிவரைக் கண்டு ஆசி பெற்றுக் கொண்டு அகஸ்தியர் இருப்பிடம் சென்றான். தெற்கே சென்று அவர் ஆசிரமம் இருந்த இடத்தை அடைந்து தூரத்திலிருந்தே அந்தப் பிரதேசத்தின் காந்தியையும், மிருகங்களும் பறவைகளும் பயமின்றி விளையாடிக் கொண்டிருந்ததையும், பிராமணர்கள் பூஜைக்குப் புஷ்பம் கொய்து கொண்டிருப்பதையும் பார்த்து மகிழ்ச்சியடைந்தான்.

''லக்ஷ்மணா! நீ சென்று முனிவருக்குத் தெரியப்படுத்தி உத்தரவு பெறுவாய்'' என்றான் ராமன்.

இளையவன் சென்று முனிவருடைய சீடன் ஒருவன் மூலம் ''தசரத குமாரன் ராமசந்திரனும் தம்பியும் ஜானகியும் முனிவரின் ஆசியைப் பெற்று மேன்மையடைய வந்து காத்திருக்கிறார்கள்'' என்று சொல்லி அனுப்பினான்.



ஐயே! மெத்தக் கடினம்!

அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் தமது வாழ்க்கையில் ஏற்பட்ட ஆறு நெருக்கடி நிலைமைகளை வர்ணித்து Six Crisises என்று ஒரு நூல் எழுதியிருக்கிறார். இப்புத்தகத்தை ஒருநாள் ஒருவர் கடையில் வாங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். சந்தோஷத்துடன் அவரிடம் சென்று, "நான்தான் இப்புத்தகத்தின் ஆசிரியன். தாங்கள் விரும்பினால் உங்கள் பெயரை எழுதி அதனடியில் கையெழுத்திட்டுத் தருகிறேன்" என்றார். மற்றவர் சரியென்று தலையாட்ட, நிக்ஸன் அவருடைய பெயரைக் கேட்டார். மற்றவர் சொன்னார்: "ஆறு நெருக்கடி நிலைமைகளை இப்புத்தகத்தில் விவரித்திருக்கிறீர்கள். இதோ ஏழாவது நெருக்கடி. என் பெயர் ஆண்ட்ரியோவ் நிக்கலோவ் கபிரியோவ்! எழுதுங்கள் பார்க்கலாம்!"

— மோகன்.



அனுமதி தந்ததுடன் முனிவரே எழுந்து அவசரமாகச் சக்கரவர்த்தித் திருமகனை வரவேற்றுக் கிரமப்படி உபசரித்து ஆலிங்கனம் செய்தார். "நீங்கள் சித்திரகூடம் வந்தபோதே எனக்கு விஷயம் தெரிந்தது. எப்படியும் ஒரு நாள் நீங்கள் வருவீர்கள் என்று இவ்வளவு காலம் எதிர்பார்த்துக்கொண்டேயிருந்தேன். நீங்கள் எடுத்துக்கொண்ட விரதம் பூர்த்தியாகும் காலம் சமீபித்தது. இவ்விடம் நீங்கள் சுகமாக இருக்கலாம். இங்கே ராக்ஷசர்களுடைய தொந்தரவு இல்லை" என்றார்.

"முனிவருடைய ஆசி பெற்று நான் பாக்கியவான் ஆனேன்! ஆனால் நான் தண்டகாரண்ய ரிஷிகளுக்கு வாக்குத் தந்திருக்கிறேன். முனிவருடைய ஆசி பெற்றுக் கொண்டு நான் தண்டகாரண்யம் திரும்ப வேண்டும்" என்றான் ராமன்.

"நீ சொல்வது சரியே!" என்று அகஸ்தியர் சொன்னார்.

பிறகு அகஸ்தியர் ராமச்சந்திரனுக்கு மகாவிஷ்ணுவுக்காக விசுவகர்மா செய்த வில்லும், என்றும் குறையாத அம்பறாத் தூணியும், கத்தியும் தந்தார். "ராமனே! ராக்ஷசர்களை ஒழிப்பாயாக. முன் மகாவிஷ்ணுவானவர் இந்த ஆயுதங்களைத் தரித்தார். நீயும் இவற்றைத் தரித்து அவர்களை ஒழிப்பாயாக" என்று ஆசீர்வாதம் செய்தார்.

பிறகு அகஸ்தியரை யோசனை கேட்டுச் சக்கரவர்த்தித் திருமகன் பஞ்சவடியில் ஆசிரமம் அமைத்துக்கொண்டு அங்கே மீதியிருந்த வனவாச காலத்தைக் கழிப்பது என்று தீர்மானித்தான்.

"ராஜ குமாரர்களே! போய் வாருங்கள். சீதையை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அவள் காட்டில் வசிக்கத் தகாத ராஜகுமாரி. ராமனே உன்னிடம் அவளுக்குள்ள பிரீதியால் கஷ்டங்களைப் பொருட்படுத்தாமல் வனவாசம் செய்து வருகிறாள். பெண்கள் சாதாரணமாகச் சுகத்தையே விரும்புவார்கள். கஷ்ட நிலையை விட்டு அகல்வார்கள். ஸ்திரீகளுடைய உள்ளம் மின்னலைப் போல் சஞ்சல சுபாவமும், கத்தியைப் போன்ற கூர்மையும் கருடனையும், வாயுவையும் போன்ற விரைவும் படபடப்பும் கொண்டது. இவையெல்லாம் சாதாரணமாகப் பெண்களின் சுபாவத்தில் உள்ள தோஷங்கள். இது ஈசுவர சிருஷ்டி. ஆயினும் சீதையினிடத்தில் இந்தத் தோஷங்கள் இல்லை. அருந்ததியைப் போன்றவள். ராமச்சந்திரனே! லக்ஷ்மணனுடனும் வைதேகியுடனும் நீ எங்கே இருந்தாலும் அந்த இடம் அழகு பெறும். பஞ்சவடி மிகச் சுந்தரமான இடம். உணவுக்கு வேண்டிய பழமும் கிழங்கும் கிடைக்கும் இடம். அவ்விடத்தில் இருங்கள். கோதாவரி நதிக் கரையின் அழகை சீதை மிக அனுபவிப்பாள். சீதையையும் ரிஷிகளையும் அவ்விடம் நீ இருந்துகொண்டு ஜாக்கிரதையாகக் காப்பாற்றுவாயாக. தசரத சக்கரவர்த்தி உனக்கு விதித்த விரதகாலம் முடிந்து வருகிறது. யயாதியைப் போல் தசரதனும் மூத்த மகனை உன்னால் கடைத்தேறினான்."

இவ்வாறு மகா ஞானி அகஸ்தியர் ராம லக்ஷ்மணர்களையும் சீதையையும் மிக்க அன்புடன் திரும்பத் திரும்ப ஆசீர்வதித்துப் பஞ்சவடிக்கு அனுப்பினார்.

(தொடரும்)

காந்தி மகராஜ்

ரவீந்திரநாத் டாகுர்

காந்தி மகராஜைப் பின்பற்றும், தலைவராகப் பின்பற்றும்
எங்களிடம் பொதுவான இயல்பு ஒன்று உண்டு.
ஏழையரைக் கொள்ளையடித்துப் பெற்றவையால்
எங்கள் பைகளை நிரப்ப மாட்டோம்.
பணக்காரர்முன் முழந்தாளிடவும் மாட்டோம்.

ஓங்கிய கையுடன், அச்சுறுத்தும் தடியுடன்
அவர்கள் எங்களை மிரட்ட வந்தால்
மலர்ந்த முகத்துடன் சொல்லுவோம் :
'முறைத்துச் சிவக்கும் உங்கள் விழி,
குழந்தைகளை வேண்டுமானால்
தூக்கத்திலிருந்து வெருண்டெழச் செய்யலாம்.
அஞ்ச மறுக்கும் எங்களை என்ன செய்யும்?'

எங்கள் சொற்கள் நேருக்கு நேரானவை, எளிமையானவை.
பொருளைத் திருக்கி வளைக்கும் சாதுரியமோ
தந்திரமோ, அவற்றில் இல்லை.
குற்றச் சட்டங்களை யெல்லாம் குழப்பிவிட்டு,
எளிதாக, மிக மிக எளிதாக,
சிறைச் சாலையின் விளிம்பிற்கு,
அவை எங்களைப் பலியாக அழைத்துச் செல்லும்.

சிறை வாசலுக்குப் போகும் வழியை
அடைத்து நெருக்கி இவர்கள் கூடி
வீசும் வசைகள் எல்லாம்,
மாசின்றி கழுவப் பெறும்.
எங்களுக்கு அவர்கள் பூட்டிய விலங்குகள்
கழன்று புழுதியில் விழும்.
அவர்கள் நெற்றியில், ஆம், அவர்கள் நெற்றியில்,
காந்திஜியின் ஆசி முத்திரை பொறிக்கப்பெறும்.

தமிழாக்கம்: பேராசிரியர் அ. சீ. ரா.




சிலையைத் தேடி.. 18
கதை: வாண்டுமாமா
என்னம்மா.. இவா சொல்றது நிசந்தானா?
அந்தப் பொண்ணு அப்படியெல்லாம் செய்யக்கூடிய தில்லீங்க...
நான் ஒன்றும் திருடவில்லை.. நான் எதையும் எடுக்கவில்லை.
சித்திரம்:
ஹரிதரன் சர்மாவும் போலீஸ்காரரும் போன பிறகு....
வெளியூர்க்காரங்க படகுக்கு அவங்க இல்லாத போது போகக்கூடாதம்மா. ரொம்பத் தப்பு. இனி இப்படியெல்லாம் செய்யாதே.
சரி, தாத்தா!
அன்றிரவு நீலாவுக்குத் தூக்கமே வரவில்லை.
தங்கப் புத்தர் சிலை இந்தப் பகுதியில்தான் எங்கோ மறைத்துப் பட்டிருக்க வேணும். இந்திய நாட்டைச் சேர்ந்த அவர் அதைத் தேடித்தான் இங்கு வந்திருக்கிறார். அவர் படகின் பெயர் கூட 'இலபுத்தா'தானே? அப்படியிருக்குமானால்... அவருக்கு முன்னால் நான் அந்தச் சிலையின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.


காலைக் கதிரவனின் ஒளி அந்தச் சாளரத்தின் வழியாக எவ்வளவு பிரகாசமாகச் சூலத்தின் மீது பாய்கிறது?
சூரிய ஒளி... அக்கா...!
இதோ பார். சூலத்தின் நிழல்.
சூலத்தின் நிழல் விழும் இடத்தில் நின்றால் கவலைகள் மறையும். நினைத்த காரியம் கைகூடும் — இப்படித்தானே டைரியின் குறிப்புக் கூறியது அக்கா? நிழல் விழும் இந்தக் கல்லின் அடியில் ஏதோ இருக்க வேண்டும். நாம் சரியான நேரத்துக்குத்தான் வந்திருக்கிறோம்.
உண்மைதான். காலையின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான் இதன் வழியாகச் சூரிய ஒளி பாயும்.
அங்கு கிடந்த ஓர் இரும்புக்கம்பியைக் கொண்டு அந்தத் தளவரிசைக் கல்லை நெம்பித் தூக்குகிறான் ரவி.
சுலபமாக நகர்த்த முடிகிறது அக்கா.
தூக்கு... இன்னும் கொஞ்சம்... ரவி அடியில்... இதன் கீழே ஏதோ கறுப்பாக இருக்கிறது... என்னால் இந்த ஆனந்தத்தைத் தாங்கமுடியவில்லையே!
பாவு கல்லின் அடியில் ஒரு தோல் பை இருந்தது. மடித்துப் போன அதனுள் ஒரு காகிதம். அதில் ஏதோ ஒரு வரைபடம். தங்கள் பின்னால் ஓர் உருவம் ஒளிந்திருப்பதை அவர்கள் கவனிக்கவில்லை......
இது ஏதோ ஒரு இடத்தைக் குறிக்கும் 'மேப்' போலிருக்கிறது ரவி.
ஏய்...! இது என்னது? யாரது...
அடே ரவி! அந்த 'மேப்'— அதை யாரோ பறித்துக் கொண்டு விட்டார்களடா!
தொடரும்...



பிரமாதமான மோஸ்தரில் கடாவ் வாயில்களில்
கடாவ்
வாயில்கள்

அத்தியாயம் 3

பொன்னம்மா மகிழ்ச்சியோடு தொடர்ந்தாள்.

''பார்த்தாயா! பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் ஆச்சு. இவனோட அப்பாவைப் பத்தி உனக்கு முன்பே தெரிஞ்சிருக்கு. அதோடு இப்ப உறவு முறையும் வந்தாச்சு. எப்பவுமே நான் கணக்கு வெக்கிற குறி சரியாத்தான் வரும். ஏதோ தெருவிலே போற பையனைப் பற்றிச் சொல்லித் திரியற வழக்கமில்லே எனக்கு... நான் சொன்ன பேச்சு உனக்கு ஏறலே.... உலக விவரம் தெரியாத பெண்கள் சொன்ன பேச்சுத்தான் காதுலே விழுந்தது!''

இலேசாகச் சூடு கொடுப்பது போலும் இருந்தது அவள் பேச்சு.



''அடாடா, நீ ஏதேதோ பேசுகிறாயே! இந்தப் பையனை எனக்கு முன்பு தெரியாது. இப்போ யாரென்று தெரிந்துவிட்டது.''

''நான் இல்லாவிடில் ரூப குமார் இங்கே வந்திருக்க முடியுமா? உங்க ரெண்டு பேருக்கும் பரிச்சயம்தான் ஏற்பட்டிருக்குமா?''

''இனிமே அடிக்கடி இந்தப் பக்கம் வந்துபோப்பா.'' கோசல்ராம் கூறினார்.

''உங்களைப் போன்ற பெரிய மனிதரைச் சந்திக்கும் வாய்ப்போடு உறவு முறையும் கிட்டியிருக்கிறதே! அது என் பாக்கியமே! இனிமேல் அடிக்கடி வருகிறேன்.''

''இந்தாப்பா ரூபகுமார், நீபாட்டுக்கு நினைச்ச நேரத்திலே வந்து நிக்காதே. கோசல்ராம் இருக்கிற நேரம் பார்த்து மட்டுமே வரணும், தெரிந்ததா?''

ரூபகுமார் மெள்ள நகைத்தான்.

''ஆமா! உனக்கு ரமாவையும் காந்தியையும் எப்படித் தெரியும்?'' பொன்னம்மா கேட்டாள். இப்போதுதான் அந்தக் கேள்வி கேட்க வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது.

''வாசுவைத் தெரிந்தவர்களுக்கு ரமாவை எப்படித் தெரியும் என்று கேட்கவே வேண்டாம். ஆபீஸ் விட்டதும் அநேகமாக மாலை வேளைகளில் இருவரையும் சேர்ந்தே பார்க்கலாம். ஒரு முறை ரமாவோடு காந்தியையும் சந்தித்தேன். காந்தி தன் தங்கை என்று ரமாதான் அறிமுகம் செய்துவைத்தாள். ஏன் மாமா, உங்களிடம் வாசுவைப் பற்றி ரமா இன்னும் சொல்லவில்லையா?'' மாமா உறவு கொண்டாடிக் கேட்டான் ரூபகுமார்.

''நன்னாத்தான் கேட்டே, போ! வாசுவைப் பத்தித் தான்சொல்லி வச்சிருக்கா! நானும் உன் மாமா கிட்டே அதைத்தான் சொல்றேன்.'' பொன்னம்மா பதிலுரைத்தாள்.

''வாசுவோடு நெருங்கின பழக்கம் உண்டா?'' கோசல்ராம் கேட்டார்.


''உண்டு. அவன் ஆபீஸிலும் நான் ஒரு டைரக்டர். அந்த முறையில் சில சமயம் நான் அங்கு போவதுண்டு. அவனோடு பேசுவதும் உண்டு. இப்படியாக ஏற்பட்ட பழக்கம்தான்.''

''அப்படியானால் வாசு எந்த நிலையில் இருப்பவன், எப்படிப்பட்ட குணம் உள்ளவன்? — எல்லாவற்றையும் தெளிவாகச் சொல்லிவிடு. உறவு முறை தெரிந்த பிறகு எதையும் மறைக்காதே!'' என்றாள் பொன்னம்மா அழுத்தமாக.

''வாசு நல்ல பையன்தான்...'' ரூப குமார் கூறினான்.

பொன்னம்மா திடுக்கிட்டுத் திணறினாள். இப்படி ஒரு பதிலையா அவனிடம்

அவள் எதிர்பார்த்தாள்? வாசுவைப் பற்றி அவன் பல அவதூறுகள் கூறுவான், அதிலிருந்து கோசல்ராமின் மனம் மாறும் என்றல்லவா நினைத்திருந்தாள்? அவள் வாசுவைப் பார்த்ததில்லை. அவன் குணமோ குறைபாடோ அவளுக்கு ஒன்றும் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆயினும் அவன் பெயரை எடுத்தாலே அவளை அறியாமல் அவளுக்கு ஒரு சீற்றம்! ரமா அவனைப் பற்றித் தெளிவாகக் கூறுதது வேறு சேர்ந்து கொண்டது. தன் மனப் போக்கைப் போலவே அவள் மற்றவர்களது மனப் போக்கையும் எதிர் நோக்கினாள். வாசுவைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கூற ஒருவருக்குமே உரிமை இல்லை; அப்படிக் கூறுவது முறையும் அல்ல என்பது அவள் போக்கு. அதற்கேற்றாற் போல் அன்றைய தினம் ரூபகுமார் வாசுவைப் பற்றிப் பேச்செடுத்தபொழுது அவன் ஏதாவது கெடுதலாகக் கூறுவான்; அதைக் கேட்க வேண்டியிருக்கும் என்று அஞ்சியே ரமா உள்ளே ஓடிவிட்டிருக்கிறாள் என்று அவள் நினைத்திருந்தாள். எனவேதான் அவள் துணிவோடு வாசுவின் குணத்தைப் பற்றிக் கூறும்படி குமாரிடம் கூறினாள். கடைசியில் பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காய் முடிந்த கதையாயிற்று. ஆயினும் அத்துடன் அவள் விட்டுவிடத் தயாராக இல்லை. ''உன்னிடம் நல்ல பையனாகத்தான் நடந்து கொண்டிருப்பான். நீ அவனுக்கு முதலாளியாச்சே!'' பேருண்மையைக் கண்டுபிடித்தவள்போல் கூறினாள்.



ரூபகுமார் சிரித்துவிட்டான். ''ஒரு போடு, போட்டீங்களே, பெரியம்மா! நானும் அதையேதான் சொல்ல வந்தேன். எனக்குத் தெரிந்த வரைக்கும் நல்ல பிள்ளைதான். மருமகன் என்ற முறையில் எப்படி இருப்பானோ?'' என்றான் அவன்.


''இதுதான் சரியான வார்த்தை... அது கிடக்கட்டும், சொத்து சுதந்திரம் ஏதாவது...'' இழுத்தாள் பொன்னம்மா.

''அந்த நிலவரம் நல்லா இருந்தால் இந்த முந்நூறு ரூபாய்ச் சம்பளத்துக்கு எதுக்கு வரப் போறான்? சொந்த வியாபாரம் ஏதாவது ஆரம்பித்திருக்க மாட்டானா?'' என்றான் ரூபகுமார்.

ஆனந்த மழை பெய்வதுபோல் இருந்தது பொன்னம்மாவுக்கு. ''கேட்டுக்க, கோசல்!'' என்றாள்.

''அவனுக்குத் தந்தை கிடையாது. ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை. மிகக் கஷ்டப்பட்டு முன்னுக்குக் கொண்டு வந்திருக்கிறாள். ஆபீசில் கடன் வாங்கித்தான் அவன் ஸ்கூட்டர் கூட வாங்கினான்'' என்றான் ரூபகுமார்.

''நல்ல அழகுதான், போ. சம்பளத்தைத் தவிர கையிலே சல்லிக் காசு கிடையாது. அம்மாவை வேறு காப்பாற்றியாகணும். மருமகனை வீட்டோடு வைத்துக் கொண்டு அவன் அம்மாவை எங்கேயாவது கொண்டு தள்ளிவிட முடியுமா? கோசல்ராமோ நல்ல பதவியில், நல்ல கௌரவத்திலே இருக்கான். அவனுக்குத் தகுந்த சம்பந்தம் வர வேண்டாமோ? பந்தல்லே நின்னுக்கிட்டு 'இவருதான் என் சம்பந்தி'ன்னு யாரைக் காட்டுவானாம்? அல்லது மாப்பிள்ளையாவது நல்ல ஒசந்த வேலையிலிருந்தாலும், 'இந்தப் பெரிய வேலையில் இருப்பவன்'னு வரவங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கலாம். இந்தப் பிள்ளை வாசுவைக் காட்டி இவன் என்ன சொல்லிக்க முடியும்? உன்னைப் போல் ஒரு அந்தஸ்து உள்ளவன்



மாப்பிள்ளையாக வந்தாத்தான் குலத்துக்கும் பெருமை, குடும்பத்துக்கும் பெருமை'' என்று ஒரே மூச்சில் கூறிப் பெருமூச்செறிந்தாள் பொன்னம்மா.

அவள் கூறிய கடைசி வார்த்தையினால் குமாருக்கும் கோசல்ராமுக்கும் மனத்தில் ஏதோ தனி விழிப்பு ஏற்படுவது போல் இருந்தது.

ரூபகுமார் வாசுகவையும் ரமாவையும் அடிக்கடி சேர்ந்து சந்தித்திருக்கிறான். ரமாவின் அழகில் கிறக்கம் கொண்டவனாயினும் ரமாவையும் வாசுகவையும் பிரிப்பது இயலாத காரியம் என்பதை உணர்ந்திருந்தான். வாசுவும் ரமாவும் சந்திக்க இயலாதபடி ஆபீஸ் பணிகள் மூலமாக அவன் பலமுறை தடங்கல் விதித்திருக்கிறான்; அதில் இன்பமும் கண்டிருக்கிறான். ஆனால் வாசுவோ ரமாவோ ரூபகுமாரிடம் நெருங்கிப் பழக விரும்பியதில்லை. அவன் பேச்சிலிருந்து ரமாவின் மீது அவன் மனம் ஈடுபாடு கொண்டுள்ளது என்பதையும் அவ்விருவரும் அறிவார்கள். அதனால்தான் உறவு முறை காட்டி அவன் வீட்டில் நுழைந்தபோது ரமா தன் மனக் கசப்பை வெளியிட்டாள். ரூபகுமாரைப் பற்றி அவள் அடிக்கடி காந்தியிடம் கூறியிருக்கிறாள். ஆதலால் காந்தியும் அவன் வெறுப்புக்குரியவன் என்றே எண்ணினாள். சகோதரியோடு சேர்ந்து ரூபகுமாரை அலட்சியமும் செய்தாள்.

அவர்கள் அலட்சியம் செய்ததிலிருந்து ரூபகுமார் ஓரளவு மனக் கசப்பு அடைந்திருந்தான். ஆனால், அதை வெளிக்குக் காட்டவில்லை. இன்று பொன்னம்மா பணத்தின் மூலம் எதையும் சாதிக்க முடியும் எனக் குறிகாட்டியதும் அவனுக்கு மீண்டும் ஒரு பிடிப்பு ஏற்பட்டது. மேலும் கோசல்ராமின் தொழிலை அவன் அறிந்து கொண்டு விட்டான். அவர் போன்ற வியாபாரிகள் பணம் இருக்கும் இடத்தைப் பெரிதும் நாடுவார்கள் என்பதை உணர்ந்தபொழுது, தன் காரியம் கை கூடலாம் எனத் தோன்றியது. பெரியம்மா பலே கெட்டிக்காரி! எவ்வளவு சாதுரியமாக அவனை இங்கு இழுத்து விட முயலுகிறாள்! நினைக்கவே நெஞ்சில் இனித்தது!

அவனது யோசனை என்ற அம்பு, எந்தக் குறியில் பாய்ந்து கொண்டிருந்ததோ, அந்தக் குறியில்தான் நின்றிருந்தார் கோசல்ராம். ரமாவும் வாசுவும் ஒருவரை யொருவர் நேசித்ததைத் தமது வியாபார நோக்கில் அவர் இதுவரை கருதிப் பார்க்கவில்லை. விவாகத்துக்கெனச் சீர் செனத்தி இருக்கப் போவதில்லை, வரன் தேடும் கஷ்டமும் நமக்கு இருக்காது. இருவரும் அவர்கள் விருப்பப்படி விவாகம் செய்து கொள்ளட்டும் என்றுதான் நினைத்திருந்தார். ஆனால் பொன்னம்மாவோ இப்பொழுது அவர் கண்களை வேறு திசையிலும் திருப்பிவிட முயன்று ஓரளவு வெற்றியும் கண்டுவிட்டாள்.

அவரது வியாபாரப் பாதையிலேயே மகளின் விவாகத்தையும் முடிக்கும்படி சகோதரி யோசனை கூறுகிறாள். அதில் அவருக்கு எத்தனை நன்மைகள்! அவர் முன்பே தம் வியாபாரத்தைப் பெருக்க எவ்வளவோ திட்டங்கள் வகுத்து வைத்திருந்தார். அத்திட்டங்களுக்குப் பண உதவி முக்கிய கட்டமாக இருந்தது. அவருடைய பணமெல்லாம் பல பங்குகளில் முடங்கிக் கிடந்தது. லாபம் காட்டிய அப்பங்குகளை அவர் விற்கவும் விரும்பவில்லை. ரூபகுமார்போன்ற ஒருவன் மருமகனாக வந்தால்... அல்லது ரூபகுமாரே மருமகனாக வந்தால்.. மருமகன் மாமனாரின் திட்டங்களுக்கு உதவுவான். 'பிள்ளை இல்லாத வீடு. ஆகையால் போடும் பணம் கடைசியில் நமக்கே உரிமையாகும்' என்ற நம்பிக்கையும் அவனுக்கு இருக்கும். ரூபகுமார் பார்ப்பதற்கும் நன்றாக இருக்கிறான். ரமாவுக்கும் குறை இருக்காது. மகளிடம் இதைத் தெளிவாகக் கூறினால் ஒப்புக்கொள்ளாமல் இருந்து விடுவாளா?

எண்ணங்களில் ஈடுபட்டு விட்டார் கோசல்ராம். ஆனால் வாய் திறந்து பேசவில்லை. சிறிது நேரம் பொறுத்து ரூபகுமாரைக் கட்டாயப்படுத்தி அங்கேயே சாப்பிடச் சொன்னார்.

ரூபகுமார் விடை பெற்றபோது வாசல் வரையில் வந்த பொன்னம்மா, ''டேய், ரூபகுமார், ரமாவை மணந்து கொள்கிற வழியைப் பார். சும்மா பைத்தியம் மாதிரி வாசுவைப் பற்றி உயரத் தூக்கி வைத்துப் பேசாதே!'' என்று அறிவுறுத்தினாள்.

ரூபகுமாரின் கார் ஒரு கேட் வழியாக வெளியே சென்றபோது மற்றொரு கேட் வழியாக வசந்தி, ரமா, காந்தி மூவரும் வந்த கார் உள்ளே நுழைந்தது.

• • •

ஆனந்த் வரைந்திருந்த சித்திரம் ஒன்றைச் சேதுபதி உற்று நோக்கி, ''என்னப்பா, இது? ஒன்றுமே புரியவில்லையே!'' என்றார்.

சிரித்தான் ஆனந்த். ''அப்படியானால் உங்கள் பார்வை மங்கலாகி விட்டது.''

''ஏதோ கோடுகளாக அல்லவா இழுத்திருக்கிறாய்?''

''கோடுகள் தெரிகின்றன அல்லவா? அதுவே போதுமே!''

"மாடர்ன் ஆர்ட்டா ?"

"கெஸ்ட் கரெக்ட்! இப்படிக் கோடு, அப்படிக் கோடு; நாலு கோடுகளுக்கு நடுவில் பல கோடுகள்! முடிந்து விட்டது !"

"பாவமே இல்லையே, ஆனந்த்!"

"அதுதான் உங்கள் மனத்தில் இருக்கிறதே! பார்ப்பவர்கள் எந்த மனப்பாங்குடன் நோக்குகிறார்களோ, அது அப்படியே சித்திரத்தில் இறங்கிவிடும். ஒரு தாய் என்று நான் சொன்னால், ஒரு தாயாக நீங்கள் பார்ப்பீர்கள். தாய்க்குரிய மனோபாவம் உங்கள் மனத்தில் உதிக்கும். அதை அப்படியே நீங்கள் சித்திரத்தில் இறக்குவீர்கள். மனம் கூறும் பாவத்தைக் கண்களும் ஏற்கும். அதனால் இந்தச் சித்திரங்கள் கண்களைப் பொறுத்தது, மனத்தைப் பொறுத்தது ! சொல்லப் போனால் மனக் கண்ணைப் பொறுத்தது."

"பேஷ்! பேஷ்! நல்ல விமரிசனம்!" தந்தை சிரித்து விட்டார்.

ஆனந்த் ஓடிச் சென்று மற்றொரு சித்திரத்தை எடுத்து வந்தான். சீதாபதி அதைக் கையில் வாங்கிக் கொண்டார்.

அந்தச் சித்திரத்தை எவ்வளவு நேரம்தான் பார்த்துக் கொண்டிருப்பார் ! சித்திரமா அது ! உயிரோவியமாக அல்லவா இருந்தது !

பார்த்துக் கொண்டிருந்த போதே மெள்ள மெள்ள அவர் கண்களில் நீர் சுரந்தது. "அற்புதம்!" மெள்ளக் கூறினார். உடலில் ஒரு சிலிர்ப்பு.

"அப்பா !" ஆனந்த் மெள்ள அவர் அருகில் வந்தான்.

சீதாபதி வைத்த கண் வாங்காமல் சித்திரத்தையே நோக்கிக் கொண்டிருந்தார். அவன் அழைத்தது அவர் காதில் விழவில்லை.

"அப்பா! நான் கூப்பிடுவது கேட்கவில்லையா?"

சீதாபதி மெள்ளத் திரும்பினார்.

"ஆனந்த்! சித்திரம் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தேனாதலால் நீ கூப்பிட்டது காதில் விழவில்லையப்பா!"

"சித்திரம் என்ன கூறியது அப்பா, உங்களிடம்?" ஆனந்த் கேட்டான்.

"என்ன கூறியது என்று கேட்கிறாய்? என்னால் அதைக் கூற முடியாது. நீ முதல் சித்திரத்துக்கு விமர்சனம் செய்தது போல் என் மனோபாவத்தை அதில் இறக்கியிருந்தால் விளக்கம் கூறுவேன். ஆனால் இந்தச் சித்திரம் எனக்கு வேலை வைக்கவில்லை. அதுவாகவே பேசுகிறது ! அது உயிரெடுத்துப் பேசும் பேச்சை நான் எப்படி என் சின்னஞ்சிறு சொற்களால் கூறுவேன்?...இந்தச் சித்திரத்தை வடிக்க உனக்கு எப்படித்தான் தோன்றியதோ? ஒரு தாய்! அவள் அருகில் சின்னஞ் சிறு குழந்தை. இருவரும் ஒருவரை யொருவர் நோக்கும் பாவனை. உலகில் தாயை சத்தியம், சிவம், சுந்தரத்தோடு ஒப்பிடுவதுண்டு. பார்க்க முடியாத, நமது பார்க்கும் சக்திக்கும் அப்பாற்பட்ட அன்பு என்ற சத்தியத்தை அவளிடமின்றி வேறு எங்கும் காண முடியாது. காக்கும் ஆற்றலை அவள் சிவசக்தியாகக் கொண்டவள். வாத்ஸல்யத்துடன் ஒட்டி ஒருயிராக நிற்கும் சௌந்தரிய லட்சணத்தைத் தாயிடம் மட்டுமே காண முடியும். குழந்தையைத்தான் பாரேன், உலகில் இத்தனை சக்திகள் இருந்தும், ஆண்மை மிக்க தந்தை இருந்தும் தன் ஊன்றுகோலாக, ஆதரவாகத் தாயின் முகத்தை யல்லவோ ஆர்வத்துடன் நோக்கி நிற்கிறது!..."

சற்று மௌனம். தன் சித்திரத்தின் மேன்மையை அப்போதுதான் நன்கு உணர்ந்துகொண்டவன் போல் ஆனந்த் பக்கத்தில் இருந்த சித்திரத்தை நோக்கினான்.

சீதாபதி மீண்டும் பேசினார்: "ஆனந்த்! உன்னிடத்தில் இப்போது ஓரளவு அதிக நம்பிக்கையும் பாசமும் விழுந்து விட்டதடா!"

"புதிதாக என்னப்பா ?"

"நீ உன் தாயை இன்னும் மறக்கவில்லையடா! அவள் உயிருடன் இருந்த போது இருந்ததைக் காட்டிலும் இறந்தபின் உன் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்டிருக்கிறாள். அவளை மனத்தில் நோக்கியபடிதான் நீ இப்படியொரு சித்திரம் வடித்தெடுத்திருக்கிறாய் !"

ஆனந்த்துக்குத் தாயின் நினைவு வந்ததுமே கண்களில் நீர் முட்டியது. சித்திரத்துக்கான மூலாதாரம் எந்தத் திக்கிலிருந்தாவது வந்ததாக இருக்கட்டும். சீதாபதி கூறியது போல் அவன் தாய் குகமா அவன் மனத்தோடு அழியாமல் கிடந்தாள். தாய் இப்போது

69ல் புதிய கண்டுபிடிப்புகள்!

ஒரு தடவைக்கு ஒரு மாத்திரை வெளியே வரும் மருந்து பாட்டில், தொட்டியில் குளிப்போருக்காக மிதக்கும் சோப்புப் பெட்டி, குழந்தை அழுதால் தானாகவே ஆடத் தொடங்கும் தொட்டில், தானே இயங்கி, வேலை முடிந்ததும் தானாகவே நின்றுவிடும் புல்வெட்டி - ஆச்சரியமாயிருக்கிறதா? இவையெல்லாம் 1969ம் ஆண்டின் புதுக் கண்டுபிடிப்புகளில் சில.

'லைப்' - 'நாயக்'

வீட்டிலிருந்தால் அவன் தந்தையைக் கவனித்துக் கொள்வாள்; அவனையும் கவனிப்பாள்; வீட்டையும் கவனிப்பாள். ஆனந்த் பலமுறை நினைத்துக் கொள்வான், தாய் என்ற படைப்பில் கடவுள் எத்தனை பொறுப்புக்களை அடக்கி விட்டார்!

''ஆனந்த்! இந்தச் சித்திரங்களை எங்கு விலைக்குத் தள்ளப் போகிறாய்?'' என்று சீதாபதி கேட்டார்.

''தெரியவில்லை. வாசுதான் ஏதோ வழி சொல்லுவதாகச் சொன்னான். அவனுக்குத் தெரிந்த ஒரு வர்த்தகரிடம் ஏற்பாடு செய்வதாகச் சொன்னான். அவருக்கு 'மாடர்ன் ஆர்ட்'தான் பிடிக்குமாம். அவருக்காகவே அதைக் கற்றுக் கொண்டு போட்டேன்.''

''அதை நீ யாரிடமாவது விற்றுக் கொள். ஆனால் இந்தத் தாய் — மகன் சித்திரத்தை மட்டும் மதிப்புத் தெரியாதவன் கையில் தள்ளி விடாதே!''

சீதாபதி தம் பேச்சை முடிக்கவில்லை. 'ஆனந்த்!' என்று கூப்பிட்டுக்கொண்டே வாசு வந்து விட்டான்.

''வாப்பா வா! சமயத்துக்கு வந்து சேர்ந்தாயே! உன்னைத்தான் நினைத்தேன். உனக்கு நூறு வயசு!'' வாசுவை வரவேற்ற சீதாபதி, ''வாசு, இதோ இந்தச் சித்திரத்தைப் பார்த்தாயா?'' என்று கேட்டார்.

வாசு சித்திரத்தைச் சற்று நேரம் உற்று நோக்கினான். பிறகு அதைக் கீழே வைத்து விட்டு மெள்ள, ''அம்மா!'' என்று கூறி நாற்காலியின் மீது சாய்ந்து கொண்டான்.

சீதாபதி அவன் இப்படிச் சொல்வான் என்று எதிர்பார்க்கவில்லை. 'ஸ்பிளெண்டிட்', 'மார்வலெஸ்' என்று குதிப்பான் என்றே நினைத்தார். ''என்னப்பா, உனக்குப் பிடிக்கவில்லையா? குதித்துக் கும்மாளம் போடுவாய் என்றல்லவோ நினைத்தேன்!'' என்றார்.

''மாமா! இதில் நான் கடவுளைக் காண்கிறேன். கடவுளைக் கண்டதும் பக்தியுடன் வணங்கத் தோன்றுமேயொழிய 'ஸ்பிளெண்டிட்' 'மார்வலெஸ்' என்று குதிக்கத் தோன்றுமா?'' என்றவன் ஆனந்தின் பக்கம் திரும்பி, ''ஆனந்த், நான் ஒன்று சொல்ல, நீ ஒன்று செய்து வைத்திருக்கிறாயே!.... உருப்பட மாட்டேடா நீ!'' என்றான்.

அவன் குறிப்பைப் புரிந்துகொண்ட ஆனந்த் நவீன பாணி ஓவியத்தை எடுத்துக் காட்டினான்.

வாசு அதைப் பார்த்துவிட்டு, ''குட்! வெரி குட்! இதுதாண்டா வேண்டும், அந்த மனிதனுக்கு. இது ஆணா, — பெண்ணா? அல்லது இரண்டுமேயா? இப்பொழுது இதைத் தீர்மானிக்க நாம் உட்கார்ந்தால், அப்புறம் அவரைப் பார்க்க முடியாது. உடனே புறப்படு, அவரிடம் போய் வருவோம்!'' என்றான்.

வாசுவும் ஆனந்தும் ஸ்கூட்டரில் போய்க் கொண்டிருந்த போது, ''என் வாசு, இன்று டியூஷன் வேலை இல்லையா?'' என்று கேட்டான் ஆனந்த்.

''எஜமானியம்மா படிக்கணும்னு கல்லூரிக்கே மட்டம் போட்டுட்டாங்க! அதனால் எனக்கு ஓய்வு....''

''படிப்பு இருந்தால்கூட ரமாவால் நடுவில் ஒரு நிமிடமாவது உன்னைப் பார்க்காமல் இருக்க முடியாதே!''

''அந்தக் கூத்தை ஏன் கேட்கிறே? யாரோ அத்தையோ, சொத்தையோ வீட்டில் இருக்கிறாளாம். அதனால் எனக்குத் தடை உத்தரவாம்.''

ஸ்கூட்டர் ஒரு தெருவில் திரும்பிக் கொண்டிருக்கும் போது ஆனந்த் கூவினான்: ''நிறுத்து, நிறுத்துடா!''

சடக்கெனப் 'பிரேக்' பிடித்து வாசு நிறுத்தினான். ''என்னடா இது, ரெட் சிக்னல்?''

''அதோ பார், ரெட் சிக்னலை!''

வாசு நோக்கினான். ஒரு கடை வாசலில் ரமா நின்று கொண்டிருந்தாள். சிவப்புக் கலரில் நைலக்ஸ் புடவை; அதற்கு ஏற்ற சிவப்புச் சோளி. நெற்றியில் சிவப்புக் குங்குமம். காலில் சிவப்பு வாருடன் ஸ்லிப்பர்.

ஸ்கூட்டரைத் தள்ளிக்கொண்டே வாசுவும் ஆனந்தும் கடை அருகே வந்தனர்.

''ஹலோ மிஸ் ரெட் லேடி! என்ன இதுதான் பரீட்சைக்குப் படிக்கும் லட்சணமா?'' — வாசு கேட்டான்.

ரமா திரும்பி இவர்களை நோக்கினாள். ''அடேடே, நீங்களா? நல்ல வேளை கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்து விட்டது. இப்போதுதான் உங்கள் வீட்டுக்கு வரலாம் என்றிருந்தேன். டாக்ஸிக்காகக் காத்து நிற்கிறேன்.''

''உங்கள் வீட்டையும் என் வீட்டையும் சேர்த்து வைக்கும் வழி இது அல்லவே!'' வாசு கூறினான்.

''சென்னைப் பட்டணத்தில் ஓர் இடத்துக்கு ஒரு வழி மட்டும் இல்லை. பல வழிகள் உண்டு, அதை மறந்துட்டியோ? ரமா ஷாப்பிங்கை முடித்துக் கொண்டு உங்கள் வீட்டுக்கு ஏன் புறப்பட்டிருக்கக் கூடாது?'' என்று கேட்டான் ஆனந்த்.

''சரி, சரி! கிளம்பு'' என்ற வாசு சட்டென்று ஏதோ நினைவுக்கு வந்தவன் போல் தயங்கி நின்றான். **(தொடரும்)**



சாருலதா

கி.ராஜேந்திரன்

அத்தியாயம் 21

தற்கொலை முயற்சி

'சாருலதா பில்டிங்ஸ்' முன்னால் காலை பத்து மணிக்குக் காரிலிருந்து இறங்கிய சாருலதா, பத்தடித்து இரண்டு நிமிஷமானபோது எட்டாவது மாடியில் தனது பிரத்தியேகக் காரியாலய அறைக்குள் அடியெடுத்து வைத்தாள். அங்கு, விருந்தினர் வந்தால் அமர்வதற்கென்று போடப்பட்டிருந்த சோபா ஸெட்டில் மூன்று பேர் உட்கார ஏற்றதான நீளமான ஓர் ஆசனம் உண்டு. ரப்பர் குஷன்களுடன் கூடியதும் முழுமையாக உயர் ரகத் தோலினால் மூடப்பட்டு, பாலிஷ் ஏறியதால் பளபளப்பதுமான அந்த ஆசனத்தில், ஒரு மூலையாக முதுகைச் சாய்த்துக் கால்களை எதிரே இருந்த தாழ்வான மேஜை மேல் நீட்டிப் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான் ஒருவன். அந்தத் தினசரி அவன் முகத்தையும் உருவத்தையும் கூட மறைத்தது. கால்கள் மட்டுமே தெரிந்தன. நாளிதழின் பின்னாலிருந்து சிகரெட் புகை கிளம்பியது.

அறைக்குள் நுழைந்த சாருலதா இந்தக் கோலத்தில் இத்தனை துணிச்சலுடன் தன் அறைக்குள் அமர்ந்திருப்பது மஹிபால் அல்லது சந்திரபாலாகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள். வேறு யார் இவ்வளவு மரியாதை இல்லாமல் காலை நீட்டிக் கொண்டு அமர்ந்திருப்பார்கள்? சாருலதா அருகிலில்லை என்றாலும் அவளுடைய அறை, அவள் கையாள்கிற பொருள்கள், அமரும் நாற்காலிகள் எல்லாமே பார்ப்பவர்களிடம் பயபக்தியை உண்டாக்கும் தன்மை வாய்ந்தவைதாம். அந்தச் சிறப்பை அவை சாருலதாவின் திறமை, கௌரவம், செல்வம் ஆகியவற்றின் காரணமாகப் பெற்றிருந்தன. அவளிடம் உள்ள இந்தத் தகுதிகளை மதிக்காதவர்கள் சந்திரபாலும் மஹிபாலும்தாம்.

'ஆனால் இருவரில் ஒருவன்தான் இருக்கிறான் என்றால் இன்னொருவன் எங்கு தொலைந்தான்? 'கிடைத்த மட்டும் போதும், அதிகமாக வாலாட்ட வேண்டாம்' என்று ஓடிவிட்டானா? என்னைப் பிடித்திருக்கும் இரட்டைச் சனியன்களில் ஒரு சனியனை விரட்டிவிட்டேனா நான்?'

இத்தனையையும் இரண்டொரு விநாடிகளில் சிந்தித்துப் பார்த்துச் சந்தோஷமடைந்து விட்டாள் சாருலதா. பியூன் வேதாசலம் கொண்டு வந்த காரியாலயப் பெட்டியைத் தானே வாங்கிக் கொண்டு அவனைக் கதவருகிலேயே திருப்பி அனுப்பி விட்டாள். ''நான் கூப்பிட்டு அனுப்பிய பிறகு வந்தால் போதும் என்று குமாரிடம் சொல்லி விடு'' என்றும் அவனிடம் கூறி அனுப்பினாள். அன்றையத் தபால்களுடன் இடைஞ்சலான ஒரு நேரத்தில் ஸ்டெனோ குமார் வந்து நிற்பதை அவள் விரும்பவில்லை.

மெல்லத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு அவள் தன் மேஜையை நோக்கி நடந்தாள். கதவு தானாகவே சாத்திக் கொண்டது.

நாற்காலியில் ஏறக்குறைய படுத்தவாறு சாய்ந்து கிடந்தவன் அசைந்து கொடுக்கக் காணோம். சாருலதா மேஜையின் மேலிருந்த பொருள்கள் இரண்டை இடம் மாற்றி வைத்து மறுபடியும் ஓசைப்படுத்தினாள்.

தினசரிக்குப் பின்னாலிருந்து சிரிப்பொலி கேட்டது. குரல் அவளைத் துணுக்குறச் செய்தது. நாளிதழ் தாழ்ந்தது. சாரங்கனின் உருவம் அவள் கண்களுக்குப் புலனாயிற்று. 'பளார்' என்று நெற்றிப் பொட்டில் ஓர் அறை விழுந்தது போல் உணர்ந்தாள் சாருலதா. தலையைச் சுற்ற ஆரம்பித்தது அவளுக்கு. ஆதரவுக்கு மேஜையைப் பற்றிக் கொண்டாள்.

''வந்து விட்டீர்களா சாரு?'' என்றான் சாரங்கன். அவன் கால்கள் நீட்டியது நீட்டியபடியே இருந்தன. ''ஆர்ட்

புஷ்வால்ட் எழுதியதைப் படித்துக் கொண்டிருந்தேன். என்னமாய் எழுதுகிறான் மனுஷன்! ஒரு தடவையாவது அவன் கட்டுரையைச் சிரிக்காமல் படிக்க வேண்டும் என்று பார்க்கிறேன்; முடியவில்லை!''

''சாரங்கன்!'' அதட்டுகிற குரலில் அழைத்தாள் அவள். ''மஹிபாலோ அல்லது சந்திரபாலோ உட்கார்ந்திருப்பதாக அல்லவா நினைத்தேன்? மரியாதையை உங்களுக்குக் கூடவா கற்றுத் தர வேண்டும் ¡நான்?''

சாரங்கன் வியப்படைந்தவன் போல் புருவங்களை உயர்த்தினான். ''அடடா, நான் என்ன செய்து விட்டேன் உங்களை?'' தன் கையிலிருந்த சிகரெட்டை அவன் திருப்பித் திருப்பிப் பார்த்தான். ''ஓ! எஜமானி அம்மாள் எதிரே சிகரெட் பிடிக்கக் கூடாது என்கிறீர்களா?'' கடைசி முறையாக அவன் புகையை நீள உள்ளுக்கு இழுத்தான். அப்புறம் உடலை நிமிர்த்தாமலேயே கை நீட்டி மேஜை மீதிருந்த ஆஷ்ட்ரேயை எடுத்து அதில் சிகரெட்டைத் திருகி அணைத்துப் போட்டான்.

ஒரு முறை கைக் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, ''யூ ஆர் லேட்!'' என்று சொல்லிக் கொண்டே நிதானமாகக் கால்களைத் தரையில் ஊன்றி எழுந்தான். அவன் நின்ற பின்தான் சாருலதா தன் சுய கௌரவத்தைத் திரும்பப் பெற்றவளாக அமர்ந்தாள். திகைப்பு அவளை விட்டு இன்னும் நீங்கவில்லை. முழங்கைகளை மேஜைமேல் ஊன்றி விரல்களைக் கோத்து அவற்றின் மேல் முகவாயைப் பதித்துச் சாரங்கனை அருவருப்பும் மிரட்சியும் கலந்த ஒரு பார்வையால் அளந்தாள். 'இத்தனை தைரியத்தை இவன் எங்கிருந்து பெற்றான்? திடுதிப்பென்று எப்படி இவன் மாறிப் போனான்?'

அவன் அவளை நோக்கி அலட்சியமாக நடந்து வந்தவாறே கூறினான்: ''பைதிவே சாரு. மங்களா பாங்கு மானேஜர் ரத்தினசாமி ஃபோன் பண்ணினார். மூன்று லட்சம் ஓவர்டிராப்ட் ஸாங்ஷன் செய்தாரே அது பற்றிப் பேச வேண்டும் என்றார்.''



ஒரு பயங்கரக் கனவை உதறுவது போல் சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்தாள் சாருலதா. ''நான் அவரிடம் பேசிக் கொள்கிறேன். நீங்கள் போகலாம்.''

''உங்களுக்கு அந்தச் சிரமத்தை நான் வைக்கவில்லை சாரு. நானே சொல்லி விட்டேன்.''

''என்னவென்று?''

''உண்மையைத்தான்; ஆனால் பயப்படாதீர்கள். பக்குவமாய்ப் பேசி யிருக்கிறேன்.''

சாருலதாவுக்கு இப்பொழுது விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. வேண்டாவெறுப்பாக அவள் அவனுடன் சம்பாஷணையைத் தொடர்ந்தாள்:

''இதில் பக்குவமாகப் பேச என்ன இருக்கிறது? நமக்கென்ன தானமா கொடுத்தார்? வட்டிக்குக் கடன் வாங்கிறோம். அவ்வளவுதானே?''

''எந்தத் தைரியத்தில் அவர் கடன் கொடுத்தார்?''

''சாருலதா இன்ஜினீரிங்குக்கு அவர் ஓவர்டிராப்ட் ஸாங்ஷன் செய்தார். அதற்காக நம் கம்பெனியின் இயந்திரங்கள் பல, மங்களா பாங்குக்கு அடமானம் செய்யப்பட்டுள்ளன.''

''இப்படி வாங்கிய கடன் உண்மையில் சாருலதா இன்ஜினீரிங்குக்கா பயனாகிறது? பரத்வாஜ் கம்பெனி அல்லவா விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கிறது?''



''சாரங்கன்!'' — அதட்டினாள் சாரு.

''சாரு!'' — மிரட்டும் பாவனையில் அழைத்தான் அவன். ''நீங்கள் செய்வது மோசடி. சட்ட விரோதமான காரியம்!''

''தொழில் வர்த்தகத் துறையில் முன்னேற்றம் காண்பதென்றால் இந்தக் காலத்தில் இதற்கெல்லாம் துணிய வேண்டியதுதான்'' — அலட்சியமாகப் பேசினாள் அவள்.

''ஆலோசனைகளைக் கேளாமல் ஆவேசத்துடன் காரியத்தைச் செய்தீர்கள்! பரத்வாஜ் கம்பெனி ஷேர்களை ஏராளமாய் வாங்கித் தொலைத்தீர்கள்.''

''சாரங்கன்! நான் தவறு செய்தது வாஸ்தவம்தான். என் மனம் ஒரு நிலையில் இல்லாமல் போனதால் அவசரப்பட்டுவிட்டேன்.'' தணிவாகப் பேசினாள் சாருலதா. ''ஆனால் இப்போது எனக்குக் கம்பெனியில் கண்ட்ரோலிங் இன்டரஸ்ட் இருக்கிறது. பெரும்பாலான பங்குகள் என் வசம் இருப்பதுடன் பங்குதாரர்களில் பலர் நான் சொல்வதற்கெல்லாம் தலையாட்டக் கூடியவர்கள். டைரக்டர்களையும் மாற்றியாகி விட்டது. சரிந்து கொண்டிருக்கும் கம்பெனியை எட்டே மாதங்களில் பலமான அஸ்திவாரத்தில் நிலைநிறுத்த என்னால் முடியும். அதை அடுத்து உற்பத்தியிலும் விற்பனையிலும் கணிசமான முன்னேற்றம் காணப் போகிறோம்.''

''ஆனால் அதற்கெல்லாம் முதலில் பணம் போட்டாக வேண்டும். பரத்வாஜ் கம்பெனிக்கு எந்த பாங்கும் கடன் தராது. அது ஏற்கனவே ஏராளமாய்க் கடன் பட்டிருக்கிறது. பல வருஷங்களாக நஷ்டத்தில் இயங்கி வருகிறது. அதனால் சாருலதா இன்ஜினீரிங் பெயரில் கடன் பெற்று அந்தப் பணத்தை இதற்குச் செலவழிக்கிறீர்கள். இந்த விஷயம் தெரிந்தும் தெரியாதது போல் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறார் ரத்தினசாமி. அது ஏன்?''

''ரத்னசாமியிடம் இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டுத் தொலைத்தீர்களா என்ன?''

''கேட்பானேன்? எனக்குத் தெரியாதா? நிதானமாக விவரித்துச் சொன்னேன். அதோடு இது சம்பந்தமாய் ரிஸர்வ் பாங்குக்கு ஒரு கடிதம் எழுதலாமென்றிருக்கிறேன் என்றும் தெரியப்படுத்தினேன்.''

''அடப் பாவி!''

''இதே வார்த்தையைச் சொல்லித்தான் அவரும் என்னைத் திட்டினார். ஆனால் நீங்கள் இருவரும் நினைப்பது போல் நான் அத்தனை பொல்லாதவன் இல்லை. ஐ ஆம் ரீஸனபிள்! பத்தாயிரம் ரூபாய் கொடுத்தால் கடிதம் எழுதாமல் இருக்கிறேன் என்று ரத்னசாமியிடம் சொன்னேன்.''

சாருலதாவுக்குத் 'திக்'கென்றிருந்தது. கோபம் பொங்கியது. இரண்டுக்கும் மேலாகச் சோர்வு மிகுந்தது. 'ஒரு வேளை விளையாட்டாகப் பேசுகிறாயோ, சாரங்கன்?'

''நீங்களும் கற்றுக் கொண்டு விட்டீர்களா பிளாக்மெயில் கலையை?''

''ஆனால் அந்தக் கலையில் நான் முழுத் தேர்ச்சி பெறவில்லை சாரு. ரத்னசாமி பயப் பயல். என்ன சொன்னான் தெரியுமா? ரிஸர்வ் பாங்குக்கு நீ எழுதினால் என் உத்தியோகம் பறிபோய்விடலாம்; அல்லது ஒரு வேளை நான் சாருலதாவை நம்பி நல்லெண்ணத்துடன் காரியம் செய்தேன் என்பதால் மன்னிப்புப் பெறலாம். ஆனால் அதே சமயம் சாருலதா செய்த மோசடி வெளியாகிச் சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்துவிடும் என்பதுமட்டும் நிச்சயம். அதனால் உனக்குத் தேவையான பணத்தை அவளிடமே கேட்டு வாங்கிக் கொள் என்றான். தருகிறீர்களா சாரு?''

சாரங்கன் மேஜையின் ஒரு முனையில் தனது ஒரு தொடையைத் தூக்கிப் போட்டு, அதில் இடது முழங்கையை ஊன்றினான். வலக் கரம் சாருலதாவிடம் தா என்று கேட்கும் பாவனையில் நீண்டது.

சாருலதா பிரமித்துப் போனாள். அவளுக்கு ஒன்றுமே ஓடவில்லை. எதுவுமே பேசத் தோன்றவில்லை. சிறிது சிறிதாக அவள் துணிவைத் திரட்டிக் கொண்டாள். யுகங்களாகத் தோன்றிய பல நிமிஷங்களுக்குப் பிறகு அவள் பேசும் சக்தியைத் திரும்பப் பெற்றாள். ''சாரங்கன்! வில் யூ கெட் அவுட் ஆஃப் ஹியர்?'' என்று மேஜையைக் குத்தி இரைந்தாள்.

''கோபித்துக் கொள்ளாதீர்கள், சாரு!'' என்று அவள் தோளைப் பற்றி அழுத்தியதுடன், முதுகிலும் தட்டிக் கொடுத்தான் சாரங்கன்.

உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்கள் வரை ஆயிரக் கணக்கில் தேள்கள் ஊர்ந்து அத்தனையும் ஒரு சேர ஒரே சமயத்தில் கொட்டி விட்டன போன்று துடிதுடித்துப் போனாள் சாருலதா.

அந்த வேதனைக்கிடையிலும் அவள் எப்படித் துள்ளி எழுந்தாள்; அப்பால் போய் நின்றாள் என்பதொன்றும் அவளுக்குத் தெரியாது.

ஆச்சரியத்துடன் அவன் புருவங்களை உயர்த்தினான். ''ஏன் தொடக்

கூடாதா? ஆண்களைத் தீண்டியதே இல்லையா நீங்கள்?''

சாருலதா பற்களை இறுகக் கடித்தாள். அவள் உதடுகள் நீண்டு விரிந்தன. வலக்கரத்தை முஷ்டியாக்கிக் கொண்டாள். விழிகள் பிதுங்கின.

''ஐ வில் கில் யூ! ஐ வில் கில் யூ!'' அடித் தொண்டையிலிருந்து வந்தன சொற்கள். உரக்கப் பேசவில்லை அவள்; ஆனால் உறுதி தொனித்தது குரலில்.

அவன் சிரித்தான். ''மதுபாலையும் சந்திரபாலையும் கூட இப்படித்தான் கொன்று விடுவதாகப் பயமுறுத்தினீர்கள். துப்பாக்கியைக் கூட எடுத்துக் காட்டினீர்கள். கடைசியில் பயந்தது யார்? நீங்கள்தான்!''

சாருலதா வெறி கொண்டு பாய்ந்தாள். மேஜை டிராயரைத் திறந்து துப்பாக்கியை எடுத்தாள். கலவரத்துடனேயே பேசினான் சாரங்கன்: ''வேண்டாம் சாரு! அதை உபயோகிக்க உங்களுக்குத் தைரியம் கிடையாது. கொலைக்குற்றம் சாட்டப்பட்டுக் கோர்ட்டில் நிற்க உங்களால் முடியாது!''

மாலை மாலையாகக் கண்ணீர் பெருக்கினாள் சாருலதா. நா தழு தழுக்கக் கூறினாள்: '' உங்களைக் கொன்றால் சட்டம் என்னைச் சிறையில் தள்ளும். ஆனால் என்னை நானே சுட்டுக் கொண்டால் என்ன செய்யும்?''

சாரங்கனை நோக்கி நீண்டிருந்த அவள் கரம் மடிந்தது. துப்பாக்கி முனை அவள் நெற்றிப் பொட்டைப் பார்க்கத் திரும்பியது.

விருட்டென்று அவள் பக்கமாய்ச் சாய்ந்து கரத்தைத் தட்டிவிட்டான் சாரங்கன். துப்பாக்கி இயங்கியது. குண்டு, கண்ணாடி ஷோ கேஸில் வைக்கப்பட்டிருந்த ஜப்பானியப் பொம்மையைத் தகர்த்துவிட்டு மேலே சென்று சுவரில் தட்டிக் காரையைப் பெயர்த்துவிட்டுச் சிதறி விழுந்தது.

குண்டு தன் மீது பாயவில்லை என்பதைச் சாருலதா உணருமுன்னரே சாரங்கன், துப்பாக்கி பிடித்திருந்த அவள் கரத்தைப் பற்றிக் கூரையை நோக்கி உயர்த்தி மணிக்கட்டை நெருக்கி உதறினான்.

''முடியாது ! நான் தரமாட்டேன்! என்னைச் சாக விடுங்கள்!'' என்று புலம்பினாள் சாருலதா.

சாரங்கன் தன் சக்தியையெல்லாம் பிரயோகித்து அவள் கரத்தை முறுக்கினான். வேதனை தாளாமல் துப்பாக்கியை நழுவ விட்டாள் அவள். ''நான் செத்துப் போனால் உங்களுக்கென்ன? யாருக்குத்தான் என்ன கவலை? ஏன் தடுக்கிறீர்கள்?'' என்று கதறினாள்.

கதவு திறந்து கொண்டது. எல்லாருக்கும் முன்னால் லில்லி கலவரத்துடன் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னால் காரியாலயத்தைச் சேர்ந்த சிலர் நின்றனர். உள்ளே வரலாமோ கூடாதோ என்ற தயக்கம். சாருவுக்கு என்னவோ ஏதோ என்ற பயம்.

சாரங்கன் 'கோ' வென்று கதறிக் கொண்டிருந்த சாருலதாவைக் கையைப் பிடித்து நடத்தி வந்தான். போகிற போக்கில் கதவருகே நின்ற யாரும் கவனியாதவாறு தரையில் கிடந்த துப்பாக்கியை மேஜைக்கு அடியில் உதைத்துத் தள்ளினான்.

''விலகுங்கள், வழி விடுங்கள்'' என்று உத்தரவிட்டுக் கொண்டே வந்தான் வேணுகோபால். அவன் கையில் டாக்டர்களுக்குரிய தோல் பை இருந்தது. அதை ஸோபாக்கள் எதிரேயிருந்த தாழ்வான மேஜையின் மேல் வைத்துவிட்டுச் சாருலதாவைப் பார்த்தான்.

அவனைக் கண்டதும் அவள் புலம்பல் அதிகரித்தது. ''என்னைச் சாக விடுங்கள், ப்ளீஸ் ! நான் செத்துப் போகிறேன். என்னால் இந்த வேதனைகளை இனி மேலும் தாங்க முடியாது. நான் செத்தால்தான் எனக்கு நிம்மதி !'' விம்மி அழுது உரக்கக் கத்தினாள் அவள்.

வேணுகோபால் அவளை அணைத்தவாறு அழைத்துப் போய் ஸோபாவில் படுக்க வைத்தான். பிறகு கதவருகே நின்றவர்களை நெருங்கி, ''ஹிஸ்டீரியா ரொம்ப 'மைல்ட் அட்டாக்'தான்; சரியாகப் போய்விடும். பயப்படாதீர்கள்'' என்றான்.

திரும்பி அவன் சோபா அருகே வருகையில், ''லில்லி! கதவைச் சாத்து'' என்று உத்தரவு போட்டான் சாரங்கன். அவரவரும் தத்தம் இடத்துக்குத் திரும்ப, கதவு மூடிக் கொண்டது.

டாக்டர் வேணுகோபால் தோல் பையைத் திறந்து மருந்தும் ஸிரிஞ்சும் எடுத்துச் சாருலதாவுக்கு ஓர் ஊசி போட்டான். ஓரிரு நிமிஷங்களில் அது தன் சக்தியைக் காட்ட ஆரம்பித்துவிட்டது. அவள் புலம்பலையும் அழுகையையும் நிறுத்தி அமைதி அடைந்தாள். மேலும் ஓரிரு நிமிஷங்களில் கண்களை மூடித் தூங்கியும் போனாள்.

மௌனமாய் நின்று கொண்டிருந்த சாரங்கன், மேஜைக்கடியில் குனிந்து துப்பாக்கியை எடுத்தான். அதை முன்பிருந்த இடத்திலேயே வைத்துப் பூட்டப் போனான்.

அப்போது வேணுகோபால், ''சாரங்கன் ! அதை இனிமேல் இங்கு விட்டு வைப்பது உசிதமல்ல ; என்னிடம்

:.பாஸ்:.போமின்



சக்தியை அதிகரிக்கிறது. பசியைத் தூண்டுகிறது. வலிவைப் பெருக்குகிறது. நோய்களை எதிர்க்கும் சக்தியை கூட்டுகிறது.





சுருங்கச் சொன்னால்—
குடும்பத்தில் அனைவரும் திட
ஆரோக்கியத்துடன் திகழ
உதவுகிறது :.பாஸ்:.போமின்



:.பாஸ்:.போமின்... 'பி' காம்ப்ளெக்ஸ் வைட்டமின்களும், பலவகை கிளிஸரோ:.பாஸ்பேட்டுகளும் அடங்கியது. பழரஸ மணம் கமழும் பச்சைநிற டானிக்.


Bensons/2848/3TAM
உங்களுக்கு சுவையுள்ள,
கெட்டியான, ஸ்ட்ராங்கான
மற்றும் உடனே தயாராகும்
காபி வேண்டுமா...
இதோ
ப்ரூ
இருக்கிறது
SCREW
THIS WAY
Brooke Bond
BRU
INSTANT
COFFEE CHICORY BLEND
கெட்டியான,
ஸ்ட்ராங்கான
காபி-சிக்கரி கலவைதான் ப்ரூ.
உடனடியாக தயாராகிவிடுகிறது!
புத்துணர்ச்சியளிக்கும்
மிகச் சிறந்த பானம்.
ப்ரூக் பாண்ட்
ப்ரூ
இன்ஸ்டண்ட்
காபி சிக்கரி ப்ளெண்ட்

கொடுத்துவிடு'' என்றான். சாரங்கன் வேணு சொற்படி கொடுக்க அதைத் தன் கோட்டின் உள் பாக்கெட்டுக்குள் வைத்துக் கொண்டான் வேணுகோபால்.

* * *

விழிப்புக்கும் தூக்கத்துக்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் இருந்தாள் சாருலதா. தான் வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்ட விவரமே அவளுக்கு இனிமேல் தான் தெரியப் போகிறது. அவளைச் சுற்றிலும் பெருமாள், குணசீலன் டாக்டர் வேணுகோபால் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

கவலையுடன் இருந்த அப்பாவையும் பிள்ளையையும் பார்த்து வேணுகோபால் சொன்னான்: ''குணு வீட்டுக்குத் திரும்பி விட்டான் என்று தெரிந்தாலே போதும், சாரு உடனே குணமடைந்து விடுவாள். தம்பியை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டோமோ என்று அவளுக்கு இருந்த ஏக்கம் எவ்வளவு தெரியுமா? உணர்ச்சிகளை எளிதில் வெளிக் காட்டாத சுபாவம் அவளுக்கு. ஆனால் உள்ளுக்குள்ளேயே உருகிப் போவாள்.''

பெருமாள் வழக்கம்போல் மௌனம் சாதித்தார். அவர் கண்கள் மட்டும் கலங்கிக் குளமாகியிருந்தன.

'' இவள் எழுந்து உட்கார்ந்ததும், 'எனக்கு 'ஹிஸ்டீரியா' வந்ததே நல்லதாப் போச்சு, தம்பி ! அதனால்தானே நீ மறுபடியும் இந்த வீட்டுக்கு வந்து சேர்ந்திருக்கிறாய்' என்று சொல்லப் போகிறாள்.''—இதைக் கூறுகையிலேயே குணசீலனுக்கு முகம் சிவந்து விட்டது. மென்று விழுங்கிக் கொண்டான்.

டெலிபோன் மணி அடித்தது. அந்த ஓசை சாருலதாவுக்குத் தொந்தரவு தராதிருக்க வேண்டுமே என்று கவலைப்பட்டவனாய்ப் பாய்ந்து ரிஸீவரைக் கையில் எடுத்தான் வேணுகோபால்.

''எஸ் !.... நோ நோ ! நத்திங் ஸீரியஸ்!.... நான் அவங்க ஃபேமிலி டாக்டர்தான் பேசறேன். ஒரு வாரம் பத்து நாட்கள் ஓய்வாக இருந்தாங்கன்னு போதும்.... இல்லே, உடம்புக்கு ஒன்றுமில்லே. நார்மல்தான்.... ஓவர் ஒர்க், டென்ஷன். கொஞ்ச நாளைக்கு ஆபீஸ் கவலைகளை மறந்துட்டு ரெஸ்ட் எடுத்துக் கொண்டாலே போதும். மருந்து வேறு எதுவுமே தேவையில்லே....வேண்டாம். பார்க்க வராதீங்க. நீங்க ஃபோன் பண்ணினதாகச் சொல்லிடறேன். ஓ. கே. !'' வேணுகோபால் ஃபோனை வைத்து விட்டுக் குணுவிடம் கூறினான் : ''யாரும் சாருலதாவை வந்து பார்த்துத் தொந்தரவு பண்ண அனுமதிக்காதே ! மாடியில் இந்த அறையில் டெலிபோன் இல்லாமல் இருப்பதே நல்லது. ஃபோன் வந்தால் கீழே உள்ள எக்ஸ்டென்ஷனிலேயே யாராவது பேசி விடுங்கள்.''

இந்தச் சமயத்தில் சாருலதாவின் வாய் அசைந்தது. தூக்கம் குறைந்து விழிப்பின் எல்லைக்கு அவள் வந்து கொண்டிருக்கும்போது ஏதேதோ எண்ணங்கள், பழைய — புதிய நினைவுகள் மனத்தில் அலை பாய அவள் ஒன்றுக் கொன்று தொடர்பில்லாமல் உளற ஆரம்பித்தாள் :

''டெலிபோன் மணி அடிக்கிறதே ! யார் மஹிபாலா பேசுகிறது? இல்லே... டெலிபோனில் ஒன்றுமே கேட்கவில்லையா.... ஹலோ.... ஹலோ....! டெலிபோன் ரிப்பேர் ஆகியிருக்கு ! அம்மா ! மணி அடிக்கிறது; ஆனால் பேசுவது கேட்கலே ! இல்லே அம்மா, கோவிச்சுக்காதே! எனக்கு நன்னு ஃபோன் பண்ணத் தெரியும். என் பேரில் தப்பில்லே. ஃபோன்தான் ரிப்பேர். ஐயோ அம்மா ! ரொம்ப வலிக்கிறதா? உனக்கென்ன? முகத்தை அப்படி வைச்சுக்காதே அம்மா, எனக்குப் பயமாயிருக்கு! அம்மா! அம்மா!''

சாருலதா விசும்பினாள்.

யூடிகோலோன் விட்ட தண்ணீரில் கர்ச்சிப்பை நனைத்து அனலாய்க் கொதித்த நெற்றியில் போட்டான் வேணுகோபால். பரிவுடன் இதைச் செய்துவிட்டு அவன் நிமிர்ந்தபோது குணசீலனின் கன்னங்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. பெருமாள் மேல் துண்டினால் முகத்தை மூடிக் கொண்டிருந்தார்.

வேணுகோபால் சொன்னான் : ''இதோ பாருங்கள்; நீங்கள் இருவரும் எனக்கு ஒரு சத்தியம் செய்து தரவேண்டும். அரை மயக்கத்தில் இவள் இப்படிப் பிதற்றியதாக இவளிடம் சொல்லவே கூடாது. சாரு வாழ்க்கையில் ரொம்பத் துயரங்களை அநுபவித்தவள் என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன். ஆனால் விவரங்கள் ஏதும் தெரியாது. அவற்றைச் சாருவே என்னிடம் மனம் விட்டுச் சொல்ல வேண்டுமே ஒழிய நானாகவே — அரைகுறையாகக் கூடத் தெரிந்து கொண்டதாக இருக்கக் கூடாது. நான் மயக்க ஊசி போட்டதே சில அந்தரங்கங்களைத் தெரிந்து கொள்ளத்தான் என்றுகூட இவள் முடிவு கட்டலாம். அப்புறம் சாரு என்னை மன்னிக்கவே மாட்டாள். புரிகிறதா ?''

தந்தையும் மகனும் 'சரி' என்று தலையாட்டினார்கள். (தொடரும்)



பத்மினி

அந்த உல்லாச மண்டபத்து ஊஞ்சலில் அமர்ந்து ஆடியவண்ணம் நோக்கிய பத்மினிக்குக் கீழே தென்பட்ட உலகம் மிகவும் கீழே விழுந்து விட்டது போலவும், தான் மிகவும் உயர்ந்து ஆகாயத்தைத் தொடப் போவது போலவும் தோன்றியது.

இன்பத்தின் உச்சியிலிருந்தே இன்பத்தைத் தேடுகின்ற பெண்ணின் ஆட்டத்தை அழகுற எடுத்துக் காட்டவே அந்த ஊஞ்சல் ஆடியது போலும்!

'ஓட்டமும் வேகமும் அர்த்தமற்றவை' என்று கற்பனை செய்யும் கவியின் கற்பனை வானில் ஒன்றன்பின் ஒன்றாக ஒளிரும் எண்ணத் துணுக்குகள் ஆகாயத்தில் சுடர் விட்ட விண்மீன்கள் நிலவை ஏறெடுத்துப் பார்க்கவும் வெட்கி இமையா விழிகளைச் சலித்தன.

சந்திர லோகத்திலிருந்து அப்போதுதான் கீழிறங்கி வந்தது போன்ற கம்பீரத்துடன் விளங்கிய அந்த அழகு மாளிகையின் மேல் மாடியின் கைப்பிடியைப் பற்றி நின்ற சேகரனைக் கண்களாலேயே அள்ளி விழுங்க விரும்புகின்றவள் போல் பார்த்துக் கொண்டிருந்தாள் பத்மினி.

"ஊஞ்சலுக்கு வரக் கூடாதா?" என்று கேட்ட குரலில் பெண் குரலின் வேட்கை ஒலித்தது.

ஆனால் எதிர்க் குரலில் அந்த வேட்கையில்லை. "ஆட்டத்தைவிட நிலைத்து நிற்பது சந்தோஷமாக இல்லையா?" என்றான் சேகரன்.

"இமர் இமர் என்று இப்படி உங்களுக்கு என்ன வந்து விடுகிறது? புரியாதபடி ஏதாவது பேச ஆரம்பித்து விடுகிறீர்களே. இங்கே வாருங்கள்!"

நின்ற இடம் விட்டு அவன் அசையவில்லை. அவளுடைய அழைப்பைக் காதில் வாங்காதவனாய், இரவின் மோனத்தோடு அவன் ஒன்றி நின்றான். அவனுடைய அந்த ஒருமையே அவளுடைய கிளர்ச்சியை மேலும் தூண்டி விட்டது. வாரி முடித்த கூந்தலைப் பிரித்துப் பறக்க விட்டு, பறக்கின்ற தலையில் ஒற்றை ரோஜா செருகி, நிலாவின் மணத்தை மேலே தெளித்துக் கொண்டு, காற்றின் பரபரப்பை ஆடைக்கு அணியாக்கி, 'நான் காதல் — நான் இன்பம்' என்று குரல் கொடுக்கும் வடிவெடுத்து, ஊஞ்சலிலிருந்து குதித்து, அருகில் சென்று அவனுடைய தோள் தொட்டு நின்றாள் அவள்.

இரும்பையும் பாகாக்கும் ஆற்றலுடைய அந்தச் சொக்கெழில் நிலையாக நிற்க விரும்பிய அவனை ஆட்டிக் குலுக்கத்தான் செய்தது.

"இந்த அழகான பொழுதைப் பாழாக்க வேண்டுமா? பகல் முழுதும் பணத்துக்குப் பின்னால் ஓடுகிறீர்கள்; நிம்மதியாக இருக்க வேண்டிய இந்த நேரத்தை அர்த்தமற்ற யோசனைகளில் கழிக்க வேண்டுமா? உங்களுக்காகக் காத்திருக்கிற எனக்கு நீங்கள் கொடுக்கின்ற மதிப்பு இதுதானா?" என்று அவள் கெஞ்சும்போதே இருவரும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்தனர்.

உடலின் மயக்கத்தில் அவன் மூழ்கினாலும், மனம் அவள் உடனுக்கு வரவில்லை என்பதை அவன் பேச்சு காட்டிக் கொடுத்தது.

"பத்மினி, எனக்கும்தான் புரியவில்லை. பகல் முழுவதும் நீ சொல்வது போல் — பணத்துக்குப் பின்னால் ஓடும்போது, 'இரவு வர வேண்டும். உன்னுடன் களித்திருக்க வேண்டும்' என்று ஏங்குகின்றேன். ஆனால் இரவு வந்ததும், 'பகல் முழுவதும் பணத்துக்குப்





எம்.வி.வெங்கட்ராம்

பின்னும், இரவு முழுவதும் பெண்ணுக்குப் பின்னும் ஓட வேண்டியதுதானே?" என்று ஏனோ எனக்குத் தோன்றுகிறது. அமைதியாகத்தான் இருக்கிறேன். உன்னிடம் எனக்கு உள்ள பந்தமும் உறுதியாக இருக்கிறது. ஆயினும், உல்லாச மண்டபத்து அழகான ஏகாந்தத்தில் நான் இப்படி ஏன் நினைக்கிறேன் ?''

''ஏன் என்றால், என் மீது உங்களுக்கு உள்ள அன்பு தளர்ந்து விட்டது!'' என்று அவள் சிணுங்கினாள்.

''நீ நினைப்பது தவறு. பகல் முழுவதும், உன் நினைவாகவே இருக்கிறேன். குவியலாகச் சேரும் 'கரன்ஸி' நோட்டுக்களில் ராஜாவின் தலைக்குப் பதிலாக உன் முகம்தான் தென்படுகிறது. என்றாவது ஒரு நாள் அந்தத் தலைக்குப் பதிலாக உன் தலையை அச்சிட வேண்டும் என்று பல முறை நான் யோசித்ததுண்டு. உன் மேல் உள்ள வெறுப்பினாலா இப்படி நினைக்கிறேன் ?''

''நீங்கள் இப்படியெல்லாம் பேசினால் எனக்குப் பயமாக இருக்கிறது. உங்கள் உடம்பில் ஏதாவது கோளாறு இருக்குமா? நல்ல சமயத்தில் நல்ல விஷயம் பேசாமல்...''

''எனக்கே சந்தேகம் வந்து டாக்டரைக் கலந்தேன். உடம்பில் மட்டுமல்ல, மனத்தில் கூடக் கோளாறு இல்லை என்று கூறிவிட்டார். எனக்கு என்ன குறை? நோய் நொடி இல்லாத உடம் இருக்கிறது; நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ளப் பொருள் வலிமை இருக்கிறது; 'அழகு' என்ற சொல்லுக்கு இலக்கணமான நீ என் மனைவி; நம் குலம் விளங்க ஓர் ஆண் குழந்தை இருக்கிறான்; நான் அமைதியாக இருப்பதாய்த்தான் தோன்றுகிறது; ஆனாலும்......''

பத்மினி பெருமூச்சு விட்டபோது ஊஞ்சல் மட்டுமல்ல, விண்மீன்கள்கூட நடுங்கின; மோக நிலா கேலியாக நகைத்தது.

''உங்களுக்குச் சந்தோஷம் உண்டாக்க முடியவில்லை என்கிற கவலை என்னைத் துன்புறுத்துகிறது....''

''உனக்குப் புரியும்படி எப்படிச் சொல்வது என்றே புரியவில்லை; ஏனென்றால், எனக்கே அது புரியவில்லை. உன் உடலின் சொகுசான எழிலும், மணத்தின் நறுமணமும் என்னைப் பரவசப்படுத்துகின்றன. உடல் எடுத்ததன் பயனைக் கண்டு விட்ட ஒரு நிறைவு உன் அருகில் வந்ததும் என்னுள் தென்படுகிறது. நீ என்னை மகிழ்விக்கவில்லை என்று எப்படிக் கூறுவது? என் ஏக்கம் உடலின் ஏக்கம் அல்ல. என் மனம் வேதனைப்படுவதாகவும் சொல்ல முடியாது........''

''இப்படித்தான் கவிதை போல் கனவு கண்டு....''

''அடடா, மறந்து விட்டேன். கனவு என்றதும் ஞாபகம் வருகிறது. நேற்று இராத்திரி ஒரு வேடிக்கையான கனவு கண்டேன். மறக்க முடியாத கதை போலவே இருந்தது. ஒரு வேளை, என் மனத்தின் தவமே அந்தக் கனவாக வந்ததோ என்னவோ?''

''என்ன அது?'' என்றான், பேச்சு மாறுதல் வேண்டிய பத்மினி.

''உனக்கு வருத்தமாக இருக்கும்.....''

''கனவுக்கு வருந்துவார்களா ?''

''வருந்தும்படியாகத் தான் இருக்கும் ; சொல்லட்டுமா ?''

கனவு கேட்கும் காரணம் காட்டி அவனோடு அவள் நெருங்கினாள்.

அவன் கனவைக் கூறத் தொடங்கினான் :

''வெறும் சொப்பனம். இந்த ஆடம்பரமான ஆடைகளுக்குப் பதிலாகக் கிழிந்து கந்தலான அழுக்குத் துணியைக் கட்டிக் கொண்டு, கையில் ஒரு பாத்திரம் ஏந்திய பிச்சைக்காரனாய் முன் பின் அறியாத ஏதோ ஓர் ஊரில் தெருவில், இரவில் அலைந்தேன்.



''வேலைக்காகச் சிவானந்த முதலியாரிடம் ஒரு சிபாரிசுக் கடிதம் வாங்கினேனே, என்ன ஆச்சு ?''

''அவர் வஜ்ரவேலு செட்டியாருக்கும் சிபாரிசுக் கடிதம் கொடுத்தார். செட்டியார் சீனிவாச அய்யங்காருக்கு ஒரு கடிதம் கொடுத்தார். அய்யங்கார் வெங்கடராம அய்யருக்குக் காட்டச் சொல்லி ஒரு கடிதம் தந்தார். அய்யர் கடைசியில் சிவானந்த முதலியாருக்கே கடிதம் கொடுத்து விட்டார் !''

அந்த இரவில் அவ்வூரைப் பாழ்படுத்த விரும்புவது போல் ஆகாயத்தில் மேகங்கள் உறுமிக் கொண்டிருந்தன.

எளியவர்களை வதைக்கும் கொள்ளைக்காரர்களைப் போல், செடிகொடிகளைப் பிடுங்கி எறிந்து, மரங்களை ஆட்டிக் குலுக்கி முறுக்கிய காற்று வீடுகளையும் சூறையாடிக் கொள்ள முயன்று கொண்டிருந்தது.

அந்த அமளிக்கு அஞ்சிய அத்தெரு மக்கள் வீட்டுச் சுவர்களின் பாதுகாப்பில் ஒளிந்து கொண்டார்கள். இடிக்கும் இடி சிரிக்கும் சிரிப்பின் வெளிச்சத்தில் அந்தத் தெரு, 'என்னைக் காப்பாற்று' என்று வானை நோக்கிக் கெஞ்சுவது போல் பரிதாபமாகக் காட்சி அளிக்கது.

இவ்வளவு தடபுடலையும் பொருட்படுத்தாமல் வீடு வீடாக ஏறிப் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான் சேகரன். இடியையும் சூறாவளியையும் எதிர்த்து நிற்கும் வலிமையை அவனுடைய பசி கொடுத்தது. அவனுடைய பசி மட்டுமல்ல; ஊருக்குப் புறம்பே—அருகில்தான்—ஒரு பாழடைந்த மண்டபத்தில் காய்ச்சலாகப் படுத்துக் கிடந்த, அவனுடைய பிச்சைக்கார வாழ்வின் துணைவியான பத்மினியின் பசிதான் அவனுக்கு அத்தனை துணிச்சல் தந்தது.

அவனுக்கே பசி; காலையிலிருந்து வெறும் நீருண்ட அவன் வயிறு நீருண்ட மேகம் போலவே குமுறியது. மரங்களைக் குலுக்கும் காற்றுத்தான் தன் தலையைச் சுற்றுகிறதா? அல்லது தானாகவே அது சுற்றுகிறதா என்று நிர்ணயம் செய்ய முடியாத நிலையில் அவன் தள்ளாடியவாறு நடந்தான்.

அவ்வூரில் அவன் பிறவிப் பிச்சைக்காரன்; வேலை செய்ய மாட்டான் என்பதில்லை; வேலை கிடைக்கும்போது வேலை; வேலை இல்லாத போது பிச்சை. வேலை செய்வதைவிடப் பிச்சை எடுத்துப் பிழைப்பதே இன்பம் என்று அவன் முடிவு கட்டி வெகு காலம் ஆகிவிட்டது. வயிறு என்கிற தொல்லைப் பொறுப்பைத் தவிர வேறு பொறுப்பற்ற அவனுக்குப் பத்மினி இன்பப் பொறுப்பாக வந்து சேர்ந்தாள். தெருவோடு பிச்சை கேட்டு வந்த அவனுக்கும் அவளுக்கும் இடையில் காதல் என்கிற பிணைப்பு ஏற்படுவதற்கு நிலவோ, தென்றலோ, இசையோ, துணை செய்யவில்லை.

வயிற்றை நிரப்பிக் கொண்டு இரவுக்காகத் தனித்தனியே பாழ்மண்டபத்தில் ஒதுங்கியவர்கள் காலையில் தம்பதியாய்க் கண் விழித்தார்கள். நலிந்த தோற்றம் அளித்தாலும் விறுவிறுப்பான உடல் படைத்தவன் அவன்; அழகே வடிவான பெண் அவள்; பிச்சைச் சோறானாலும் சம பங்கு கண்டு மரத்தடியிலும் திண்ணைகளிலும் இடிந்த மண்டபத்திலும் அவ்விருவரின் குடும்பம் குதூகலமாய் நடந்தது. வயிற்றுக்குக் கிடைக்காத காலத்திலும் அவர்களுடைய மகிழ்ச்சி சிறிதும் சிறுங்கவில்லை என்பதுதான் அதிசயம். ''இன்ப வாழ்வின் பயனை நான்கைந்து மாசங்களில் காணலாம். பிச்சை கேட்பதற்கு ஒரு நல்ல 'காரணம்' கிடைக்கும்'' என்று அவர்கள் ஆசையாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது அன்றைக்கு அவள் காய்ச்சல் என்று படுத்து விட்டாள்.

பகல் முழுதும் அவன் ஏதேதோ பச்சிலை வைத்தியம் செய்தான். பிச்சைக்காரனுடைய கஷ்ட காலத்தில் தர்மவான்களின் தாராளப் புத்தி மங்குகிறது என்று அவன் பழக்கத்தில் அறிந்த உண்மையை அனுசரித்து, அன்று பகலில் கிடைத்த ஆகாரம் அவனுக்கே அரை வயிற்றுக்குப் போதவில்லை. இரவிலாவது இருவருக்கும் நிம்மதியான ஆகாரம் கிடைக்காதா என்று அவன் கிளம்பியபோது ஆகாயமே அவனை எதிர்த்துப் புரண்டது.

அவ்வூரில், அத்தெருவாசிகள் தர்மவான்கள்; பசித்த வேளைக்கு ஏதாவது கிடைக்கும் என்று அவனுக்குத் தெரியும். ஆயினும் இடியும் புயலுமாக இருந்த அந்த நேரம் கெட்ட நேரத்தில் பிச்சைக்காரனுக்குப் பரிந்து வெளிவர யாருக்கும் மனம் இரங்கவில்லை. வெறும் கையோடு கடைசி வீட்டு வாசற்படி ஏறிய அவன் நிலைகுலைந்து போனான்.

''அம்மா ! அம்மா !'' என்று நெருப்புச் சுட்டுப் பதறுகிறவன் போல் அவன் ஓலமிட்டான்.

''யாரது ?'' என்று கேட்டபடி ஒரு குரல் கதவைத் திறந்தது.

''அட பாவி! பிச்சை கேட்கிற லட்சணமா இது ? யாருக்கு என்னவோ ஏதோ என்று அலறிக் கொண்டு வந்தேன் !''

''தாயே, மகாலட்சுமி, நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும். பாழ்மண்டபத்தில் அவள்

சாகக் கிடக்கிறேன். எனக்கும் பசி மயக்கம் தலை சுற்றுகிறது......"

"பரவாயில்லையே, இரண்டு பேருக்கும் சாப்பாடு கேட்கிறாயே, நல்ல வேடிக்கை, ராத்திரியில்!" என்று சிரித்துக் கொண்டே உள்ளே சென்ற மகாலட்சுமி இலையில் கொண்டு வந்த சோறு உண்மையாகவே இருவருடைய வயிற்றை அடைக்கும் அளவு இருந்தது! அவளை மனமார வாழ்த்தி விட்டுத் தெருவில் இறங்கினான் சேகரன்.

சோற்றைக் கையில் வாங்கிய நொடியில் அவனுடைய பசி அடங்கி, பத்மினியின் பசி நினைவுக்கு வர, 'மழைக்கு முன் அவளை அடைந்துவிட வேண்டும்' என்று அவன் வேகமாய்க் காலெடுத்து வைக்கும்போதே, அவனுடைய வழியை மறிப்பது போல் மழை கொட்டத் தொடங்கியது. கையில் உள்ள சோறு வீணாகிவிடக் கூடாது என்று அஞ்சிய அவன் போட்டிருந்த சட்டையை எடுத்துச் சோற்று மூட்டையின் மேல் சுற்றிக் கொண்டு மழையையும் காற்றையும் வெட்டிக்கொண்டு நடந்தான். அவன் வாழ்க்கை ஒளி தங்கியிருந்த மண்டபத்தை அடைந்து, கையிலுள்ள சோற்று மூட்டையை அவள் அருகில் வைக்கும்போது பசியும் ஈரமும் அவனைக் கீழே தள்ளின.



"ஐந்து ரூபா கடன் கேட்கிறீரே, நீங்கள் யாரென்றே எனக்கு முன் பின் தெரியாதே?"

"அதற்கு நீங்கள் சந்தோஷப்படணும். நான் தெரிஞ்சவங்களிட்டே குறைஞ்சது ஐம்பதாவது கடன் கேட்பேன் சார்!"

"பிரேமா! ஐந்து ரூபாய் கைமாற்று கொடேன்! உனக்குச் சம்பளம் வந்ததும் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்!"



அவன் பத்திரமாக வந்து சேர வேண்டுமே என்ற கவலையோடு காத்திருந்த பத்மினி, பக்கத்தில் வந்து அவன் விழுந்ததும் பதைத்துப் போனாள். அவனுடைய உடலைத் தேய்த்துச் சூடு உண்டாக்கினாள். தான் கட்டியிருந்த எட்டு முழ நீளமுள்ள சேலையைத் தலைப்பிலிருந்து அவன் உடலுக்கும் அவள் சுற்றினாள். இரு தலைகளும், நான்கு கைகளும் உள்ள ஓர் அவதாரம் அங்கு பிறவி எடுத்தது.

அவனுக்கு வெகு நேரம் கழித்து உணர்வு வந்தது; அவளுக்கும் உயிர் வந்தது.

"சாப்பிட்டாயா, பத்மினி?" என்றான் அவன் முதல் கவலையாக.

"சாப்பிடுவதா? நன்றாக இருக்கிறதே! நீங்கள் பிழைத்தால் போதும் என்று இருந்தது. ஒரு நாள் சாப்பிடாவிட்டால்தான் என்ன? இந்த மழை நேரத்தில் ஏன் வெளியே போக வேண்டும்?"

"போனது போகட்டும். மூட்டையைப் பிரி. கோடி வீட்டு மகாலட்சுமி நிறையச் சோறு கொடுத்தாள். நிம்மதியாகச் சாப்பிடலாம்."

பெண் கை ஆண் வாய்க்கு ஊட்ட, ஆண் கை பெண் வாய்க்கு ஊட்ட வயிற்றில் சென்ற அமுது எவ்வளவு ருசியாக இருந்தது!

"உனக்குக் காய்ச்சல் இல்லையே?" என்ற சேகரன் குரலில் இருந்த குழைவு — காதல் என்பது அதுதானோ?

"மழை ஈரத்தில் காய்ச்சல் இருக்குமா?" என்று அவள் கூறிய பதிலைக் கேட்டு இடிகூடச் சற்று ஸ்தம்பித்து விட்டது.

"பத்மினி! நமக்கு வீடு வேண்டாம்; வாசல் வேண்டாம்; தோப்பு வேண்டாம்; துரவு வேண்டாம்; இருவருக்கும் இரண்டு வேளை வயிறாரச் சோறு கிடைத்தால் — அப்புறம் நீதான் ராணி."

"இந்த அரண்மனைக்கு நீங்கள்தான் ராஜா."

"அடடா, மறந்து விட்டேன். அரண்மனை என்றதும் ஞாபகம் வருகிறது. மயக்கம் போட்டு விழுந்தேனே, அப்போது ஒரு வேடிக்கையான கனவு கண்டேன்; கதை போலவே இருந்தது. என் மனத்தின் தாபமே அந்தக் கனவாக வந்ததோ என்னவோ!"

"என்ன அது?" என்று ஆவலுடன் கேட்டவாறு அவள் மேலும் நெருங்கினாள்.

"சொல்ல மாட்டேன், ஜோரான கனவு!"

"உங்களோடு நானும் சந்தோஷப்படக் கூடாது இல்லையா?" என்று அவள் குழறினாள்.


"அதற்குள் கோபித்துக் கொள்கிறாயே!" என்றவன் அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

"சொல்லுங்கள்!" என்று அவள் அவனை அணைத்தபோது, அர்த்தநாரி ரூபத்தில், அவர்கள் காட்சியளித்தனர்.

அவன் கனவைக் கூறத் தொடங்கினான்:

"வெறும் சொப்பனம். ஒரு பெரிய அரண்மனையின் மூன்றாவது மாடியில் நான் நிற்கிறேன். எட்டு முழச் சேலையில் இரண்டு பேர் பதுங்கியிருக்கிறோமே, அந்த மாதிரி அல்ல; விலை சொல்ல முடியாத உயர்ந்த துணி கட்டியிருக்கிறேன். நீ எப்படி இருக்கிறாய்? ராணி என்றால் ராணிதான்! அந்த மேல் மாடியிலேயே செடிகொடிகளும் மொட்டும் மலருமாக வாசனை வீசும் ஒரு மண்டபம்; அந்த மண்டபத்துக்கு நடுவே ஓர் ஊஞ்சல்; அதில் உட்கார்ந்தபடி நீ ஆடுகிற ஆட்டத்தை...."

அந்த உல்லாச மண்டபத்து ஊஞ்சலில் அமர்ந்து ஆடியவண்ணம் குனிந்து நோக்கிய பத்மினிக்குக் கீழே தென்பட்ட உலகம் மிகவும் கீழே வீழ்ந்து விட்டது போலவும், தான் மிகவும் உயர்ந்து ஆகாயத்தைத் தொடப் போவது போலவும் தோன்றியது....



தரமான, உறுதியுள்ள, உழைக்கக் கூடிய

மாட்டுத் தொழுவம் கட்ட

சங்கர் சிமெண்ட்

SANKAR I C CEMENT

இந்தியா

சிமெண்ட்ஸ் லிமிடெட்

சென்னை-2

தொழிற்சாலைகள்: சங்கர் நகர், சங்கரி

Criterion - ICT2231

விவசாயத்தில் இன்று...



(பசுமைப் புரட்சி பற்றிப் பேசுவோர் உண்டு. விவசாயத்தில் ஈடுபட்டுள்ள உங்கள் அநுபவம் என்ன? சுருக்கமாகச் சொல்லுங்கள், வெளியிடுகிறோம். - ஆசிரியர்)

சாதனை புரிவது எப்படி?

இன்றரை மாதத்துக்குமுன் 'கார்த்திகைக்குப் பின் மழை இல்லை; கார்த்திகைக்குப்பின் கொடை இல்லை' என்ற வழக்குப்படி திருக்கார்த்திகையும் கழிந்ததே என நாங்கள் கலங்கி நின்றோம். நாற்றுப் பாவிய நெல் வீட்டில் இருந்தாலாவது இன்னும் மூன்று மாதங்கள் சாப்பாட்டுக்கு வருமே. கொஞ்சம் நிதானித்து நாற்றுப் பாவினோமில்லையே, பல இடங்களில் வெள்ளக்காடாய் அடுத்த மழை நம்பாரில் பொய்த்து விட்டதே' — இப்படி நெஞ்சில் எண்ணற்ற சிந்தனைகள்....

இந்த நிலையில் வந்தார் கிராம சேவக். "ஓர் ஏக்கருக்குக் குறையாமல் வீரிய ஒட்டுச் சோளம் பயிரிடுங்கள். விதையும் அதற்குரிய மருந்தும் இலவசமாகத் தருகிறோம்" என்றார். எங்களுக்கு அளவற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. ஏனெனில், ஒட்டுச் சோளம் அளவு அதிகம் காட்டக் கூடிய பயிர்; பயிர் செய்பவனுக்கு ஒரு வரப்பிரசாதம்.

இதனால் நாங்கள் வயலை உழுது பக்குவப்படுத்தி விதையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் அதிர்ச்சியான செய்தியொன்றைக் கொண்டு வந்தார் அவர். அதாவது ஒரு கிலோ விதைக்கு இரண்டு இரும்புக் கலப்பை வீதம் பணம் கட்டி முதலில் வாங்க வேண்டும் என்பதே அது. சோள விதையின் விலை கிலோ 9 ரூபாய். ஒரு கலப்பையின் விலை 7 ரூபாய். ஓர் ஏக்கருக்குத் தேவைப்படும் சோள விதை சுமார் 3 கிலோ. மற்றும் ஒரு விஷயம், அந்தக் கலப்பை தற்போதைய உழவுக்கு ஏற்றதல்ல. அடுத்த ஆண்டு குளம் பெருகினால் மட்டுமே பயன் படக்கூடியது. இந்த விதமாகச் சோதனையோடும் வேதனையோடும் மாறி மாறி நாங்கள் போராடிக் கொண்டிருக்கும் போது சாதனை புரிவது எப்போது?



வி. உ. உலகநாதன்
(விடாரக்குளம்)

கிடைக்காத கடனுக்குக் காலம் வீண்!

பாங்குகள் தேச உடைமை ஆக்கப்பட்டு ஆறுமாதங்கள் ஆகின்றன. விவசாயிகளுக்குப் பசுமைப் புரட்சித் திட்டத்தின் கீழ் நஞ்சை நிலங்களுக்குப் பத்து வருடத் தவணைகளிலும் புஞ்சை நிலத்துக்கு ஏழு வருஷத் தவணைகளிலும் கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். பாங்குகளில் போய்ச் சரியான செக்யூரிட்டி கொடுத்துப் பணம் கேட்டால் ஒரு வருஷத் தவணைக்குத்தான் கொடுக்கப்படும் என்று சொல்வதுடன் விவசாயிகளை இன்கம்டாக்ஸ்காரர்க்கு ஓராண்டில் என்னவெல்லாம் ஸ்டேட்மென்ட் - கணக்குடன் பாரத்தில் எழுதச் சொல்வார்களோ அதைப் போல் உள்ள பாரங்களைப் பூர்த்தி செய்யச் சொல்கிறார்கள். அந்த பாரத்துடன் ஒரு 'டெக்னிகல் பாரம்' ஒன்று பிரிண்ட் செய்தும் வைத்திருக்கிறார்கள். அதை பி. டி. ஓ.விடம் போய்ப் பூர்த்தி செய்து வரும்படி சொல்கிறார்கள். அப்படிப் போனாலும் பி. டி. ஓ. இருப்பது இல்லை. 'காம்ப் போய் இருக்கிறார்' என்று சொல்கிறார்கள். அப்படி இருந்து விட்டால் வி. எம். ஆர். வரட்டும் என்று பி.டி. ஓ. சொல்லுகிறார். இருவரும் இருந்துவிட்டால் வி. எம். ஆர். கிராமத்துக்கு வந்து விவசாயி வெள்ளாமை செய்திருக்கிறாரா என்று பார்வையிட்ட பிறகுதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். இந்த நிலைமையில் விவசாயி பாங்கில் பணம் கடன் வாங்கி விவசாயம் பண்ணுவது என்பது நடக்கக்கூடிய காரியமா என்பது புரியவில்லை. இந்த நிலைமையில் எல்லாம் பூர்த்தி செய்து கொண்டு விவசாயத்தை நடத்துவது என்றும் காலம் வீணாகிப் போய் விடுகிறது என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.



கே. வி. நாராயணன்
(கல்விடைக்குறிச்சி)



இளமைக் கனவு

ஸோமாஸ்

கோவிலுக்குப் போய்விட்டு வீட்டுக்குத் திரும்பிய கோகிலாம்பாள் சற்று நேரம் வாசல் திண்ணையிலேயே நின்றுவிட்டாள். அவளை அப்படித் தடுத்து நிறுத்தியது அவளுடைய மருமகள் கருணாவின் பேச்சுத்தான்.

உள்ளே கருணாவும் அவள் கணவனும் பேசிக் கொண்டிருந்தனர். பிள்ளையும் மருமகளும் என்ன பேசுகிறார்கள் என்று ஒட்டுக் கேட்கும் கீழ்த்தரமான குணம் கோகிலாம்பாளிடம் கிடையாது. மாமியார் கோவிலுக்குப் போயிருக்கிறாள் என்னும் தைரியத்தில் கருணா சற்றுப் பலமாகவே பேசினாள். அன்று காமுப் பாட்டி கோவிலுக்கு வராததினால் கோகிலாம்பாள் சீக்கிரமாகவே வீடு திரும்பிவிடுவாள் என்பது கருணாவுக்குத் தெரியாது. ஒருவேளை மாமியார் காதில் விழுந்தாலும் நல்லதுதான் என்று எண்ணினாளோ என்னவோ!

பேச்சில் தன் பெயர் அடிபடவே கோகிலாம்பாளுக்கு அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆவல் உண்டாயிற்று. அங்கேயே நின்று விட்டாள்.

''உங்கள் அம்மாவை எப்போது சென்னைக்கு அனுப்பப் போகிறீர்கள்? நானும் எத்தனையோ தடவை சொல்லிவிட்டேன். இதைப் பற்றிப் பேச்செடுத்தாலே நீங்கள் பேச்சை மாற்றப் பார்க்கிறீர்கள். நாம் இரண்டு பேரும் கொஞ்ச நாளைக்குச் சந்தோஷமாய் இருக்கலாம் என்பதற்காகத் தானே அம்மாவை உங்கள் அண்ணாவிடம் அனுப்பச் சொல்கிறேன்? மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலைப் பார்த்தால் அம்மா ரொம்பச் சந்தோஷப்படுவா!''

''என்ன கருணா, இப்படிப் பேசுகிறாய்? நீயும் நானும் தனியாகச் சந்தோஷமாக இருக்கணும் என்று எனக்கு மாத்திரம் ஆசையில்லையா? ஒரு காரணமும் இல்லாமல் அம்மாவைத் திடீரென்று அண்ணாவிடம் எப்படி அனுப்புவது? நானும் அது விஷயமாக யோசித்துக் கொண்டுதான் இருக்கிறேன்.''

''நீங்கள் யோசித்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான். என்ன இருந்தாலும் உங்க மன்னி ரொம்பக் கெட்டிக்காரி. போன தடவை இங்கே வந்திருந்தபோது என்னமாய்ப் பசப்பினாள்! 'அம்மா, நீங்க அங்கேயே எங்களோடே வந்து இருந்துடலாம். ஆனால் இங்கே காவிரி ஸ்நானம் பண்ணிண்டு நிம்மதியாயிருக்கிறதுபோல அங்கே இருக்க முடியாது. உங்க ஆசாரத்துக்கும் அனுஷ்டானத்துக்கும் இந்த ஊர்தான் சரி...' என்று ரொம்ப நாசூக்காகப் பேசிவிட்டுப் போய் விட்டாள். ஏன், உங்க அண்ணாவுக்கும் தாயாரைப் பராமரிக்கணும்கிற பொறுப்பு இருக்கோ இல்லையோ! அத்தோடு முக்கியமான விஷயம் ஒன்று. அதிர்ஷ்ட வசமாக உங்களுக்கு ஸ்கூட்டரும் கிடைத்துவிட்டது!''

''ஸ்கூட்டருக்கும் அம்மா ஊருக்குப் போவதற்கும் என்ன சம்பந்தம், கருணா!''

''சரிதான். போங்கள். நீங்கள் இவ்வளவுதானா? உங்கள் அப்பா, அம்மா எதிரில் ஸ்கூட்டரில் உங்களுக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டு நான் ஜாலியாக ஊர் சுற்ற முடியுமா? உங்கள் அப்பாவாவது கண்டும் காணாதது போல் போய்விடுவார். உங்கள் அம்மா பார்த்துவிட்டால் அவ்வளவுதான்! குடி முழுகிப் போய்விட்டதென்று 'குய்யோ முறையோ' என்று கூச்சல் போட ஆரம்பித்து விடமாட்டாளா? நான் கொசுவம் வைத்துப் பதினெட்டு முழப் புடவை கட்டிக் கொள்ளவில்லையென்று கோவிலுக்கு வரும் மாமிகளிடமெல்லாம் சொல்லி அங்கலாய்த்துக் கொள்ளுகிறாளே உங்கம்மா! இதைக் கேளுங்கள். வர மாதம் உங்கண்ணா குழந்தைக்கு ஆண்டு



நினைவு வருகிறதே. அதற்கு அப்பாவையும் அம்மாவையும் அழைத்துக் கொண்டு போக அவர் இங்கே வருவார். அப்பொழுது 'வெங்கே மிங்கே' என்று கையைப் பிசைந்து கொண்டு அசடு வழியாமல், 'அப்பாவுக்கும் ஒரு 'சேஞ்ஜ்' வேண்டியதுதான். அம்மாவுந்தான் எங்கே போகிறாள்? சென்னையில்தான் கொஞ்ச நாளைக்கு இருக்கட்டுமே' என்று நைஸாகப் பேசி இரண்டு பேரையும் அவரோடு நீங்களே அனுப்பி வைக்கப் பாருங்கள்.''

''நல்ல யோசனைதான் கருணா. நீ சொல்லுகிறபடியே செய்து விடுகிறேன்....''

''இப்படி இழுத்துப் பறித்தாற்போல என்னவோ எனக்காகப் பேசுகிறமாதிரி பேசக் கூடாது. உங்கள் அண்ணா ஊரிலிருந்து வருவதற்கு முன்னதாகவே, நம்ம அப்பா, அம்மா கிட்டே சென்னைக்கு அவர்களை அனுப்பும் யோசனையை நமக்காகச் சொல்லிவிடுங்கள். அப்பொழுதுதான் பழி நம்ம பேரிலே வராமல் இருக்கும். என்ன, நான் சொல்லுவது சரிதானே?''

''அதுவும் சரிதான். உனக்கும் சந்தேகம் என்னத்துக்கு கருணா? இன்றைக்கு ராத்திரி சாப்பிடும்போதே இந்த விஷயத்தை மெதுவாக ஆரம்பித்து விடுகிறேன்.''

''இப்பொழுது என்கிட்டே இப்படித்தான் சொல்லுவீர்கள். அப்புறம் அப்பாவைக் கண்டதும் சம்பந்தம் இல்லாமல் 'என்னென்னவோ உபயோகம் இல்லாத பேச்சுக்களை யெல்லாம் பேசிவிட்டு 'பாயிண்ட்'டை விட்டு விடுவீர்கள்! உங்களுக்கே இதில் இஷ்டம் இல்லையென்றால் இந்தப் பேச்சையே எடுக்க வேண்டாம். கொஞ்ச காலத்துக்கு நாம் சந்தோஷமாயிருக்கலாம் என்பதுதான் என்னுடைய எண்ணம். நான் என்ன அவர்கள் இரண்டு பேரும் வரவே கூடாது என்கிறேனா?''

கோகிலாம்பாளுக்கு அதற்கு மேல் அந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கப் பிடிக்கவில்லை. அவள் கண்களில் நீர் முட்டியது. திண்ணைக் கோடியில் போய் உட்கார்ந்து விட்டாள். ஆனால் அவள்தான் உட்கார்ந்தாளே ஒழிய அவள் உள்ளம் அமைதியாக அவளோடு உட்காரவில்லை. கட்டவிழ்த்துக் கொண்டு சஞ்சரிக்க ஆரம்பித்து ஐம்பது வருஷங்களுக்குப் பின்னோக்கிச் சென்றது.

இப்பொழுது மாடி வீட்டுப் பாட்டியாக விளங்கும் கோகிலாம்பாள் அப்பொழுது வெறும் கோகிலமாகத்தான் இருந்தாள். கோகிலத்துக்கு ஒன்பதாவது வயதிலேயே கல்யாணமாகி விட்டது. அந்தக் காலத்து வழக்கத்தின்படி அவள் பள்ளிக்கூடத்தில்



அதிகமாகப் படிக்கவில்லை. அவள் படிப்பு நான்காவது வகுப்போடு நின்றுவிட்டது. கோகிலத்தின் தகப்பனார் ஒரு தாசில்தார். சதா அவர் வீட்டுக்கு யாராவது வந்த வண்ணமாயிருப்பார்கள். இதனால் கோகிலத்துக்குக் கொஞ்சம் ஊர் உலகத்து விவகாரங்கள் தெரிந்திருந்தன. அப்பொழுதெல்லாம் தாசில்தாருக்கு ரொம்ப மதிப்பு. அதைப் பற்றி இப்பொழுதுகூடக் கோகிலாம்பாள் பெருமையாகச் சொல்லிக்கொள்வாள்: 'இப்பத்தான் யாருக்கும் மட்டு மரியாதை இல்லாமல் போயிடுத்து. அந்தக் காலம் மாறினா? எங்கப்பா தாசில்தாராயிருந்தபோது பார்க்கணும். ஊரில் யாராவது ஒரு வார்த்தை கெட்டியாப் பேச முடியுமா? தாசில்தார் 'காம்ப்' போயிட்டு ஊருக்குத் திரும்பி விட்டாரானா ஊரே 'கப்சிப்' என்று கிடக்கும். சதா சர்வ காலமும் வில்லைச் சேவகன் வாசலிலே கையைக் கட்டிண்டு காத்துண்டிருப்பான்.'

கோகிலம் அவள் தாய் தந்தையர்களுக்குக் கடைக்குட்டியாதலால் ரொம்ப 'செல்லம்'. அவள் சிவப்பாகப் பார்ப்பதற்கு நன்றாயிருப்பாள். தாசில்தார் நிறையச் செலவு செய்து நல்ல இடமாகப் பார்த்து விவாகம் செய்து கொடுத்தார்.

கோகிலம் தன்னிச்சையாய் அதிகாரம் செய்து கொண்டு வாழ்ந்தவள். அவளுடைய விளையாட்டுத் தோழிகள் கூட அவள் சொல்லபடிதான் நடப்பார்கள். கோகிலம் தான் எல்லோருக்கும் தலைவி. பள்ளிக்கூடத்திலும் தாசில்தார் பெண் என்று ரொம்ப 'செல்லம்'. அதனால் கணவன் வீட்டுக்குப் போய்க்கூட அவளுக்கு யாருக்கும் அடங்கி நடக்க விருப்பமில்லை. புக்ககத்துக்கு வந்தவுடனே கணவனிடம் தனிக் குடித்தனம் பற்றிப் பேச்செடுத்தாள். அந்தக் காலத்தில் தனிக் குடித்தனம் பற்றிப் பேசுவதே தவறு. ஆகவே அது நடைபெறவில்லை. கோகிலம் வாழ்க்கைப்பட்ட இடம் நிறையச் சொத்து உள்ள இடம். கிராமத்தில் நிறைய நில புலன்கள் இருந்தன. அதையெல்லாம் கோகிலத்தின் பெரிய நாத்தனாரும் அவளுடைய கணவரும் மேற்பார்வை பார்த்து வந்தனர். கிராமத்துக்கு அவர்களிடம் தன் மாமியாரை அனுப்பி விட்டால், தான் தன் இஷ்டம்போல் நடந்து கொள்ளலாம் என்று நினைத்தாள் கோகிலம். மாமியாரின் கட்டுப்பாடு, கண்டிப்பு இவைகளெல்லாம் அவளுக்குப் பிடிக்கவில்லை.

மெதுவாகக் கணவனிடம் மாமியாரைக் கிராமத்துக்கு அனுப்பிவிடுவது பற்றிப் பேச்செடுத்தாள் கோகிலம்.

"கிராமத்தில் இருக்கும் உங்கள் அக்காளும் அத்திம்பேரும்தானே உங்களுடைய நிலங்களையும் பார்த்துக் கொள்ளுகிறார்கள்? அம்மா அங்கே அடிக்கடி போய் வருவது நல்லதில்லையா? அடிக்கடி போய் வருவது என்றாலும் கஷ்டமாக இருக்கும். அங்கேயே போய் இருந்தால் நல்லது. உங்களுக்கோ வேலைத் தொந்தரவு. ஆபீசுக்குப் போய் வருவதற்குத்தான் சரியாக இருக்கிறது. அம்மா அங்கே இருந்தால் நமக்கும் வருஷம் ஒரு தடவையாவது கிராமத்துக்குப் போய் வர வேண்டும் என்று தோன்றும்..." தன் விருப்பத்தைச் சாமர்த்தியமாக வெளியிட்டாள்.

அவள் நினைத்தது போல் அவள் கணவன் கோபித்துக் கொள்ளவில்லை. ஏற்கனவே இதை எதிர்பார்த்திருந்தது போல் அவள் கணவன் அவளுக்கு அநுகூலமாகவே பேசினான். அவன்தான் அவளது போக்கை நன்றாய்த் தெரிந்து வைத்திருந்தானே?

"உன் அபிப்பிராயத்தை நான் முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன், கோகிலம். நீ இந்த வீட்டுக்கு மருமகளாக வந்து இன்னும் முழுக்க மூன்று மாதம் ஆகவில்லை. அதற்குள் அம்மாவை ஊருக்குப் போகச் சொன்னால் அது அவ்வளவாக நன்றாக இருக்காது. மேலும் உனக்கும் கெட்ட பெயர். இன்னும் சில மாதங்கள் போகட்டும்...." என்று மிகவும் தணிந்த குரலில் குழைவாகப் பேசினான்.

கோகிலம் கணவனின் கருத்துக்கு இணங்க வேண்டியதாயிற்று.

ஒரு வருஷம் ஓடிவிட்டது. கோகிலம் மீண்டும் தன் கோரிக்கையைக் கணவனிடம் எடுத்துச் சொல்லி வற்புறுத்தினாள்.

அவன், "கோகிலம், கொஞ்சம் நிதானமாக யோசனை செய்து பார். என் அம்மாளுக்கு நான் ஒரே பிள்ளை; நீ ஒரே நாட்டுப் பெண். உனக்கு வளைகாப்பு, சீமந்தம் எல்லாம் நடத்திப் பார்த்துவிட வேண்டும் என்று அவளுக்கு ஆசை இருக்காதா? அதற்கப்புறம் அம்மாவை நிச்சயமாகக் கிராமத்துக்கே அனுப்பி வைத்துவிடலாம்" என்று மிகவும் தணிந்த குரலில் குழைவாகச் சொன்னான்.


கோகிலத்தினால் மறுக்க முடியவில்லை. கணவன் சொல்லுவதில் நியாயம் இருப்பதாகவே தோன்றியது.

அடுத்த வருஷம் கோகிலம் தாய்மைப் பேற்றை அடைந்தாள். அந்தப் பேற்றினால் உண்டான மகிழ்ச்சியை விட இனிமேல் மாமியாரைக் கிராமத்துக்கு அனுப்பி வைக்கும் திட்டம் விரைவில் நிறைவேறிவிடும் என்ற எண்ணமே அவளுக்குப் பெரும் பூரிப்பைத் தந்தது. வளைகாப்பு, சீமந்தம் எல்லாம் முறைப்படி நடந்தன. பிரசவத்துக்குப் பிறந்தகம் சென்றபோதுகூட ஞாபகமாகக் கோகிலம் கணவனிடம் தன் கோரிக்கையை வற்புறுத்த மறக்கவில்லை.

"கோகிலம், கொஞ்சம் நிதானமாக நான் சொல்வதைக் கேட்டுவிட்டு யோசித்துப் பதில் சொல்லு. பிறக்கப் போகும் பேரனையோ, பேத்தியையோ எடுத்துக் கொஞ்ச வேண்டும் என்றும் ஆசை ஒரு பாட்டிக்கு இருக்காதா? அதை நாம் தடுக்கலாமா? நீ பிரசவித்து ஊருக்குத் திரும்பி நம் குழந்தைக்கு ஆண்டு நிறைவு நடந்ததும் அம்மாவைக் கிராமத்துக்கு அக்காளிடமே அனுப்பி விடுகிறேன்" — என்று தணிந்த குரலில் குழைவாகக் கூறினான் அவள் கணவன்.

இந்தத் தடவையும் கோகிலத்துக்கு மறுத்துப் பேசத் தோன்றவில்லை. கணவன் சொல்வதில் நியாயம் இருப்பதாகவே தோன்றியது.

கோகிலத்துக்கு ஆண் குழந்தை பிறந்தது. பணக்காரக் குடும்பம். ஆதலால் குழந்தை



வாழ்வில் இன்பம் பன்மடங்காகும்


உமக்கென ஒரு ஜெம் இருந்தால்

வாங்கிக்கொள்ளுங்கள் ஒரு ஜெம்...பெருமையான ஒரு பந்துலகம் உங்களை வரவேற்கும்...கடை கண்ணிக்குப் பல நடைகள் போக வேண்டியிராது...உணவுகள் அதிக நேரம் புதுமையோடு இருக்கும்... திடீர் விருந்தாளிகளைக் கண்டு திடுக்கிட வேண்டியதில்லை...அக்கம் பக்கத்தோரின் மெச்சும் விழிகள் உங்கள் மீது படரும் (பொறுமைக் கண்களும் கூட!) ஆம், உமது இல்லத்திற்கென ஒரு ஜெம் இருந்தால் இன்பம் பன்மடங்காகும்-இழைவான எழிலும் இடவசதியும் மிகுந்தது ஜெம். சேவைத்திறனும் சிக்கனமும் மிக்கது. சுருங்கக் கூறின், நல்ல ரெப்ரிஜிரேட்டருக்கு உள்ள எல்லாப் பண்புகளும் அதற்கு உண்டு. மேலும் உண்டு!

எடுப்பான இதர ஜெம் சிறப்புகள்:

▼ ரெப்ரிஜிரேட்டர்-டைப் ஃப்ரீசர் இரண்டுபிரிவுகளைக் கொண்டது ▼ தானாக இறுக மூடிக்கொள்ளும் புதிய ஆட்டோமேட்டிக் காந்தக் கதவு ▼ குறைந்த மின் செலவு. ▼ சேமிப்புக்கென அதிக அதிக இடப் பரப்பு ▼ ஐஸ், ஐஸ் க்ரீம் இரண்டையும் அதிவிரைவில் உருவாக்கும். ▼ ஓசையற்ற இயக்கம் ▼ உத்தரவாதமாகக் கட்டிறுக்கமாக மூடிய யூனிட்.

286 லிட்டர் மற்றும் 175 லிட்டர் கொள்ளளவுகளிலே கிடைக்கிறது. விலைவிகித ஒப்பந்தப்படி D.G.S. & D. யிடமும் கிடைக்கிறது.



GEM
REFRIGERATOR

விற்பனைக்கு விசேஷப்பேர்:
ஜெனரல் எக்விப்மெண்ட் மர்சென்ட்ஸ் லிட்.
பம்பாய் • கல்கத்தா • சென்னை • அகமதாபாத்
• பெங்களூர் • சண்டிகார் • எர்ணாகுளம்-கொச்சின்
• ஜெய்ப்பூர் • லக்னோ • செகந்தராபாத்
சீஃப் ஆபீஸ்: N-75 கன்னாட் ஸர்க்கஸ், புது டெல்லி-1

AIYARS GEM 33 TM

இவரால் முடியுமா?

வண்டியோட்டிச் செல்லும் வேளையில் ஒவ்வொரு டிரைவரும் எந்த நிமிஷமும் உஷாராக இருந்து, சரியான முடிவுகளைச் சட்டென எடுப்பது அவசியம்.

ஸதர்ன் ரோட்வேஸின் மற்றவர்களின் தரத்திற்கேற்ப இவர் இருக்கவேண்டுமானால், இவரிடம் மெய்யான தரம் இருந்தாக வேண்டும்; முடிவுகளை உடனுக்குடன் எடுத்தாக வேண்டும்.

அதனால்தான் வேலைக்கு நியமிக்கு முன் ஒவ்வொரு டிரைவரையும் நாங்கள் நன்கு சோதிக்கிறோம். பிறகும் அவ்வப்போது இவர்கள் சோதிக்கப்படுகிறார்கள்.

உடலியலிலும், உளவியலிலும் பொறுத்து நாங்கள் நடத்தும் பூரணப் பரிசோதனைகள், தூரத்தைப்பற்றிய துல்லியமான மதிப்பீடு, பக்கவாட்டில் முழுமையாக பார்க்கும் திறன், வண்ணங்களை நன்கு பகுத்தறியும்பான்மை, பிரகாசமான ஒளியால் கூசும் கண்களை விரைவில் மறுபடி இயக்கும் வல்லமை, கண் - கால்களிடை கச்சிதமான ஒத்துழைப்பு ஆகிய அனைத்தும் டிரைவரிடம் பொருந்தியிருக்குமாறு பார்த்துக் கொள்கின்றன.

தனது திறமையான சேவையானது தனது டிரைவர்களின் திறமையையும் சார்ந்துள்ளது என்பதை ஸதர்ன் ரோட்வேஸ் எப்போதும் உணர்ந்திருக்கிறது.

இதன் லாரிகள் இரவு 11-மணியிலிருந்து அதிகாலை 4-மணிவரை ஓட்டப்படுவதில்லை — ஏனெனில், இந்த நேரம்தான் மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரும் நேரம்; இந்த சமயத்தில் தான் பெரும்பாலான சாலை விபத்துகள் நடக்கின்றன என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.


தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், மைசூர், கேரளம் முதலிய மாநிலங்களின் மக்களிடை ஸதர்ன் ரோட்வேஸ் பெரு நம்பிக்கை பெற்றிருப்பதற்கான காரணங்களில் இது ஒன்று.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்

(இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)

மதுரை



பின் ஆண்டு நிறைவைக் கல்யாணம் மாதிரி கொண்டாடினார்கள்.

குழந்தையைப் பார்த்துக் கொள்ளப் பாட்டி மிகவும் தேவையாக இருந்தாள். ஆகவே கோகிலம் மாமியாரை வெளியேற்றும் பிரச்னையைக் கிளப்ப முடியவில்லை. 'கொஞ்சம் போகட்டும்' என்று அதைத் தாற்காலிகமாக ஒத்திப் போட்டிருந்தாள்.



''நேற்று ஸ்வீட் சாப்பிட்ட பிறகு ஏப்பிலே கொஞ்சம் மிக்சர் தந்தாயே! நினைவிருக்கிறதா? பஜ்ஜி சாப்பிட்ட என் வாய்க்கு இப்ப ரெண்டு துண்டு அல்வா கொண்டு வாயேன்!''

அடுத்த இரண்டு ஆண்டுகளில் இன்னொரு பிள்ளை பிறந்துவிட்டது. 'மாமியாரை வெளியேற்றும் மேற்படி பிரச்னை' மீண்டும் ஒத்திப் போடப்பட்டது. பிறகு கோகிலம் ஓராண்டு காலம் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாய்க் கிடந்தாள். அப்பொழுது அவளையும் குழந்தைகளையும் குடும்பத்தையும் மாமியார் தான் கவனிக்க வேண்டியிருந்தது. இப்பொழுது மேற்படி பிரச்னை தானாகவே தள்ளிப் போட்டுக் கொண்டு விட்டது!

கோகிலம் உடம்பு நன்றாகத் தேறி எழுந்து விட்டாள். அவள் கணவன் தானாகவே பழைய பிரச்னையைக் கிளப்பினான்: ''அம்மாவைக் கிராமத்துக்கு அனுப்பி விடலாம் என்று பார்க்கிறேன்...'' என்று தணிந்த குரலில் குழைவாக ஆரம்பித்தான். அவன் முகத்தில் பொருள் பொதிந்த புன்னகை பூத்திருந்தது!

''ஆமாம்... என்னைக் குத்திக் காட்டிச் சீண்டுவதில் உங்களுக்கு ஒரு சந்தோஷம். அம்மா இனிமேல் எப்போதுமே இங்கேயே தான் இருக்க வேண்டும். அம்மாவைக் கிராமத்துக்கு அனுப்புகிற பேச்சு இனிமேல் கிடையாது...!'' என்று கூறும்போதே, கோகிலத்தின் கண்களில் நீர் ததும்பியது.

ஆதரவோடு அவள் கரங்களைப் பற்றிய கணவன் பெருகி வந்த கண்ணீரைத் துடைத்தான்.

எத்தனையோ வருஷங்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகளின் நினைவு கோகிலாம்பாளின் கண்களில் கண்ணீரைப் பிரவாகமாகப் பெருகச் செய்தது. அப்பொழுது போலவே இப்பொழுதும் அவள் கரங்களை ஆதரவோடு பற்றி அவள் கணவர் பெருகி வந்த கண்ணீரைத் துடைத்தார்.

''நான் மகா பாவி. எனக்கு மன்னிப்பே கிடையாது. அப்பொழுது என் மாமியாருக்கு இழைக்க நினைத்த தீங்குதான் இப்பொழுது என்னையே வெளியேற்ற விசுவரூபம் எடுத்துவிட்டது....'' இதற்கு மேல் கோகிலாம்பாளால் பேச முடியவில்லை. விம்மி விம்மி அழத்தான் முடிந்தது.

''கோகிலம்! உனக்கு முன்னாலேயே நம்மை வெளியேற்ற நடக்கும் ஏற்பாடு எனக்குத் தெரியும். நீ கோவிலிலிருந்து வந்து உள்ளே நடக்கும் பேச்சைக் கேட்டுத் திடுக்கிட்டு அப்படியே நின்று விட்டாய். அப்பொழுது மறுபுறத் திண்ணையில் நான் இருந்ததை உனக்கு இருந்த அதிர்ச்சியில் நீ கவனிக்கவில்லை. போகட்டும். கவலைப்படாதே. நாம் பெரிய பிள்ளையிடமும் போக வேண்டாம். சின்னப் பிள்ளையிடமும் இருக்க வேண்டாம். நாம் காசிக்குப் போகிறோம். பக்கத்து வீட்டு நாகநாதய்யர் குடும்பமும் நம்முடன் வருகிறது. அங்கே தங்கியிருப்பதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டேன். சமையலுக்கு ஆள் முதற்கொண்டு நியமித்து விட்டேன். எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியான பிறகு உன்னிடம் சொல்லலாம் என்றிருந்தேன்..'' என்று மிகவும் கனிந்த குரலில் குழைவாகக் கூறினார் அவர்.

கோகிலாம்பாளால் கணவரை நிமிர்ந்து பார்க்கவே முடியவில்லை. அறுபது வயதுக் குமரியான அவள் மணப் பெண் மாதிரி தலையைக் குனிந்து கொண்டாள்.

''என் திட்டம் உனக்குப் பிடித்திருக்கிறதா கோகிலம்? காசிக்குப் போக உனக்கு இஷ்டம் தானே? காசியில் நாம் தனிக் குடித்தனம் நடத்தப் போகிறோம். அங்கே மாமியார் படுத்தல், மருமகள் பிடுங்கல் எதுவும் கிடையாது. நீயும் நானும் மட்டும்தான்!''

உடனே கோகிலாம்பாள் அவரை வணங்கிப் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டு, ''இப்பொழுதே நான் உங்களோடு காசிக்கு வரத் தயார். நாம் எப்பொழுது புறப்பட வேண்டும்?'' என்று குரல் தழுதழுக்கக் கேட்டாள்.

''அவசரப்படாதே, கோகிலம். நம் பேரனுக்குச் சென்னையில் ஆண்டு நிறைவு நடக்கப் போகிறது இல்லையா? அதற்குப் போய்விட்டு அங்கிருந்து நேரே காசிக்கு ரயில் ஏறவேண்டியதுதான். என்ன, சரிதானே?''

கோகிலாம்பாள் மிகுந்த சந்தோஷத்தோடு தலையாட்டினாள். இத்தனை வயதுக்குப் பிறகாவது தனிக் குடித்தனம் நடத்த வேண்டும் என்ற தன் விருப்பம் காசிக்குப் போயாவது நிறைவேறப் போகிறதே என்று சந்தோஷப்பட்டாள் போலும்.

ஆனால் கோகிலாம்பாள் அவசரப்பட்டு விட்டாள். சென்னையில் தன் மூத்த மகன் வீட்டுக்குப் போகும்போது அங்கே தன் பேரனுக்கு உடம்பு சரியில்லாமல் போகும் என்பதோ அதன் காரணமாகக் காசிப் பயணத்தை அவர்கள் ஒத்திப் போட நேரிடும் என்பதோ, அதைத் தொடர்ந்து, 'சுகுணாவுக்கு மசக்கை ஏற்பட்டு ரொம்ப அவஸ்தைப் படுகிறாள், உடனே வரவும்' என்று தன் இளைய மகனின் கடிதம் வரும் என்பதோ அப்போது தெரிந்திருந்தால் கோகிலாம்பாள் சந்தோஷப்பட்டிருக்க மாட்டாள். அவள் இளமைக் கனவை நிறைவேற்றி வைக்க ஆண்டவன் என்று திருவுள்ளம் கொள்வானோ? அறுபது வயசுதானே ஆகிறது கோகிலத்துக்கு? இன்னும் பத்து வருஷங்கள் போகட்டும் என்று அவன் காத்திருக்கலாம்.

பள்ளியம்பாடி பகவதி அம்மன் கோவில் திருவிழாவுக்கு இன்னும் ஆறே நாட்கள்தான் இருக்கின்றன. கோவிலுக்கு நேர் எதிரே இருக்கிற மைதானம் புல்லும் பூண்டுமாய் மண்டிக் கிடந்ததெல்லாம் அகற்றப்பட்டு, துப்புர வாய்ப் பூசி மெழுகின மாதிரி காட்சியளித்தது. வருஷத்தில் ஒரு தரம் கோடை காலத்தில், கோவில் திருவிழாவின் போது மட்டும் தான் இந்த மைதானத்துக்கு ஓர் 'அழகு' வரும். கோவில் திருவிழா மூன்று நாட்கள் நடக்கும். திருவிழாவுக்கு முதல் நாளே குடை ராட்டினம், பூக்கடை, பட்டாணிக் கடை, 'எது எடுத்தாலும் பத்து பைசா' இதெல்லாம் வரிசையாய் வந்து விடும் இங்கு. மூன்று நாட்களும் ராத்திரியில் கூத்து நடக்கும். மைதானத்துக்கு அண்டையில் இருக்கிற பகவதி தோட்டத்து ஆட்கள் வேஷம் கட்டுவார்கள். போட்டிக்குப் பக்கத்து ஊர்களிலிருந்தும் வேஷம் கட்ட ஆட்கள் வருவதுண்டு. இது வரை யாரும் கூத்தில் பகவதி தோட்டத்து ஆட்களை வெற்றி கொண்டது கிடையாதாம்.


''உன் கருணையையும் சக்தியையும் எம் மேலேயும் கொஞ்சம் காட்டு தாயே; என் குறையையும் தீர்த்து வையடி. நீதான் எனக்குக் கண்ணாலம் பண்ணி வைச்சே. எட்டு வருஷமா, ஒரு புள்ளையையும் பெத்துக்கிட்டு, நான் 'அதுகூட' எப்படி வாழ்ந்துக்கிட்டிருக்கேன்னு உனக்கே தெரியும். அது மனசிலே நீ பூந்து, நல்ல புத்தி சொல்லி எங்களைக் காப்பாத்து தாயீ!''

பிராகாரத்துக்கு வெளியில் உருக்கமாய் வேண்டிக் கொண்டு நின்றாள், பகவதி தோட்டத்துவாசியான கண்ணம்மா.

''யம்மாவ்!''

அவள் திரும்பினாள். அவள் மகன் சோமு நின்று கொண்டிருந்தான் கையைக் கட்டிக் கொண்டு. பிராகாரப் படியில் இருந்த குங்குமத்தை இட்டுக் கொண்டு, சோமுவுக்கும் இட்டு விட்டாள்.

'' ஏம்மா, பகவதியாயி கிட்டே என்ன சொல்லிக் கும்பிட்டே?''



தெய்வக் கனல்

பி. ராமமூர்த்தி

''நான் வேறே என்னடா சொல்லிக் கும்பிடப் போறேன்? ஒங்க அப்பாரு குடி, சூது, போக்கிரித்தனம் பண்ணுமே ஒழுங்கா யிருக்கணும்; இந்த வருஷமாச்சும் ஜெயிலுக்குப் போகாமெ இருக்கணும் அப்படின்னு வேண்டிக்கிட்டேன்.'' சோமுவின் கலைந்த தலையைக் கோதியபடி சொன்னாள் கண்ணம்மா.

சோமுவை அழைத்துக் கொண்டு பகவதி தோட்டத்துக்கு வந்தாள் கண்ணம்மா. அவர்கள் குடிசையில் அவள் புருஷன் கருப்பையா காட்டுக் கத்தலாய் என்னென்னவோ கத்திக் கொண்டிருந்



தான். கண்ணம்மாவுக்குப் புரிந்து விட்டது. நன்றாய்க் குடித்துவிட்டு இப்படி அட்டூழியம் பண்ணுவான் கருப்பையா. இன்றைக்கு அவளுக்கு அடி, உதை, குத்து என்று வஞ்சகமில்லாமல் 'செமத்தி'யாய்க் கிடைக்கும்.

கருப்பையா இந்நேரம் காட்டுப் பக்கம் போயிருப்பான். தன் சகாக்களோடு 'சீட்டு'ப் போடுவதற்கு. அவனுக்கு உலகத்தில் தெரிந்ததெல்லாம் குடிப்பதும், மற்றவர்களை மிரட்டுவதும், சீட்டு விளையாடுவதும்தான்.

எல்லோரும் நல்லவர்களாகவே இருக்கிற பகவதி தோட்டத்தில் அவன் ஒருத்தன் மாத்திரம் திருஷ்டிப் பரிகாரமாயிருந்தான். எல்லோரும் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்கிற பகவதி தோட்டத்தில் அவன் ஒருத்தன் மாத்திரம் சோம்பேறியாய், குடிகாரனாய் இருந்தான்.

கண்ணம்மா அவனுக்கு வாழ்க்கைப்பட்டதிலிருந்து அடி உதையைத் தவிர வேறு எந்த சுகத்தையும் கண்டதில்லை. வீட்டுக்குக் காலணா சம்பாதித்துக் கொண்டு வந்ததும் கிடையாது கருப்பையா. கண்ணம்மா கூலி வேலைக்குப் போவாள். சில சமயம் உள்ளூரில் வேலை இருந்தாலும், பெரும்பாலும் மூன்று நான்கு மைல் வேலைக்கு நடந்துபோக வேண்டியிருக்கும் அவள். நாள் முழுதும் வெயில் என்றும் மழை என்றும் பாராமல், சேற்றிலும், கண்ணும்பியிலும் உயிரை விட்டு விட்டு இருட்டத் தொடங்கியதும் குடிசைக்கு வருவாள், கெஞ்சுகிற காசை எடுத்துக் கொண்டு.

நான் உழைத்துப் போட்டு அவன் உட்கார்ந்து சாப்பிடுகிறானே என்று துளியும் வருத்தம் கிடையாது கண்ணம்மாவுக்கு. அவன் குடிப்பது, ஊராரிடம் வம்புக்குப் போவது இதெல்லாம் இல்லாமல் நல்லவனாய் இருந்தால் இன்னும் எத்தனை ஜன்மத்துக்கு வேண்டுமானாலும் அவள் அவனுக்காக உயிரைக் கொடுத்து உழைக்கத் தயார்.

அப்பாடி . நல்லவனாய் மாற மாட்டேன் என்று சத்தியாக்கிரகம் பண்ணுகிறானே கருப்பையா?

சூன்யவெளியில் சிக்கிக் கொண்டது கண்ணம்மாவின் வாழ்க்கை.

இன்பமாய் அவ்வாழ்க்கையை நடத்த வேண்டிய வயதில், பல இரவுகளில், உழைத்த களைப்புக்குக்கூட உறங்காமல், ''இந்நேரம் சோமு அப்பாரு ஜெயிலுக்குள்ளே என்னை நினைச்சிக்கிட்டிருப்பாரோ?'' என்று எண்ணுவாள்.

சிறை எல்லோரையும் திருத்தத்தான் இருக்கிறது என்றாலும் கருப்பையாவைப் போன்றவர்கள் போய்விட்டு வந்தும் திருந்தாமல், மேலும் குற்றம் செய்வதிலேயே உரம் பெற்று விடுகின்றனரே!

அடுத்த நாள்.

நல்ல உச்சி வெய்யிலில், எங்கும் வேலை இல்லாமல், வரப்புப் பக்கமாய்க் குடிசையை நோக்கி வந்துகொண்டிருந்தாள் கண்ணம்மா.

எதிர்த்தாற்போல் பக்கத்துக் குடிசைக்காரக் கிழவி 'தூக்குப் போணி'யோடு வந்து கொண்டிருந்தவள், கண்ணம்மாவைக் கண்டதும் நின்றாள். ''என்ன ஆயா?''

''ஒம் புருஷன் செஞ்சிருக்கிற அக்கிரமத்தைக் கேட்டியா?'' என்று கிழவி பயந்த குரலில் கூறினாள்.

கண்ணம்மாவுக்குப் பகீர் என்றது. யார் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டிருக்கிறேனு கருப்பையா ?

"நான் காலையிலே போனவன் இப்பத்தான் வர்றேன்" என்றாள் கண்ணம்மா.

கிழவி நீட்டி முழக்கிச் சொன்னுள்: "உம் புருஷன் கருப்பையா, கோவில் திருநாளுக்காகப் பூசாரியார் வசூல் பண்ணிக்கிட்டு வந்த பணத்தை அடிச்சுப் பிடுங்கிக்கிட்டு ஓடிட்டானும். பூசாரியாரு பதறித் துடிச்சுக்கிட்டு அவனைத் தேடிக்கிட்டு ஆளுகளோட காட்டுப் பக்கம் போயிருக்காரு. பூசாரியாரு பணம்னு கூடக் கவலைப்படலாட்டாரு; ஊருப் பணம். ஊரு, பகவதியாயி கோயிலுக்குன்னு தந்தது. இந்தா பாரு, யாருகிட்டே வேணும்னுலும் விளையாடட்டும் உன் புருஷன். ஆனா பகவதியாயி விஷயத்திலே மருவாதையா யிருக்கச் சொல்லு. அவன் காலித்தனம் ஊராருகிட்டே இருக்கட்டும்; தெய்வத்துக்கிட்டே வேணும். தெய்வம் நின்னு கொல்லும்பாங்க. ராவுக்கு அவன் வீட்டுக்கு வந்தா பணத்தைத் திருப்பிப் பூசாரி கிட்டே கொடுத்திடச் சொல்லு நியாயமா!"

கண்ணம்மா சிலையாய் நின்று விட்டாள். கிழவி சொன்னதைக் கேட்டு. வேகாத வெய்யிலில் காலையிலிருந்து பச்சைத் தண்ணி கூடக் குடிக்காமல் அலைந்துவிட்டு வருகிற அவளுக்கு எப்படிப்பட்ட இனிய செய்தி ?

"நானியாவது. எம் மகனுக்குப் பசி பொறுக்காது" என்று கூறி விட்டுத் தூக்குப் போணியைக் கை மாற்றி எடுத்துக் கொண்டு நடந்தாள் கிழவி.

கண்ணம்மாவுக்குத் தன் மகன் சோமுவின் நினைவு வந்தது.

அவன் பசி பொறுத்துக் கொள்வான் !

சோமுப் பயல் கண்ணம்மாவின் 'ஒரு காலத்து'ப் புடவையைப் போட்டுக் கொண்டு உறங்கி விட்டான். ஒரே புழுக்கமாய்ப் புழுங்கித் தொலைத்தது. மரங்கள் ஆடாமல் அசையாமல் சித்திரம் போல் இருந்தன. ஓலை விசிறியால் மகனுக்கு விசிறினள் கண்ணம்மா. இன்னும் கருப்பையா வந்தபாடில்லை.

கிழவி மதியம் சொல்லி விட்டுப் போனதிலிருந்து ஒன்றுமே ஓடவில்லை கண்ணம்மாவுக்கு. மதியமே காட்டுப் பக்கம் போய்க் கூடத் தேடிப் பார்த்தாள் கணவனை. கையில் காசு இருக்கிற திமிரில் எங்கே போய்த் தொலைந்தாரோ அவன்.

"தானு தந்தினு... ஓ.... தானுதினு !"

அபஸ்வரக் குரல். அவன், கருப்பையா வந்து விட்டான்.

கருப்பையா குடிசைக்குள் வந்ததும் கதவைத் தாழிட்டான் ஜாக்கிரதையாய்.

"என்னடி... ஒரு மாதிரி இருக்கிறே ?" தான் ஒரு மாதிரி இருந்து கொண்டு கண்ணம்மாவைக் கேட்டான் இப்படி.

"நீங்க செய்யறது கொஞ்சமாச்சும் நல்லா இருக்குதா?" என்று கண்ணம்மா வெடித்துச் சீறினள்.

"மத்தவங்களுக்கு நல்லா இருக்கிறதா பார்த்து நான் செய்யறதில்லே. எனக்குப் புடிச்சதை, என் இஷ்டப்படி செய்யறதுதான் வழக்கம்." அவன் [illegible] இது.

"உங்க இஷ்டப்படி குடிங்க. சூது ஆடுங்க. ஜெயிலுக்குப் போங்க. யாரு வேணுமின்னு? ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு மனுஷனையே கடிச்ச கதையா பகவதியாயி பணத்தையே களவாடிட்டுப் போகிற அளவுக்குத் துணிஞ்சிட்டீங்க. இது அடுக்குமா ?"

"ஏய், என்னைக் கேள்வி கேக்கற அளவுக்கு உனக்குத் தைரியம் வந்திடுச்சா ?"

"பகவதியாயிக்கு ஊர் கொடுத்த பணத்தைக் களவாடற தைரியமே உங்களுக்கு வரும் போது, எனக்கு இந்த அளவுக்குக்கூடத் தைரியம் வரக் கூடாதா ?"

"என்னடி, பகவதியாயி பகவதியாயின்னு பொலம்பறே. அப்படி ஒண்ணு இருக்கிறதா நெனைக்கிறவங்களுக்குத்தாண்டி அந்தப் பய மெல்லாம். நீ சொல்ற பகவதியாயி எனக்குச் சாதாரணக் கல்லு. கல்லுக்குப் போயி ஊர் வைத்தியக்காரனுவ திருவிழான்னு கலாட்டா பண்றானுவ. அதுக்குக் காணிக்கை வேறே. ஹா... ஹா... ஹா!" அட்டகாசமாய்ச் சிரித்தான் கருப்பையா.

"வேண்டாம், சிரிக்காதீங்க. அழிஞ்சு போறதுக்குத்தான் இந்தப் பேச்சுப் பேசறீங்க." அவளுக்குத் தன் தாயைப் பற்றியோ அவள் சக்தியைப் பற்றியோ, கணவன் வாயினுலேயே அவதூறாய்க் கேட்பது நாராசமாய் இருந்தது.

"நான் ஏண்டி அழிஞ்சு போறேன்? மனசு வச்சேன்னு பகவதியாயிக்கு மூணு நாள் திருவிழா நடக்கப் போவுதே, அப்பவே, இதெல்லாம் பொய்யின்னு நிரூபிச்சு, பகவதியாயி மேலே மத்தவங்க வச்சிருக்கிற பைத்தியக்காரப் பக்தியை அழிக்கப்போறேன். தெரிஞ்சுக்கிட்டியா ?" பிள்ளையார் பிடிக்க எதுவாகவோ முடிந்த கதையாய்ப் பூசாரியாருக்கு அவனிடமிருந்த பணத்தை அவன் மீட்டுக் கொடுக்க முயலப் போய் இப்படி ஓர் அநியாயப் பேச்சு கேட்கும்படியாயிற்று.

அவளுக்குக் கிறங்கலாய் இருந்தது.

மண்ணெண்ணெய் விளக்கைச் சின்னதாக்கி விட்டுப் பாயைப் போட்டுக் கொண்டு விழுந்தான் கருப்பையா.

கண்ணம்மாவின் விழியோரங்கள் அந்த இருட்டிலும் பளபளத்தன.

"பகவதியாயி, எனக்காக அவருக்கு மன்னிப்புக் கொடு !"

பகவதி அம்மன் கோயில் திருவிழா ஆரம்பமாகி விட்டது.

திருவிழா மூன்றும் நாள். அன்றைக்குத்தான் ரொம்பவும் விசேஷம்; பகவதி அம்மனுக்கு வேண்டுதல் செய்து கொண்டு பூக்குழி இறங்குவார்கள். நாக்கில், உடம்பில் வேல் குத்திக் கொள்வார்கள்.

கோயில் 'லவுட்ஸ்பீக்கர்' அலறியது.

"பூக்குழி இறங்குகிறவர்கள் கோயில் வாயிலில் தனியே நிற்கவும். கூட்டத்தார் பூக்குழிக்குச் சற்றுத் தூரத்திலேயே நின்று பக்தர்களுக்கு ஒத்தாசை செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது !"

"கேட்டியா, அண்ணே !" கூட்டத்தின் ஒரு மூலையில் இருந்த கருப்பையாவின் சகா ஒருத்தன் அவனைக் கேட்டான்.

"ம்... பக்தர்களாம். [illegible]

தம்பயே. இந்தக் கோவில் பசங்களை ஓட ஓட விரட்டணும் அப்புறம்!'' பீடிப் புகையை விட்டுக் கொண்டு சொன்னான் கருப்பையா.

அன்றைக்குத் திட்டமிட்டுத்தான் வந்திருந்தான் கருப்பையா, கலாட்டா செய்வதற்கு என்றே தன் சகாக்களோடு. கண்ணம்மா வேறு பகவதியம்மன் மீது கொண்டிருந்த பக்தி அவனுக்கு எரிச்சலூட்டியது. அவனும் இன்று பூக்குழி இறங்கப் போகிறான். தெய்வ சக்தி என்பதெல்லாம் பொய். தான் தெய்வத்தை வேண்டிக் கொண்டு பூக்குழி இறங்கவில்லே. என்ன ஆகிவிட்டது தனக்கு? என்று ஜனங்களைக் கேட்கப் போகிறான். பழி வாங்குவதாக எண்ணம் இப்போது அவனுக்கு.

''தெய்வத்தைப் பழி வாங்கப் போகிறான்!''

''வாங்கடா, தீக்குழிக்குப் பக்கத்திலே போய் நிற்போம்!'' — அவன் சகாக்கள் பின் தொடர்ந்தனர்.

கணகணவென்று இருந்தது குழித்தழல்.

''பகவதியாயி.... பகவதியாயி ! எங்களைக் காப்பாத்த வந்தவளே பகவதியாயி!'' பக்திப் பெருக்கில் ஒருவர் தெய்வமேறிக் குதித்தார்.

கருப்பையாவும் தோழர்களும் சிரித்தார்கள் கேலியாய்.

அடுத்து பூக்குழி இறங்குபவர்கள் கோவிலிலிருந்து வெளிப்பட்டனர், கழுத்தில் மாலைகள் விளங்க, இடுப்பில் மஞ்சள் துணியோடு.

கூட்டத்தார் ஒருவரையொருவர் நெருக்கித் தள்ளிக் கொண்டு, பூக்குழி இறங்கும் புண்ணிய காட்சியைக் காண முண்டியடித்துக் கொண்டு முன்னால் வந்தனர்.

கூட்டத்தில் இருந்த கண்ணம்மா, தன் கணவன் அங்கே நிற்பதைக் கண்டு அவன் அருகில் வந்தாள்.

''நீங்க எதுக்கு இங்கே நிற்கிறீங்க ?''

''தீக்குழி எறங்கப் போறேண்டி!''

''இப்பவாச்சும் புத்தி வந்திச்சே; பகவதியாயி உங்களை மன்னிக்கடுவா!''

''ஏய், நான் ஒன் பகவதியாயியை வேண்டிக்கிட்டுத் தீக்குழி எறங்கலே.''

''பின்னே ?''

''நடக்கப் போறதை நீயே பாரு !''

அதோ, பக்தர்கள் ஒருவர்பின்னே ஒருவராய் அந்தத் தெய்வத்தின் நாமத்தைச் சொல்லிக் கொண்டு அப்படியும் இப்படியுமாய் மூன்று தரம் இறங்குகின்றனர், பூக்குழியில்.

கருப்பையா தன் தோழர்களுக்கு ஜாடை காட்டிவிட்டுத் தீக்குழியில், அவனுக்கு அது தீக்குழிதான்; இறங்கினான்.

''ஐயையோ.... ஐயையோ !''

''அண்ணே !''

பாதங்கள் குழியில் பட்டதும், குழியிலிருந்து மேலே ஏறினான் ஒரே தாவலில். இருந்தும் ஏன் இப்படிக் கத்துகிறான்?

''நான் சொன்னேன், கேட்டியா?'' என்று கணவனைத் தாங்கிப் பிடித்தாள் கண்ணம்மா.

கருப்பையா இன்னும் அலறிக் கொண்டிருந்தான்.

அவன் சகா ஒருவன் ஓடோடிப் போய் இங்கிப் பாட்டிலைக் கொணர்ந்து நன்றாய்க் கொப்புளித்துவிட்ட அவன் கால்களில் கொட்டினான்.

''அண்ணே...ஒம் மகனைப் பாரு !''

கண்ணம்மாவும் பார்த்தாள், இடுப்பில் மஞ்சள் துணியோடு, கழுத்தில் சின்ன மாலையோடு பூக்குழியில் இறங்கிக் கொண்டிருந்தான் சோமுப் பயல்.

''டேய்... அவனைப் பிடிங்கடா !'' என்று கத்தினான் கருப்பையா. தன்னைச் சுட்ட மாதிரியே நெருப்பு மகனையும் சுட்டுவிடப் போகிறதே என்ற பயம் அவனுக்கு.

''வேணும்ப்பா... அது நெருப்புக் கனல் இல்லே; தெய்வக் கனல்.... அதுக்கு யார் யாரைச் சுடணும்னு தெரியும்!'' இவ்வளவு நேரமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஊர்ப் பெரியவர் ஒருவர் 'அர்த்தத் தோடு' சொன்னார்.

சோமு மூன்று தடவை பூக்குழியில் இறங்கிவிட்டு மேலேறினான்.

''டேய், சோமு!'' கருப்பையா கூப்பிட்டதும் அவனருகே வந்தான் சோமு.

''உனக்கு நெருப்புச் சுட்டுதாடா ?'' என்று மகனின் கால்களை ஆராய்ந்தான். சோமுவோ கலகலவென்று சிரித்தான்.

''சாமியைக் கும்பிட்டுக்கிட்டு இறங்கினா அது எப்படிச் சுடும்?'' என்றான் அவனிடம்.

''நீ என்னடா கண்ணு வேண்டிக்கிட்டு பூக்குழி இறங்கினே?'' என்றாள் கண்ணம்மா.

சோமு சொன்னான்:

''பகவதியாயி, எங்க அப்பாரு கெட்ட காரியம் செய்யாம நல்லவரா இருக்கணும். எங்க அம்மாவை அடிக்கக் கூடாது. வேலைக்குப் போய்ச் சம்பாரிக்க என்னைப் படிக்க வைக்கணும். இதெல்லாம் செய்யின்னு, அம்மா.''

மகனை வாரி அணைத்துக் கொண்டாள் கண்ணம்மா.


''பகவதியாயி !'' என்று கத்தினான் கருப்பையா. வழக்கமாக அவன் கத்தும் கத்தலல்ல இது.




''ஏண்டா உனக்குத் திமிரா? என் பிரண்ட் குமரேசனை 'கும'ன்னும் கதிரேசனை 'கதி'ன்னும் கூப்பிட்டாயாமே, அப்படித்தான் கூப்பிடறதா?''

''ரேசன் ஒழிஞ்ச விஷயம் உனக்குத் தெரியாதா அப்பா?''

டிவிஎஸ் கட்டும் பாடிகள் பலவகையான டிசைன்களை உங்களுக்கு அளிக்கிறது





நீங்கள் தேர்ந்தெடுக்கும் எந்த டிசைன் வேண்டுமானாலும் டிவிஎஸ் கவலைக்கு இடமில்லாமல் கட்டித்தரும். ஒவ்வொரு பாடியின் அமைப்பும் மிக சேர்த்தியானது. உறுதியானது. அவை அதிர்ச்சியையும், ஆட்டத்தையும் தாங்கக்கூடியது. மிகக் குறைந்த எண்ணெய்ச் செலவிற்கும், டயர் அதிகமாகத் தேயாத வகையில் இயங்கும் அமைப்பு கொண்டது. அரைவு இல்லாதது. சுகதி நிறைந்தது. இவை அனைத்தும் பல்லாண்டுகளுக்கு நீடித்திருக்கக்கூடியவை.


டிவிஎஸ்ஸில், பாடி கட்டுவதில் முன்னேற்றம் காணுவதற்குரிய சிறப்புப்பகுதி ஒன்று செயல்படுகிறது. அதில் இடைவிடாத சிந்தனையின்மூலம் குறைந்த எண்ணெய்ச் செலவில் ஓடுவதற்கான எடையுடன், கவர்ச்சிமிக்கதாயும், பார்வைக்கு அழகாகவும், சுலபமான ஓட்டச்சக்தியைக் கொண்டதாயும் உள்ள சிறிய முறைகளுடனும், அமைப்புகளுடனும் நிபுணர்கள் பாடிகளை அமைக்கிறார்கள்.

டிவிஎஸ்-பாடிகள் கட்டுவதற்கு நாம் சோதிக்கப்பட்ட கச்சாப் பொருட்களையே உபயோகப்படுத்துகிறது. நீடித்து உழைக்கும் பாஸ்பேட்டட் MS ஷீட்டுகளையும், உயர்தர மரச்சாமான்களையும் உபயோகித்து, உறுதித்தன்மை கெடாமல் இருக்க கோட்டிங் செய்கிறார்கள். புதிய டிசைன்களை சாலைகளில் செயல்முறைச் சோதனை செய்த பின்னரே பாடி அமைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு பாடியையும் எல்லாவிதமான மிகக்கடுமையான சோதனைகளுக்குப் பின்னரே டெலிவர் செய்கின்றனர்.

நீங்கள், டிவிஎஸ்ஸில் பஸ் பாடி கட்ட ஆர்டர் கொடுத்தால் அவர்களுடைய பாடி கட்டும் தொழிலின் 45 ஆண்டு பழுத்த அனுபவத்தின் பயனையும் அடைவீர்கள்.

டிவிஎஸ் — இந்தியாவிலேயே மிகப்பெரிய பாடிகள் கட்டும் ஸ்தாபனம்.



TVS உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை (இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)

SI-5100

வங்காளி மூலம்:
ஸ்ரீ மனோஜ் வசு



இரக்கம்

தமிழாக்கம்:
சு. கிருஷ்ணமூர்த்தி

ஒரு முக்கிய காரியமாக ஒருவரைச் சந்திக்கப் பாராசாத் போய்க் கொண்டிருந்தேன். இதற்கு முன் நான் அங்கு சென்றது இல்லை. ரயிலில் ஒரு பிரயாணி அறிமுகமானார். அவர் பெயர் பொனாயி பால். அவர் பாராசாத்காரராம். அது மட்டுமல்ல; நான் யாரைப் பார்க்கப் போய்க் கொண்டிருந்தேனோ அவருடைய வீட்டுக்குப் பக்கத்தில்தான் இவருடைய வீடாம், அவரையும் நன்றாகத் தெரியுமாம் இவருக்கு. எனக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று.

பாராசாத் ஸ்டேஷனில் இறங்கி ரயில்வே கேட்டைத் தாண்டிச் சில அடிகள்தான் சென்றிருப்போம். பின்புறத்திலிருந்து ஒரு பெரிய அமளி காதில் விழுந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தோம்.

கிழிந்த அரைக்கால் சட்டையணிந்த ஒரு பையன் சுமார் பன்னிரண்டு வயது இருக்கலாம் அவனுக்கு. - அவனைக் கேட்டில் இருந்த டிக்கட் கலெக்டர் பிடித்துக்கொண்டிருந்தார். பையன் டிக்கெட்டில்லாமல் பிரயாணம் செய்துவிட்டுக் கூட்டத்தில் சந்தடியின்றி நழுவப் பார்த்திருக்கிறான். டிக்கட் கலெக்டர் அவனைப் பிடித்துக் கொண்டு விட்டார். அவன் அவரிடம் ஏதோ கெஞ்சுவது போலிருந்தது; ஆனால் அவன் பேசியது காதில் விழவில்லை. உரத்த குரலில் டிக்கட் கலெக்டர் அவனை அதட்டுவது மட்டும் தெளிவாகக் கேட்டது. ''முளைத்து மூன்று இலை விடவில்லை! அதற்குள் இவ்வளவு திருட்டுத்தனமா? ஹும்! யாரையடா ஏமாற்றப் பார்த்தாய், ராஸ்கல்! உன்னைப் போலீஸில் ஒப்படைத்துவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன்!''

பொனாயி ஒரே பாய்ச்சலில் அங்கே போய்ச் சேர்ந்தார். இடறென்று அந்தப் பையனைப் பிடித்திழுத்து அவன் கன்னத்தில் ஓர் அறை வைத்தார்; ஏதோ ஆவேசம் வந்தவர் போல் அவனுடைய முதுகிலும் நாலைந்து அடி கொடுத்தார். அப்போதும் அவருடைய கோபம் குறையவில்லை.

அவர் சீறினார்: ''அயோக்கியப் பயலே! என்ன திமிர் உனக்கு! நான் உனக்கு முன்னமே சொல்லியிருக்கிறேனல்லவா? 'எப்போதாவது டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்ய நேரிட்டால் டிக்கட் கலெக்டர் அவர்களிடம் போய் மரியாதையாய் உண்மையை ஒப்புக் கொண்டுவிடு; அவர் மிகவும் நல்லவர்; உன்னைப் பெருந்தன்மையுடன் மன்னித்துவிடுவார்' என்று? அதை விட்டுவிட்டு அவரை ஏமாற்றத் துணிந்தாயா, ராஸ்கல்! ரயில்வே இலாகாவில் வேலை பார்ப்பவர்கள் என்றால் இளக்கீரை என்று நினைத்துக் கொண்டாயோ? இவர்களுக்குத் தெரியாத விஷயமே இல்லை. ஆமாம்! ரயில்வேக்காரர்கள் எல்லாரும் நிறையப் படித்தவர்கள். பழுத்த அனுபவமுடையவர்கள்! அவர்கள் நாட்டையே ஆளக்கூடியவர்களாக்கும், தெரியுமா? அவர்களிலும் டிக்கட் கலெக்டர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள். பெரிய பெரிய கில்லாடிகளின் ஜம்பங்கூட அவர்களிடம் சாயாது. தெரிந்துகொள்!...''

பையனை இவ்வளவு அடித்த பிறகும் பொனாயி பாலின் கோபம் தணியவில்லை போலும். அவர் தம் இடது கையிலிருந்த சூட்கேஸைக் கீழே வைத்துவிட்டு அவனை இன்னும் அடிக்கத் தம் இரு கைகளையும் உயரத் தூக்கினார். அவருடைய ஆவேசத்தைக் காண எனக்குப் பயமாக இருந்தது. எலும்பும் தோலுமாக இருக்கும் அந்தச் சிறுவன் அந்த முரடரின் அடிகளுக்கு ஈடுகொடுக்க முடியுமா? அவரைத் தடுக்காவிட்டால் அவர் பையனைக் கொன்றே விடுவார் என்று எனக்குத் தோன்றியது. நான் அவரது கைகளை இறுகப் பிடித்துக் கொண்டேன். அவருடைய திடீர்த் தாக்குதலால் திகைத்துப் போய் இதுவரையில் மௌனமாக நின்றிருந்த மற்றவர்கள் அவரைச் சமாதானப்படுத்த முயன்றார்கள். டிக்கட் கலெக்டர் கூட, ''பாவம், ஸார்! அடித்தது போதும். விட்டுவிடுங்கள்! போனால் போகிறான்!...'' என்று சொல்லத் தொடங்கினார்.

''இல்லையில்லை! இன்று இவனைக் கொன்று விடத்தான் போகிறேன்! காலிப் பயல்! கழிசடை...! டிக்கெட்டில்லாமல் ரயிலில் வந்ததே பெரிய குற்றம்! அதற்கு மேல் உங்களைப் போன்ற பெரிய உத்தியோகஸ்தரின் கண்களில் மண்ணைத் தூவப் பார்த்தானே! என்ன போக்கிரித்தனம்! இந்த வயதிலேயே இப்படி இருப்பவனைச் சரியாகத் தண்டிக்காமல் விட்டுவிட்டால் பிற்காலத்தில் ஒரு பக்காத் திருட

னாகவோ, கொலைகாரனாகவோ ஆகிவிடுவான் இவன்!....'' என்று பொனாயி கத்தினார்.

அவரைச் சமாதானப்படுத்துவது பெரும் பிரச்னையாக ஆகிவிட்டது. நான் அவருடைய கைகளைப் பிடித்துக் கொண்டிருந்ததால், அவர் தம் கால்களால் அவனை உதைக்க முயற்சி செய்தார். இடையிடையே சிங்கம் போல் உறுமவும் செய்தார்.

கூட்டத்தில் ஒருவர் சொன்னார்: ''பையனும் ரொம்ப அசடுதான்! டேய் மண்டு, ஏண்டா இன்னும் இங்கேயே நின்று கொண்டிருக்கிறாய்? இந்த மனிதர் உன்மேல் கோபமாக இருக்கிறாரே, தெரியவில்லை? நீ அவரிடம் மறுபடியும் அகப்பட்டுக் கொண்டால் உன்னைக் கொன்றுபோட்டு விடுவார்! ஓடிப் பிழைத்துப் போ! இனிமேல் இந்த மாதிரித் தப்புத் தண்டாவுக்கெல்லாம் போகாதே!''

குறிப்பறிந்து சிறுவன் ஓடி விட்டான்.

சிறுவன் ஓடிப்போன பிறகுதான் ஒரு வழியாகப் பொனாயி பாபுவின் கோபம் அடங்கியது.

அவருடைய கோபத்தையும் ஆத்திரத்தையும் பார்க்க எனக்குச் சற்றுப் பயமாக இருந்தது. இருந்தாலும் எனக்கு அவரை விட்டு விட்டுப் போகவும் மனமில்லை. அந்த ஊரோ புதிது எனக்கு. மேலும் நான் சந்திக்க வேண்டியவர் பொனாயி பாபுவுக்குப் பழக்கமானவர். ஆகவே நான் அவருடன் கூடவே நடந்தேன்.

மௌனமாகக் கொஞ்ச தூரம் நடந்து சென்றோம். பிறகு அவர் என்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார்.

எனக்கு அப்போதுதான் அவருடன் பேசத் துணிவு ஏற்பட்டது. ''பையன் உங்களுக்குத் தெரிந்தவனா?'' என்று கேட்டேன்.

'' தெரிந்தவனுமில்லே, ஒன்றுமில்லே '' என்று பதில் சொன்னார் பொனாயி பாபு. ''அந்தப் பையனை இன்றுதான் முதல் முதலாகப் பார்த்தேன்.''

''அப்படியானால் உங்களுக்கு ஏன் அவன் மேல் இவ்வளவு கோபம் வந்தது?''

''கோபமுமில்லே, ஒன்றுமில்லே'' என்று சொல்லி அவர் சிரித்தார். ''பையன் பாவம்! நன்றாக ஆபத்தில் சிக்கிக் கொண்டு விட்டான். அவனைத் தப்புவித்தேன். அவ்வளவுதான்!''

நான் ஒன்றும் புரியாமல் விழிப்பதைப் பார்த்து அவரே விளக்கினார். ''அந்த டிக்கட் கலெக்டரை எனக்கு நன்றாகத் தெரியும். பெரிய லஞ்சப் பிசாசு! அரை ரூபாயாவது லஞ்சம் வாங்கிக் கொண்டுதான் பையனை விடுவான். பையனிடம் லஞ்சம் கொடுக்கப் பணமில்லாவிட்டால் ஜெயிலுக்கு அனுப்பி விடுவான். கொஞ்சம் கூட இரக்கம் கிடையாது அவனுக்கு! அவனிடமிருந்து பையனை விடுவிப்பதற்காகத்தான் நான் பையனைக் கோபித்துக்கொள்வது போல் பாவனை செய்து...''

''பாவனைதானா அது? நீங்கள் கொடுத்த அடியே ஒரு ரூபாய் பெறுமே!'' என்றேன் சற்றுக் குத்தலாக.

''பாபுஜி!''

திரும்பிப் பார்த்தோம். கூப்பிட்டவன் அந்தப் பையன்தான். அவன் பொனாயி பாபுவிடம் திரும்பிச் சொன்னான்: ''உங்கள் சூட்கேஸைக் கொடுங்கள் பாபுஜி! நான் தூக்கிக் கொண்டு வருகிறேன்.''

பொனாயி கேட்டார். ''உன்னை அடித்தேனே! நன்றாக அடிபட்டுவிட்டதா அப்பா?''

பையன் சிரித்துக் கொண்டே சொன்னான். ''எங்கே அடித்தீர்கள், பாபுஜி? சும்மா அடிப்பதாகப் போக்குக் காட்டினீர்கள். முதுகைத் தடவி விடுவது போல் இருந்தது. அவ்வளவு தான்!''

பொனாயி பாபு என்னிடம் சொன்னார்: ''கேட்டீர்களா சார்! இவன் யாரோ, நான் யாரோ! பார்க்கப் பாவமாயிருந்தது. இரக்கப்பட்டுத் தப்புவித்தேன்! நான் மட்டும் தலையிட்டிராவிட்டால் என்ன ஆகியிருக்கும் தெரியுமா?''...

பையன் அவருடைய சூட்கேஸை வாங்கிக் கொள்ளக் கையை நீட்டியபடியே நின்றான். அவருக்குத் தன்னாலான சேவையைச் செய்ய துடித்தான் அவன். அவனது கண்களில் நிறைந்து நின்றது நன்றியுணர்வு.



''இன்று அடியேனுக்கு அன்னதானம் செய்த பலனைத் தங்களுக்குக் கிட்டும்படி செய்யப் போகிறேன்! பில் பணம் இப்போதைக்கு இல்லே!''

''மேக்கப் அறைக்குள் தினமும் நீ பெருக்கும் போது மேக்கப் பவுடரை அப்பிக் கொள்வதை நிறுத்துகிறாயா? இல்லே, டைரக்டரிடம் சொல்லவா ?''





'' ஜலக் கஷ்டம்தான் தீர்ந்து விட்டதே! இனிமேல் உன்னை ஜலஜா - என்று கூப்பிடலாமல்லவா? ''

ஓராண்டுச் சாதனை

ஒரு பத்து லட்சம் டன்கள்!

- முனைப்பான முயற்சியினால் உற்பத்தி பெருகியது;
- முத்தன்ன அரிசிக்குக் கட்டுப்பாடு நீங்கியது;
- கடந்த வறட்சி ஆண்டு உற்பத்தி 53.5 லட்சம் டன்;
- நடப்பு முயற்சி ஆண்டு உற்பத்தி 63 லட்சம் டன்;
- கட்டுப்பாடு பிரச்னை இங்கு சித்தாந்தப் பிரச்னை அல்ல;
- மக்கள் நலன் கருதும் நிர்வாகப் பிரச்னை;
- ஏழை மக்களுக்குக் குறைந்த விலையில் தட்டுப்பாடின்றி அரிசி கிடைத்திட வேண்டும். அதுவே குறிக்கோள்.

வளரும் நலன்கள்

பட்டா இரு லட்சம் ஏக்கர் வழங்கப் பெற்றது;

சிற்றூருக்கும் சென்று மனுநீதி வழங்கும் முறை;

எழுபத்தி இரண்டுக்குள் எங்கணும் மின் இணைப்பு;
குடி தண்ணீர்.

ரூ. 67 லட்சம் அளவுக்குப் பணி புரிந்த சிரணி;

நன்மைகள் வளர, நலமெல்லாம் பெருக!

அரசின் முயற்சிகளில் அனைவரும் உதவுவீர்!

(தமிழ்நாடு அரசாங்கச் செய்தித்துறை வெளியீடு)



கல்கி 11-1-70 தேதியிட்ட இதழில், 'தபால் கவி' என்ற தலைப்பில் வந்துள்ள கட்டுரையில் ஆண்டாள் பொம்மை செய்தவர் ஸ்ரீமதி ஜானகி சீனுவாசன் எனக் குறிப்பிட்டிருப்பது தவறு. அவர் பெயர் ஜானகி சீதாராமன் என்றிருக்க வேண்டும்.

சென்னை-3
8-1-70 ஆரா. சீதாராமன்

கல்லூரி பி. ஏ. இறுதி ஆண்டில் பயிலும் ஏழை மாணவர்களுள் ஒருவன் நான். தாழ்ந்த இனத்தவர் என்று பலருக்கு உபகாரச் சம்பளங்கள் அரசால் கொடுக்கப் படுகிறது. இவர்களில் பலர் செல்வந்தர்களது பிள்ளைகளாக இருந்தும் சலுகைகள் பல பெற்று இலவசமாகப் பயிலுகிறார்கள். ஆனால் என் போன்ற சிலருக்கு உயர்ந்த இனத்தில் பிறந்தோம் என்பதற்காக இச்சலுகைகள் கிடைக்காது போகின்றன. கடன் வாங்கியும், கஷ்டப்பட்டும் பயிலும் என்போன்ற மாணவர்கள் எவ்வித சலுகையும் பெறுவதில்லை. ஜாதியினை அடிப்படையாகக் கொண்டு சலுகை அளிப்பதைவிட மாணவனின் திறமையையும், பெற்றோரின் வருவாயையும் அடிப்படையாகக் கொண்டு சலுகைகள் அளித்தல் நலம்.

ஒருபுறம் ஜாதி மத இன வேற்றுமைகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று சொல்லிக் கொண்டே மற்றொரு புறம் ஜாதி அடிப்படையில் சலுகைகளை நீடித்துக் கொண்டு போகக் கூடாது. இச்செயல் தேச நலனுக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் ஏற்றதல்ல.

மார்த்தாண்டம்,
5-1-70
அ. இராசேந்திரன்.

தேர்ந்தெடுக்கப் பட்ட மேயர் சென்னை மக்களுக்கு நன்மை மிக்க திட்டத்தைச் சிந்தித்துத் தெளிந்து செயல் அளவில் அமுல் படுத்த நிச்சயிக்கிறார். ஆனால் இதில் ஓரளவு நனவாகும் முன்பே மேயரின் பதவி காலம் முடிந்து விடுகிறது. பிறகு புதிய மேயர் தேர்வு, புதிய திட்டம் முதலியன தொடரும். ஒருவர் திட்டமாவது கடைசி வரையில் நிறைவேற வாய்ப்பே இல்லாமல் போகிறது.

இதற்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட வருஷத்தில் ஒரு மேயரையும் அதற்கடுத்த வருஷத்தில் மேயராகத் தேர்ந்தெடுக்க வேண்டிய இனத்தவரில் ஒருவரை டெபுடி மேயராகவும் தேர்ந்தெடுப்பது நலம். இவ்விருவரும் நிச்சயிக்கும் திட்டங்களில் முதல் ஒரு வருடத்தில் நிறைவு பெறாமல் எஞ்சி நிற்பவற்றை அடுத்த மேயராக வரும் (இன்றைய டெபுடி மேயர்) தொடர்ந்து ஏற்றுச் செயல்படுத்துவார். அன்று புதிதாக ஒரு டெபுடி மேயரைத் தேர்ந்தெடுக்கும் போது ஒருசில புதிய திட்டங்களை (பழைய டெபுடி — ஆனால் இன்றைய) மேயர் மேற்கொள்வதென ஏற்பார். அதில் பாதியாக நிற்பதை இரண்டாவது டெபுடி மேயர் மேயராகும் போது தொடர்ந்து செயல்பட்டு முடிப்பார்.

இவ்வித ஏற்பாட்டினால் ஒரு வகையில் திட்டமிட்டுச் செயல் புரிவதில் ஓரளவு ஒருமைப்பாடும், திட்டங்களை நனவாக்க இரண்டாண்டுகள் அவகாசமும் ஏற்படுகிற தல்லவா?

சென்னை-34
18-1-70 ஸ்ரீஹரி

பெட்டிக்குள் உள்ள கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது.

நான் 6-1-70 அன்று செங்கல்பட்டுக்கு ஓர் அவசர காரியமாகச் சென்றேன். உடனே திரும்ப வேண்டியிருந்தது. செங்கல்பட்டு பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தேன். நேரம் பிற்பகல் 2-45 மணி. தமிழ்நாடு அரசு போக்குவரத்தில் ''விரைவு வண்டி'' ஒன்று (சேலத்திலிருந்து ஊத்தங்கரை, சாத்தனூர் அணைக் கட்டு வழியாய்ச் சென்னை செல்லும் பஸ்) வந்தது. இடமும் இருந்தது. ''விரைவு வண்டி''யாயிற்றே, விரைவில் சென்னை வந்துவிடலாம் என எண்ணி அதில் ஏறினேன். ஆனால் அந்தோ! என் எண்ணம் தவறிவிட்டது! காட்டுப்பாக்கம் அருகே பஸ் நடு வழியில் நின்று விட்டது. டிரைவரைக் காரணம் கேட்டேன். அவர் அளவுகோலை எடுத்து 'டீசல்' டாங்கில் அளவு பார்த்து விட்டு ''டீசல் தீர்ந்துவிட்டது'' என்று கூறினார். இரு தினங்களுக்கு முன்பு இதே போல் இதே காரணத்தினால் இதே பஸ் (பஸ் ரூட் எக்ஸ்-76 எம். எஸ் வி. 6429) பல்லாவரத்தில் நின்று போனதாகக் கூறினார்.

தேசிய மயத்தின் விளைவு இது தானோ? பஸ்ஸை எடுப்பதற்கு முன் 'டிப்போ'வில் பணிபுரிபவர்கள் டீசல் இருக்கிறதா எனக் கவனிப்பதில்லையா? ''பராமரிப்பு''ப் பிரிவு என்ன செய்து கொண்டிருக்கிறது?

சென்னை-33
6-1-70 எம். ஆர். ராஜன், டி. எம். ஏ.

சென்னை நகரில் ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் எல்லா டாக்டர்களும் தங்கள் கன்ஸல்டிங்ரூமை மூடி விடுகிறார்கள். ரொம்ப அவசரக் கேஸ் என்றாலும் மருந்துக்குக்கூட ஒரு டாக்டர் கிடைப்பதில்லை. திங்கட்கிழமை காலை வரையில் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. ஏன் ஒவ்வொரு வட்டாரத்தில் உள்ள டாக்டர்களும் ஒன்று கூடி யோசித்து ஒவ்வொருவரும் வெவ்வேறு நாளை விடுமுறை தினமாக வைத்துக் கொள்ளக் கூடாது?


சென்னை — 34
15-1-70 ஆர். கோ


மனவெழுச்சி
உள்ளக்கிளர்ச்சி
அதனை அளிப்பது
T.S.R
டி.எஸ்.ஆர்
அரைக்கீரை
விதைத் தைலம்
மற்றும் சந்தனாதித் தைலம்,
பொன்னாங்கண்ணி தைலம்.
டி. எஸ். ஆர். & கோ.,
கும்பகோணம் &
மதராஸ்-16.

பூங்கா நகரம்
60 ஆண்டுகள் முன்பே திட்டமிட்டு உருவானது

ஜாம்ஷெட்பூர்: வண்ணமலர்ச்சோலைகள் மிகுந்தது. எஃகு நகரமென அழைக்கப்படும் ஜாம்ஷெட்பூர். அது உண்மை! இந்தியாவின் எழில் மிகு நகரங்களில் அதுவும் ஒன்று. மேனாட்டில் திட்டமிட்ட நகர்நிர்மாணங்கள் சர்வசாதாரணம். ஆயினும், அதனினும் அறுபது ஆண்டுகளுக்கு முன்பே ஜாம்ஷெட்பூர் திட்டமிட்டு உருவானதென்பது வியப்பேயாகும்.






சோனாரி— திருத்தியமைக்கப்பட்ட குடியிருப்பு. பல கட்டங்களில் திட்டமிட்டு, 70 குடும்பங்கள், நல்ல வெளிச்சமுள்ள சாலைகள், போதுமான நல்லநீர் வசதிகளுடன் சிறந்த குடியிருப்புகளாக மாற்றியமைக்க டாடா ஸ்டீல் உதவி செய்துள்ளது.



டாடா பெரிய மருத்துவ மனை: வசதிகளுடன் 600 படுக்கைகள் பெற்றது இந்த மருத்துவமனை. தவிர 82 படுக்கைகளுடன் ஒரு காசநோய் மருத்துவ மனையும் அதில் ஒரு குழந்தைகள் வார்டும் அமைக்க டாடா ஸ்டீல் உதவியுள்ளது.



ஜூபிலி பூங்கா: "மனிதர்களுக்கும், அவர்தம் உணர்ச்சிகளுக்குமான அடிப்படைத்தேவையை, எஃகு மற்றும் இரும்பைக்காட்டிலும், மலர்களும் பூங்காக்களும், மரங்களும் பூர்த்தி செய்கின்றன என்று நான் கருதுகிறேன். அந்த சிறந்த சிந்தனையின் தோற்றமே இப்பூங்கா."

—ஜவாஹர்லால் நேரு

எஃகும், மக்களுமே எங்கள் பலம்

டாடா ஸ்டீல்

TN-1409

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

Standardise on

PERKINS 6.354V
VEHICLE DIESEL ENGINE

the most reliable and inexpensive power unit

Why is one engine preferred? For clear exhaust, fast travelling with maximum load, smoothness, manoeuvrability and ease of operation.

Perkins is the ideally suited truck diesel engine because it ensures these regular features with other plus features. For example:—

Direct injection combustion system with distributor type fuel injection pump. Automatic advance and retard of the injection system and hydraulic governing ensure exceptionally low fuel consumption under all operating conditions.

Timing drive through helical gears.

Low weight per unit power and compactness mean extra payload.


All components that require routine service are easily accessible.


12 volt electrical equipment ensures positive and instant starting under normal conditions.

AND SIMPSONS ENSURE GENUINE REPLACEMENT PARTS ARE ALWAYS AVAILABLE READILY

Simpson & Co. Ltd

202/203, Mount Road, Madras-2.
Branches at: Ootacamund, Bangalore, Tiruchirapalli, Secunderabad.





S. 50